

KALKI-28-4-85
ரூ-1.50
கல்கி



அறிமுகப்படுத்துகிறோம்!

புதிய ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடர்

அது வேர்க்குருவிற்கு விரைவாக நிவாரணமளிப்பது மட்டுமல்ல, உண்மையிலேயே அதைத் தடுத்திட உதவுகிறது.



நீங்கள் வேர்க்குருவைத் தடுக்க முடியும்போது அது தாக்கும்வரை ஏன் காத்திருக்க வேண்டும்?

இப்போது, உங்கள் வேர்க்குரு பிரச்சினையைக் கட்டுப்படுத்த இன்னும் மிகத் தீவிரமான வழி— புதிய ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடர். அது வேர்க்குருவிற்கு விரைவாக நிவாரண மளிப்பது மட்டுமல்ல உண்மையிலேயே அதை தடுத்திட உதவுகிறது.

புதிய ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடர் ஏன் மிகவும் தீவிரமானது?

உங்களுக்கு அதிகமாக வியர்த்து, அந்த வியர்வை உங்கள் சருமத்தில் அதிக நேரம் தங்கியிருக்கும்போது, வேர்க்குருவின் தாக்குதலுக்கு நீங்கள் ஆளாகிறீர்கள். அதனாலேதான் புதிய ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடர் மிகவும் தீவிரமானதாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. வியர்வையை நன்றாகவும் விரைவாகவும் உறிஞ்சும் வண்ணம் விசேஷமாகத் தயாரிக்கப்பட்டுள்ளது அது— உங்கள் சருமத்தில் பாக்டீரியாக்கள் பெருகுவதைத் தடுக்கிறது— ஆகவே வேர்க்குரு இல்லை. எரிச்சல் இல்லை. நமைச்சல் இல்லை. அப்பாடா! என்ன நிவாரணம்! அதற்குமேல் புதிய ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடர், இப்போது மகிழ்ச்சிதரும் புதிய நறுமணமும்* கொண்டுள்ளது.

வரும் கோடையில் வேர்க்குரு தாக்கும்வரை காத்திருக்காதீர்கள். விரைந்து வாங்கிடுங்கள் ஒரு பேக் புதிய ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடர். வேர்க்குருவை நீங்கள் தடுக்க முடியும்போது, வேர்க்குருவால் ஏன் சிரமப்பட வேண்டும்?

விசேடமாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. இவ்விதம் செயல்படுகிறது.



வியர்வையை நன்றாகவும் விரைவாகவும் உறிஞ்சுகிறது.



சருமத்தில் பாக்டீரியாக்கள் பெருகுவதைத் தடுப்பதற்கான விசேட மருந்துக் கலவை கொண்டது.



சருமத்தை குளிர்ச்சியாகவும் புத்தம் புதுமையாகவும் வைத்துக் கொள்கிறது. அதன் இதமான செயல்.

*சந்தன மணத்திலும் கிடைக்கிறது.

Johnson & Johnson

OBM-4181 TAM


கல்கி
விடுமுறை மலர்
1985
குறுநாவல்கள், சிறுகதைகள், சினிமா, பயணக் கட்டுரைகள், அரசியல், வண்ணப் புகைப்படங்கள், நகைச்சுவைக் குவியல்கள், கவிதைகள், பாப்பா மலர் மற்றும் ரசமான பல சிறப்பு அம்சங்கள்.........!
நடன் ஏஜெண்டிடம் பதிவு செய்க.
மே முதல் வாரம் எங்கும் கிடைக்கும்
320 பக்கங்கள் விலை ரூ 10.
பதிவுத் தபால் செலவு ரூ 3.50.

ஆய்வு

முதலில் ஒரு ஜோக்:

பேராசிரியரை நிருபர் பேட்டி காண வந்தார்.

நிருபர்: பறக்கும் தட்டுக்களைப் பற்றி உங்கள் அனுபவத்தைக் கூற முடியுமா?

பேராசிரியருக்குக்கோபம்வந்துவிட்டது: யோவ்! எங்க குடும்ப சமாசாரம் எல்லாம் எதுக்கைய்யா கேக்கறே? வேறே வேலை இல்லே...?

* * * * *

சில வாரங்களாக தொலைக்காட்சியில் 'புராஜக்ட் யு. எஃப். ஓ.' **(Un identified Flying Object)** என்று ஒரு தொடர் ஒளிபரப்பாகி வருகிறது. உலகத்தின் பல்வேறு பகுதிகளில் பலரும் பார்த்ததாய்ச் சொல்லப்படும் தகவல்களை அமெரிக்க 'நாஸா' ஸ்தாபனம் தொகுத்து ஓர் அறிக்கை தந்திருக்கிறது. இந்த அறிக்கையின் அடிப்படையில் மேற்படி டீ. வி. படம் தயாராகியுள்ளது.

பறக்கும் தட்டைப் பார்த்திருக்கிறீர்களா?

இந்த டீ.வி. படம் பார்க்கிறவர்களாகட்டும் ஏற்கெனவே, 'தக்ளோஸ் என்கௌண்டர்ஸ் ஆஃப் த தர்ட் கைண்ட்' மாதிரியான திரைப்படங்களைப் பார்த்தவர்களாகட்டும் கொஞ்சம் மனம் தடுமாறவே செய்வார்கள். ஆடிக்காற்றில் பறந்து வருகிற எருக்கம் பூ கூட 'இதோ பறக்கும் தட்டு' என்று மிரட்டக்கூடும். ஆனாலும் நிஜமோ, பொய்யோ, ரொம்பவும் சுவாரஸ்யமான விஷயம் இந்தப் பறக்கும் தட்டுக்கள்.

சினிமாப் படத் தயாரிப்பில் கலை நுணுக்கங்களைக் குவித்துப் படம் எடுப்பதில் கைதேர்ந்த ஹாலிவுட்காரர்கள், பறக்கும் தட்டு சமாசாரங்களை வைத்து நிறையவே பணம் பண்ணியிருக்கிறார்கள். தமிழில் அப்படியெல்லாம் யாரும் துணியவும் மாட்டார்கள் முதல் போடவும் ஆளில்லை.

தப்பித் தவறி ஒரு படம். இன்றைய தமிழக முதல்வரைக் கதாநாயகனைப் போட்டு 'கலையரசி' என்று ஒரு படம் முப்பதாண்டுகளுக்கு முன் வந்தது... பறக்கும் தட்டு, அதிலேயே சண்டை, கதாநாயகன் கடத்தல் என்று வரும். கையைச் சுட்டுக் கொண்ட படம்தான் என்றாலும், இந்த யு. எஃப். ஓ. வகையில் தமிழில் வந்த படம் அது ஒன்றுதான்.

பறக்கும் தட்டுக்களைப் 'பார்த்தது' பற்றிய தகவல்கள் அமெரிக்காவில்தான் அதிகம். சோவியத் யூனியன் உட்பட 140 நாடுகளின் யு. எஃப். ஓ. தகவல்கள் அமெரிக்காவில் தொகுத்து வைக்கப்பட்டிருக்கின்றன. 1947–இல் தான் இந்தப் பறக்கும் தட்டுக்களைப் பார்க்கிற விஷயம் தீவிரமானது. அது **முதல் 1981 வரை சுமார் அறுபதாயிரம் தகவல்கள் பதிவாகியிருக்கின்றன.**

பறக்கும் தட்டு என்றும் **Flying Saucers** என்றும் அழைக்கப்படுகிற இந்தப் புதிர் விவகாரத்துக்கு விஞ்ஞானிகள் வட்டாரத்தில் வழங்கப்படுகிற பெயர் 'யூ. எஃப். ஓ.'



* ஏதோ ஒரு அசாதாரண நிகழ்ச்சி நடந்து கொண்டிருப்பதை மனிதகுலம் மறந்துவிடக் கூடாது.



* படம் பிடிக்கப்பட்ட "பறக்கும் தட்டு."

அடையாளம் தெரியாத பறக்கும் பொருள்கள் என்று சொல்கிறார்கள்.

இப்படிக் காணப்படுகிறவை, சில குறிப்பிட்ட காலங்களில் அதிகமாகக் கணக்கில் வருகின்றன. 1957—ஆம் ஆண்டில் மட்டும் 1178 தகவல்கள் பதிவாயின. இவற்றில் 701 தகவல்கள் அக்டோபர் — டிசம்பர் இடையில் தெரிந்தன. என்ன காரணம்?

அக்டோபர் '57—இல்தான் பூமியைச் சுற்றிய முதல் சோவியத் செயற்கைக் கோள் **'ஸ்புட்னிக்—1' பறக்கவிடப்பட்டது. இதைப்** பற்றிப் பரபரப்பாக வெளியான பல செய்திகளே, இந்த யு. எஃப். ஓ. காட்சிகளுக்குத் தூண்டுதலாகியது என்கிறது 'என்ஸைக்ளோபீடியா அமெரிக்கானா.'

பறக்கும் தட்டு சமாசாரங்களை மூன்று வகையாகப் பிரிக்கிறார்கள்.

வெறுமனே வானத்தில் அல்லது பூமியைத் தொட்டுக் கொண்டு ஓடுகிற ஒளி வட்டம், முதல் ரகம். **First Kind** என்கிறார்கள்.

தரையில் பள்ளம் பறிக்கும், அல்லது மாக்கிளையை முறித்துப் போடும். இது இரண்டாவது ரகம். **Second Kind.**

பறக்கும் தட்டில் உள்ள "மனிதர்கள் நம்மோடு தொடர்பு கொள்வார்கள். அல்லது நாம் அவர்களைத் தொட்டுப் பார்ப்போம். என்கிற மாதிரி க்ளோஸ் என்கவுண்டர்ஸ் படத்தில் வருவது, மூன்றாவது வகை. இதைத்தான் **Third Kind** என்கிறார்கள்.

பறக்கும் தட்டு அல்லது அதன் ஒளி பட்டுக் காயங்கள் ஏற்படுவது, மோட்டார் கார்களின் இயந்திரங்கள் நின்று போவது, மின்சாரம் தடைப்படுவது என்று பல வகையான தகவல்கள் சேகரிக்கப்பட்டிருக்கின்றன.

பறக்கும் தட்டுக்கள் எல்லாமே பிரகாசமான வெளிச்ச வட்டங்கள், உருளும் நெருப்புப் பந்துகள் — இப்படித்தான் சொல்லப்பட்டிருக்கின்றன.

'எல்லாமே நம்ம நாட்டிலிருந்து போனது' என்கிற நம்பிக்கை பறக்கும் தட்டு விஷயத்திலும் உண்டு. ஆனால் கொஞ்சம் ஆழமாகவே யோசிக்கப் பண்ணுகிற விஷயம்.

புறநானூற்றில் ஒரு பாடல் வரி. 'வலவன் ஏவா வானூர்தி எய்துப' என்று வரும். வலவன் என்ற சொல்லுக்கு ஓட்டுகிறவர் என்று பொருள். இன்றைக்கு **Unmanned Space Craft** என்கிறோமே, இதற்குச் சரியான தமிழ்ச்சொல் இது. சிலப்பதிகாரத்திலும் கோவலன் இந்திரனுடன் வந்து கண்ணகியைப் பலரும் பார்த்துக் கொண்டிருக்கும்போதே அழைத்துச் சென்றான் என்று வருகிறது. இன்னும் கொஞ்சம் 'டெக்னிக்' எல்லாம் சேர்த்து வலப்புறம் திருப்ப,



* பறக்கும் தட்டைப் "பார்த்த" ஜிம்மிகார்ட்டர்.

இடப்புறம் திருப்ப, மேலே உயர்த்து, கீழ் இறக்கு என்றெல்லாம் சீவக சிந்தாமணியில் சச்சந்தன் விசையைச் சொல்கிறான். விஞ்சையர் என்று ஓர் இனமே விண்ணுலகு சம்பந்தப்பட்ட செய்திகளைச் சொல்லும் போது வருகிறது. நம்முடைய பூமிக்கும் வித்யாதர உலகத்துக்கும் இடையே போர்கள் நிகழ்ந்த விவரங்களைப் பெருங்கதை, சூளாமணி போன்ற இலக்கியங்கள் சொல்கின்

றன. இது 'Star War' அல்லாமல் வேறென்ன என்று கேட்கிறார் நந்தனம் கல்லூரிப் பேராசிரியர் கி. நாராயணன். இவருடைய கருத்துப்படி நாரதர் என்கிற புராண பாத்திரம் கூடப் புறவெளி மனிதராக இருக்கலாம்.

'பூ சுற்றுகிறது' என்று எடுத்துக் கொண்டோமானால் கூட இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் இப்படியெல்லாம் கற்பனை பண்ணியிருந்தால் அதுவே பெரிய விஷயம்தான்.

இயேசுநாதரே ஒரு காஸ்மநாட்தான் என்றொரு வாதம் சோவியத் அறிஞர் ஒருவரால் எழுப்பப்பட்டிருக்கிறது. வி. ஸெயிட்ஸெவ் என்பவர் இஸ்வெஸ்தியா இதழில் எழுதிய கட்டுரையொன்றில் இப்படிக் கூறியிருக்கிறார்:

''பெத்லேகம் நகரில் தெரிந்த நட்சத்திரம் உண்மையில் ஒரு விண்கலம்தான். இயேசுநாதர் வேறு கிரகத்திலிருந்து பூமிக்கு வந்தவர்தான். தான் மேலுலகிலிருந்து வந்தவன் என்றே அவர் தன்னுடைய சீடர்களிடம் கூறியிருக்கிறார். பூமியில் என்னென்ன சட்டங்கள் நடைமுறையிலிருந்தன என்பது பற்றியெல்லாம் தெரியாததால் கொடுமைகளை அனுபவித்து அளவற்ற பொறுமையுடனும் சகிப்புத் தன்மையுடனும் அவர் இருந்தார். மிக உயர்ந்த நாகரிகமடைந்த இனத்தின் பிரதிநிதி அவர்.''

ஆனாலும் இந்தக் கருத்தை 'இஸ்வெஸ்தியாவே கிண்டல் பண்ணியது: 'இப்படிப்பட்ட தத்துவங்கள் மேற்கத்திய அறிஞர்களுக்குச் சரியென்று படலாம். ஆனால் எப்படி ஒரு சோவியத் அறிஞர் இவற்றையெல்லாம் ஒப்புக் கொள்ள முடியும்?''

பறக்கும் தட்டுக்களைப் பார்த்தேன் என்று சொல்கிற எல்லோருமே கப்ஸாக்கள் இல்லை. மிகவும் பொறுப்பு வாய்ந்த விஞ்ஞானிகள், இராணுவ அதிகாரிகள் கூட உண்டு.

1969—இல் ஜார்ஜியா மாநிலத்து லீயரியில் பறக்கும் தட்டைப் பார்த்த ஒருவர் பின்னால் அமெரிக்க ஜனாதிபதியாக உயர்ந்த ஜிம்மி கார்ட்டர். வானத்தில் துல்லியமான வட்டப் பொருள் ஒன்று பார்வையாளர்களை நோக்கி வந்து, கொஞ்சம் கொஞ்சமாகப் பின்னேறிக் கடைசியில் திடீரென்று மறைந்து போன இந்த நிகழ்ச்சியைப் பத்து நிமிடங்கள் அவர்கள் பார்த்திருக்கிறார்கள். 'சந்திரனை விடச் சற்றே சிறிதான இந்தப் பொருள் நீலம் சிவப்பு என்று மாறி மாறி நிறம் காட்டியது' என்றார் கார்ட்டர்.

ஆனால் கார்ட்டரின் கூற்றை விஞ்ஞானிகள் ஏற்கவில்லை. புதன் கிரகம்தான் கார்ட்டர் கண்களை அப்படி ஏமாற்றிவிட்டது. தொடுவானுக்கு மேலே பிரகாசமாக அது உதயமான போது கார்ட்டர் பார்த்து மயங்கியிருக்கிறார் என்று சொல்லி விட்டார்கள்.

பெரும்பாலான பறக்கும் தட்டு சமாசாரங்கள் கடைசியில் இப்படியே போய் முடிகின்றன.

ஒருவன் பல முறை தோல்வியைச் சந்திக்கலாம். ஆனால் அவன் என்று தன் தோல்விக்குப் பிறரை காரணம் காட்டுகிறானோ அன்றே அவன் உண்மையில் தோற்றுப் போகிறான்.

—பப்லோ நருடா.

உங்கள்
குடும்பத்தின்
திட்டமிட்ட பரிபூரண உணவு
இப்போது
ஃபேமிலி பேக்கிலே

சாக்கலேட் சுவை காம்ப்ளான் இப்போது 1 கிலோ பேக்கிலே!

இரண்டு 500 கிராம் பேக்குக்குப் பதிலாக இப்போது வாங்குங்கள் புதிய 1 கிலோ காம்ப்ளான் பேக், 4 ரூபாய் மிச்சமாக்கிடுங்கள். அத்துடன், உங்களுக்குக் கிடைக்கிறது கவர்ச்சிகரமான ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் டம்ளர்-இலவசமாக!

காம்ப்ளான் ஒன்றுதான் உங்கள் குடும்பத்தின் ஒவ்வொருவருக்கும் அன்றாடம் தேவைப்படும் 23 மூலாதார ஊட்டச்சத்துக்களைக் கொண்டுள்ளது— கார்போஹைட்ரேட்டுகள், கொழுப்புச் சத்து, வைட்டமின்கள், தாதுக்கள், மற்றும் மிகச்சிறந்த புரதமான பால்புரதம் (20%)

உங்கள் குடும்பத்தினருக்கு அன்றாடம் அளியுங்கள் இருவேளை காம்ப்ளான்.

இலவசம்!
பெற்றிடுவீர்
கவர்ச்சிகரமான
ஸ்டெயின்லெஸ்
ஸ்டீல் டம்ளர்
1கிலோ
பேக்குடன்





காம்ப்ளான்® – திட்டமிட்ட பரிபூரண உணவு

GK&E.B85.GLC.11.Tm-R

வித்தியாசமான அமைப்புள்ள ஆகாய விமானம், வழக்கத்துக்கு மாறான பருவ நிலையில் தோன்றும் வெளிச்சம், உயரத்தில் பறக்கும் பலூன்கள், செயற்கைக் கோள்கள், பறவைக் கூட்டம், ஸர்ச் லைட் பிரதிபலிப்பு, தாழ்வான மேகங்களின் மீது வீசுகிற ஹெட்லைட்டுகள், விண் கற்கள், ஏராளமான விஷயங்கள் பறக்கும் தட்டுக்களாகக் கருதப்பட்டிருக்கின்றன. விமானம் ஒன்றில் காக்பிட் ஜன்னலில் இரண்டு கண்ணாடித் தகடுகளுக்கு இடையே அகப்பட்டுக் கொண்ட ஒரு பெரிய மின்மினிப் பூச்சிகூட இப்படி ஏமாற்றிய கதை உண்டு.

எல்லாவற்றையும் கூட்டிக் கழித்துப் பார்த்தால் பத்து சதவீதக் காட்சிகளுக்காவது புதிர் விடுபடாமலே இருக்கிறது. இந்தத் துறையில் மிகவும் ஈடுபாடு கொண்ட விஞ்ஞானியான டாக்டர் ஜே. ஆலன் ஹைனக் என்பவர் சொல்கிறார்: "பறக்கும் தட்டுக்களைப் பற்றிய தகவல்கள் தொழில் முறையில் ஆராயப்படவே இல்லை. தகவல் தருகிறவர்கள் நிறையப் பேர் இருக்கிறார்கள். ஆனாலும் சரியான தகவல்கள் இல்லை. அப்படிச் சரியான தகவல்களைப் பெற விசுவாசமான முயற்சி எதுவும் எடுக்கப்படவும் இல்லை."

அமெரிக்கா போன்ற நாடுகளிலேயே இதுபோன்ற இனங்களில் போதுமான அளவு செலவு செய்ய முடிவதில்லை. இதைப் பற்றியும் ஹைனக் கூறுகிறார்: "பணப் பற்றாக் குறை என்று சொல்லி நாம் காலம் கடத்தியிருந்தால் ஒருநாளும் சந்திரனுக்குப் போயிருக்கமாட்டோம். எனவே யூ.எஃப்.ஓ. ஆய்வுக்கு நிதி ஒதுக்க வேண்டியது அவசியம்."

தேசியப் பாதுகாப்பு அமைப்பு (NSA) 1979—இல் யு.எஃப்.ஓ. பற்றி ஓர் ஆராய்ச்சி அறிக்கையை வெளியிட்டது. அதன்படி நான்கு முடிவுகள் சொல்லப்பட்டிருக்கின்றன.

1. பறக்கும் தட்டுக்களைப் பற்றி உலகம் முழுவதுமிருந்து வருகிற தகவல்கள் கற்பனை என்று சொன்னால், மனிதர்களின் மனநிலையில் பயங்கரமான முறையில் கோளாறுகள் ஏற்பட்டு வருகிறது என்று கருத வேண்டும்.
2. இவை மயக்கத் தோற்றங்கள் என்றால் பழுதையிலிருந்து பாம்பைக் கண்டு கொள்ள முடியாத அளவுக்கு அவனுடைய சிந்தனைத் திறன் மழுங்கிவிட்டது என்று கருத வேண்டும்.
3. பூமியில் உள்ளவர்களே ரகசியமாகத் தயாரிக்கிற ஆயுதங்கள் இவை என்றால் பாதுகாப்பு அபாயம் இருக்கிறது.
4. நிஜமாகவே இவை வேறு உலகங்களிலிருந்து வருகிறவை என்றால், 'அவர்'களுடைய தொழில் நுட்பத் திறன் நம்மை விடப் பல மடங்கு உயர்வானது. 'அவர்'கள் நம்முடைய பூமியை வெற்றி கொள்ள வருகிறார்கள் என்பதை ஒப்புக் கொள்ள வேண்டும்.

மிகப் பெரும் அளவில் இந்தப் பறக்கும் தட்டு விவகாரங்களில் கற்பனை, மாயத் தோற்றம் எல்லாம் இருந்தாலும், ஏதோ ஒரு அசாதாரணமான நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கிறது என்பதை மனிதகுலம் ஒரு போதும் மறந்து விடலாகாது.

தகவல் தொகுப்பு; கட்டுரை வடிவம்:

சுப்ர. பாலன்.

நாகை ஏ. டி. எம். மகளிர் கல்லூரியில் முடிவு ஆண்டு பரீக்ஷை எழுதும் பி. ஏ.; பி. எஸ். ஸி.; பி. காம் மாணவிகள் "திருவிளக்குபூஜை" முறையோடு செய்து பரீக்ஷையில் வெற்றி பெற பிரார்த்தனை நடத்தினர்கள்.

— பட்டம்மாள் அனந்தரார்மன்.






ஏப்ரல் முதல் தேதி என் நண்பன் ஒருவனிடமிருந்து எனக்கு வந்த கடிதத்தில் ஒரு பக்கத்தில், "உன்னை ஏப்ரல் முட்டாள் ஆக்குவது மிகவும் கடினம். ஏனென்றால்..." என்றும் மறு பக்கத்தில், "ஏற்கனவே முட்டாளாயிருப்பவர்களை மறுபடியும் முட்டாளாக்க முடியாதுதானே" என்றும் இருந்தது!

— அ. சுந்தரம்.

கொடுக்கும் பொருளைவிடக் கொடுக்கும் எண்ணமே கொடுப்பவனின் பண்பைக் காட்டுகிறது.

—லெஸ்ஸிங்.

சிக்கனச் செலவுள்ள திருமண ஆலோசகராம் நாங்கள்
இக்கணம் தருகிறோம் சம்பந்தம் விரிவான அளிவிலும்




ஒப்பற்ற பாணியிலே உன்னதமாய்
செயல்படுகிறது டைம்ஸ் ஆஃப் இந்தியா
அது திருமணத் தரகராய் செயல்படும்
போது—சொற்ப செலவிலே பற்பல
ஆயிரங்களிலும் உங்கள் விளம்பரத்தை
பார்த்திடுவார்—திருமணம் நாடும்
அன்பர்கள். உங்களுக்கு வந்திடும்
பதில்களைப் பார்த்து வகைப்படுத்தலாம்.
[illegible] தேர்ந்தெடுக்
கலாம் [illegible] திருமணம் முடிக்கலாம்.

குறைந்த செலவிலே இவ்வளவு செய்திடும்
திருமணத் தரகர் ஒருவர் கிடைப்பாரானால்
நாங்கள் தேவை இல்லை உங்களுக்கு.
ஆனால், அத்துடன் பரந்த அளவில் தேர்ந்
தெடுக்க விரும்பினால், விளம்பரம்
செய்திடுங்கள் டைம்ஸ் ஆஃப் இந்தியாவில்.

THE TIMES OF INDIA

பி. எஸ். கிருஷ்ணன்



இனிய நண்பன் கிருஷ்ணனுக்கு சமூகப் பணி என்றால் வெண்ணெய் விழுங்குவது மாதிரி! வடக்கு பம்பாயில் ஒரு நிறுவனத்தில் வேலை செய்து கொண்டிருந்த போதிலும் தான் வசிக்கு மிடத்தைச் சுற்றிச் சாக்கடை தேங்கினாலோ, குப்பை குவிந்தாலோ யாரையும் எதிர்பாராமல் தானே சுத்தம் செய்வான். சில மாதங்களுக்கு முன் அசுத்தமாக இருந்த இடம் இன்று இளைஞர்கள் விளையாடும் இடமாக மாறியுள்ளது, இவன் முயற்சியால். மாலை நேரங்களில் சிறு பிள்ளைகளுக்கு டியூஷன் சொல்லித் தந்து பெற்றோர் கொடுப்பதைப் பெற்றுத் திருப்தி அடைகிறான். பஸ் ஸ்டாப்பில் நிற்கும் போது கியூ வரிசையை ஒழுங்குபடுத்துவான். தன் வட்டாரத்தில் தண்ணீர் கஷ்டம் நீங்க அப்பகுதி மக்கள் அனைவரையும் ஒன்று கூட்டி முனிசிபல் ஆபீஸ் சென்று, மனுக் கொடுத்து, போராடி புதியதாக பைப் போட ஏற்பாடு செய்தான். இவன் எண்ணமெல்லாம் சுற்று வட்டார மக்களுக்குச் சேவை செய்வதாகவே உள்ளது கண்டு வியக்கிறேன்.

—எஸ். ரவி, பம்பாய்—64.



ஜான் சுதாகர்

திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியில் பேராசிரியர் என்ற முறையிலே என் மாணக்கருள் ஒருவனான ஜான் சுதாகர் பற்றி பெருமையோடு எழுதுகிறேன். ஏதேனும் ஒரு துறையில் சிறந்து விளங்குபவர் பலர் உண்டு. ஆனால் சுதாகர் பல துறைகளில் பிரகாசிக்கிறான். இருப்பினும் கர்வம் சற்றும் இன்றி சக மாணவ மாணவியரிடம் பழகுகிறான். பெரியோரை மதித்து நடக்கிறான். வகுப்புத் தலைமைப் பதவியில் முதல் வருடத்திலிருந்து அமர்ந்திருப்பவன். உல்லாசப் பயணங்கள், விழாக்கள், பொது நல சேவை முதலியவற்றுக்கு ஏற்பாடு செய்து நிர்வகிப்பதில் சமர்த்தன். படிப்பில் முதல் ராங்க். பேச்சுப் போட்டிகளில் முதல் பரிசு. கிரிக்கெட் வீரன், கல்லூரி சஞ்சிகையின் ஆசிரியன். நுண் கலைக் கழகச் செயலாளன். நல்ல எழுத்தாளன். ரோடராக்ட், யூனி—ஒய் கிளப் ஆகியவற்றில் முறையே உறுப்பினன், தலைவன். கிறிஸ்துவ மத பாடற் குழுவில் பிரதான சேவை. குஷ்ட நோய் தீர்க்கும் பணியில் முன் நிற்பவன். சொல்லி மாளாது என் மாணவன் பெருமை!

— எஸ். ராமனாதன்.

ஜே. சந்திரன்

சுவாரஸ்யமான இளைஞர் இவர். வறுமை நிலையிலும் எப்படியோ பி. ஏ. முடித்து தட்டெழுத்து சுருக்கெழுத்து தேறியும் முறையான உத்யோகம் கிடைக்காது போனாலும் மனம் தளராமல்

இது இளைஞர் அணி

பகுதி நேர வேலை பல இடங்களில் பார்த்து மாத வருமானம் ரூபாய் ஆயிரம் பெறுகிறார். அதை அப்படியே குடும்பச் செலவுக்காகப் பெற்றோரிடம் கொடுத்தும் விடுகிறார்! வட்டாரத்தில் எங்கே சண்டை பூசல் என்றாலும் அங்கே போய்ப் பேசி நியாயத்தை எடுத்துச் சொல்லி மத்தியஸ்தம் செய்வார்.

உயிருக்குயிராக நேசித்த காதலி இன்னொருவனுக்குச் சொந்தமான பின் அவளை சகோதரியாக பாவிக்கும் மனப்பக்குவம் உள்ளவர். மனிதாபிமானமும் நேர்மையும் குறைந்து வரும் இந்நாளில் சந்திரன் தப்பிப் பிறந்த ஒரு மனிதர்.

— பா. சித்ரா பாலகிருஷ்ணன், சென்னை—41.







லலிதா நந்தினி

திடீரென்று சொன்னார் குடும்ப நண்பர்: "இன்று காஞ்சி காமகோடி கர்நாடக சங்கீத சேவா டிரஸ்ட் சார்பில் தியாகராஜர் கிருதிகள் போட்டி நடக்கிறது. நீங்கள் இருவரும் கலந்து கொள்ளலாமே?" என்று. "நடந்து கொண்டே இருக்கிறது. உடனே போங்கள்!"

சகோதரிகள் அவசரமாகப் பறந்தார்கள். எல்லா மாவட்டங்களிலிருந்தும் வாய்ப்பாட்டு, வாத்திய இசை போட்டிகளில் கலந்து கொள்ள பல இளைஞர்கள் யுவதிகள் வந்திருந்தனர். ஆறு வயது முதலே தாத்தா அளித்த பயிற்சியில் வயலினில் தேறியிருந்த லலிதாவும், நந்தினியும் போட்டியில் வாசித்தார்கள். இருவருக்கும் முதல் பரிசு! பயிற்சி அளித்த தாத்தா யார்? வயலின் மூவரான சங்கர், சுப்பிரமணியம், வைத்தியநாதன் இவர்களின் தந்தை. இம் மூவரின் சகோதரி தான் லலிதா—நந்தினியின் தாயார்! இன்று சர்ச் பார்க்கில் படிக்கிறார்கள் லலிதா நந்தினி சகோதரிகள். லலிதாவுக்கு டாக்டராகும் ஆசையும் இருக்கிறது.

விசுவநாதன், சென்னை.

ஏற்றியவுடன் மெல்லிய இன்னிசை எழும்பும் மெழுகுவர்த்தியை அமெரிக்காவில் கண்டு பிடித்திருக்கிறார்கள். இந்த மெழுகுவர்த்தியை ஏற்றியவுடன் ஒரு கருவி மெழுகுவர்த்தியின் அடிப்பாகத்தில் இருக்கும் ஸ்பீக்கரைச் செயல் படுத்துகிறது. மெழுகுவர்த்தி அணைந்தவுடன் இசையும் நின்று விடும்!

பிறந்த நாள் விழாக்களில் பார்த்தே கிரீட்டிங்ஸைச் சொல்லும்!

— கே. ஜம்புநாதன்





"நீ சினிமா டைரக்டராகணும்னு சொல்லிட்டிருந்தியே, அதற்காக ஏதாவது முயற்சி செய்தியா?"

"ஓ...முனியாண்டி என்ற என் பெயரை முனிராஜுனு மாத்தி வச்சுகிட்டேனே!"

— ஏ. சுகுமார்.


குஜராத் அரசு
கலவரம்
இட ஒதுக்கீட்டுக்கு எதிர்ப்பு
இட ஒதுக்கீட்டுக்கு ஆதரவு


மகாராஷ்டிர முதல்வர்
உயர்மட்ட போலீஸ் அதிகாரிகள்
சீயர்ஸ்!
குண்டர்கள்


இலங்கைப் பிரச்னைத் தீர்வுக்கு இந்த மனுவிலே வழி சொல்லி இருக்கிறேன்!
தாட்சர் பேச்சு
பண்டாரி பேச்சு
பார்த்தசாரதி திட்டம்
இல்லே! இதோ நான் சொல்றது தான் சரியான வழி!
5 லட்சம் கையெழுத்து



கல்கி

1985 ஏப்ரல் 28

மலர்: 43 இதழ்: 39

குரோதன சித்திரை 16



தட்டிக் கொடுங்கள், தனியார் துறையை!

அரசுத் துறையின் உடன் பிறப்பு அசிரத்தை. அது பெற்றெடுப்பது நஷ்டத்தை. இந்த நியதியை மாற்ற முடியாது என்பதை பாரதம் உணராது போனாலும் வேறு பல நாடுகள் நன்குணர்ந்து நடவடிக்கையும் எடுக்க ஆரம்பித்து விட்டன.

பிரிட்டனில் பல அரசுத்துறை நிறுவனங்களை இன்று தனியார் உடைமையாக்கிவிட்டது அரசு. ஐந்தே ஆண்டுகளில் பதினேழு அரசுத் துறை நிறுவனங்களைத் தனியார் துறைக்கு மாற்றி விட்டது. இந்தக் கம்பெனிகளின் பங்குகளை மக்கள் கியூ வரிசையில் நின்று வாங்கினார்கள்! பொது மக்களைப் பங்குதாரர்களாகக் கொண்ட தனியார் துறைக்கு மாறியதும் இந்த நிறுவனங்கள் சுறுசுறுப்பு பெற்றன. பங்கு மார்க்கெட்டில் ஷேர்களின் மதிப்பு உயர்ந்தது. ஏதோ சின்னஞ்சிறிய நிறுவனங்கள் அல்ல, பிரிட்டிஷ் பெட்ரோலியம் போன்ற பிரும்மாண்ட நிறுவனங்கள் இப்படி கை மாறின. அரசுக்குப் பல்லாயிரம் கோடி டாலர்கள் வருவாய் கிட்டியது. இப்பணி மேலும் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது.

பிரிட்டனைப் பின் பற்றி மேற்கு ஜெர்மானிய அரசும் லுப்தான்ஸா விமானக் கம்பெனி, ஃபோக்ஸ்வாகன் மோட்டார் கார் கம்பெனி போன்ற பலவற்றைத் தனியார் துறைக்கு மாற்றவிருக்கிறது. இத்தாலி, ஃபிரான்ஸ், ஸ்வீடன், ஸ்பெயின் போன்ற நாடுகளும் இதே வழியைப் பின் பற்றி அரசுத் துறையில் ஏற்பட்டு வரும் நஷ்டங்களைத் தவிர்த்து விட முனைந்திருக்கின்றன. இதனாலெல்லாம் மேற்கு ஐரோப்பாவில் ஏற்கனவே உள்ள பொருளாதாரச் செழிப்புக்கும் மேலாகப் புதிதாக மகத்தான பொருளாதாரப் புரட்சியே ஏற்படப் போகிறதென்று நிபுணர்கள் கணிக்கின்றனர்.

தனியார் துறை சில காரியங்களைச் செய்ய முடியாது, அரசுத் துறைதான் செய்ய முடியும் என்ற கருத்து தவறானது. ஜம்ஷெட்ஜி டாடா தான் இந்தியாவின் முதல் எஃகு ஆலையை உருவாக்கினார். அமெரிக்காவின் விண்வெளி வெற்றிகளுக்குத் தனியார் துறையே ஆதார பலம். டெலிஃபோன், ரயில், பஸ், மின் உற்பத்தி—விநியோகம், ஏன் தீயணைப்புப் படையும் வீதி ஓரக் குப்பைகளை வாரிச் செல்லும் பணியும் கூட அமெரிக்காவில் தனியார் துறை வசம் இருக்கிறது. லாஸ்ஏஞ்செல்ஸ் ஒலிம்பிக்ஸை தனியார் துறைதான் லாபமாக்கிக் காட்டியது.

ஏதோ ஒரு சில தனியார் நிறுவனங்கள் திவாலாகி விடலாம். ஆனால் முதலீடான மொத்த தொகைக்குக் கிடைக்கும் லாப விகிதம், அளிக்கின்ற வேலை வாய்ப்பின் அளவு, உற்பத்திப் பொருளை வாங்குவோருக்கு நடக்கும் சேவை இவற்றை தனியார் துறையிலும் அரசுத் துறையிலும் ஒப்பு நோக்கினால் மூன்றிலும் தனியார் துறையே முன் நிற்கும்.

அரசுத்துறை நிறுவனங்களுக்கு அடியோடு முழுக்குப் போடப் பிரதமருக்கு மனம் வராவிட்டாலும் குறைந்த பட்சம் அவற்றின் ஏகபோக்கியத்தைத் தவிர்த்துத் தனியார் துறையையும் போட்டி போட அனுமதித்தாலே போதும். எல்லா விதத்திலும் பிரமிக்கத் தக்க முன்னேற்றம் விளையும்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

ராஜாஜி
வாழ்க்கை வரலாறு

ராஜ்மோகன் காந்தி

3



கவர்னருடன் மோதல்கள்

பதவியேற்ற இரண்டே மாதங்களில் ஸி. ஆர்., ஊராட்சி அதிகாரிகள் காங்கிரஸில் சேரக் கூடாது என்று தடை விதித்ததை காங்கிரஸ் தலைவர் நேரு ஆட்சேபித்தார். 'காங்கிரஸ் என்ன, அரசை அண்டிப் பிழைப்பதாகிவிடும் என்று எண்ணிவிட்டீர்களா?' என்று ஸி. ஆரைக் கேட்டார். ஸி. ஆர். அதற்குப் பதில் கூறினார். "உள்ளாட்சி நிறுவனங்களின் ஊழியர்களை, அவர்கள் பதவியில் இருக்கிறார்கள் என்ற ஒரே காரணத்துக்காக, காங்கிரஸ் கட்சியில் உறுப்பினர்களாவதற்கு அனுமதித்து விட முடியாது. தெரிந்தே இப்படி செய்வது பெரிய ஊழலாகக் கருதப்படும்.''

ஸி. ஆர். சட்டத்தையும், அமைதியையும் காப்பதில் முழுமனத்துடன் ஈடுபட்டது ஆங்கிலேயர்களை வியப்பில் ஆழ்த்தியது. வன்முறையில் ஈடுபட்ட அரசியல் கைதிகளை விடுதலை செய்ததால் வன்முறைகுறித்து கண்ணைமூடிக்கொண்டிருந்துவிட வேண்டும் ஒரு விதி வகுக்க முயன்றார். இதைச் செயற்குழுவும் காந்தியும் ஒப்புக் கொள்ளவில்லை. அமைச்சரவையின் நடவடிக்கைகள் பற்றிய விமர்சனங்களை ஆட்சேபிக்க வேண்டாம் என்று மந்திரிகளுக்கு அறிவுறுத்திய செயற்குழு, வன்முறையை எதிர்த்து நடவடிக்கை எடுக்க மந்திரி சபைக்கு இருந்த உரிமையையும் ஆமோதித்தது. இந்த விவகாரத்தின் ஒரு கட்டத்தில் நேரு ஸி. ஆரிடம் கேட்டாராம்; 'நான் மதராஸுக்கு வந்து இது போன்ற ஒரு சொற்பொழிவு ஆற்றினால் என்னையும் கைது செய்து விடுவேன் என்கிறீர்களா?' 'ஆம், செய்துவிடுவேன்' என்று ஸி. ஆர். பதிலளித்தாராம்!

சுயாட்சியின் அதிகார எல்லைகளை விரிவுப் படுத்திக் கொள்ள முயன்றார் ஸி. ஆர். உதாரணமாக: காங்கிரஸ் பதவியேற்றபிறகு கவர்னர் எர்ஸ்கைன் சட்டசபையில் முதன் முறையாய் ஆற்றவிருந்த சொற்பொழிவின் முதல் வடிவத்தைப் பார்த்து விட்டு ஸி. ஆர். ஆட்சேபனை தெரிவித்தார். எர்ஸ்கைன் உடனே வைஸ்ராயிடம் கவர்னரின் உரிமைகளில் தலையிடும் ஸி. ஆரின் இச்செயலை எதிர்க்க அவரது ஆதரவை வேண்டினார். ஆனால் லின்லித்கோ விவாதத்துக்கும் சர்ச்சைக்கும் இடமளிக்கக் கூடிய விவகாரங்களைத் தவிர்த்து விடுமாறு எர்ஸ்கைனுக்கு உபதேசித்தார்.

அரசின் முடிவுகளில் தலையிடவும் அவற்றை மாற்றவும் கவர்னர் பெற்றிருந்த

என்று அர்த்தமில்லை என்பதாக மாவட்ட மாஜிஸ்ட்ரேட்டுகளுக்குக் கண்டிப்பான சுற்றறிக்கை மூலம் தெளிவுபடுத்தினார் அவர். (இந்தச் சுற்றறிக்கையை முதலில் பிரதம காரியதரிசி தயாரித்திருந்தார் என்றும் அது வழ வழாவென்று இருந்ததால் கண்டிப்பும் தீவிரமும் தொனிக்க ஸி. ஆர். மாற்றி எழுதினார் எனவும் கவர்னரின் குறிப்பு ஒன்று நமக்குத் தெரிவிக்கிறது.)

வேலூரில் எஸ். எஸ். பாட்லிவாலா என்ற பம்பாய் சோஷலிஸ்ட் கைது செய்யப்பட்டதும் அவருக்கு ஆறுமாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதும் ஸி. ஆரை கட்சிக்குள் ஒரு பெரிய வாக்குவாதத்தில் சிக்க வைத்தது. காங்கிரஸின் இடது சாரியினர் கோபமடைந்தனர். கட்சித் தலைவர் ஜவஹர்லால் பாட்லிவாலா மீது வழக்குத் தொடரப்பட்டதை ஆட்சேபித்தார்.

ஒருவரைக் கைது செய்வதற்கு முன்னரும், வழக்குத் தொடரும் முன்னரும் கட்சியின் செயற்குழுவை மந்திரிசபை கலந்தாலோசிக்க வேண்டும் என்று பொதுவான உரிமைகளே சுயாட்சி உணர்வுக்குப் பெரும் தடையாய் இருந்தன. இந்த உரிமை, போராட்டங்களை உருவாக்கப் பயன்படுத்தப்படாது என்று கூறியிருந்தார் லின்லித்கோ. அரசின் எந்த முடிவையும் மாற்ற கவர்னருக்கு இருந்த உரிமையைத் தவிரவும் கவர்ன்மெண்ட் ஆஃப் இந்தியா சட்டத்தின்படி சில துறைகளில் தமக்குச் சரி என்று தோன்றியதைச் செய்ய அவருக்குத் தனி உரிமை இருந்தது.

ஸி. ஆர். இந்த இரு தலைப்புகளின் கீழ் அடங்கிய விஷயங்களைப் பற்றிய கவர்னரின் கோப்புகளைக் காண உரிமை கோரி போராடினார். இது தொடர்பாக பிரிட்டிஷ் அயல் விவகார அமைச்சர் லண்டன் நாடாளுமன்றத்தில் கூறியதைத் தமது வாதத்திற்கு ஆதரவாக எடுத்துக் காட்டினார்:

''கவர்னரும் மந்திரிசபையும் தனித் தனியே இயங்கும் இரு பாகங்களுடையதாக அரசைப் பிரித்துவிடலாம் என்று யாரும் எண்ணி விட வேண்டாம். இதனால் மோதல்கள் தோன்றும் ஆபத்து உண்டு.''

ஆனால் எர்ஸ்கைன் என்னவோ விட்டுக்

உண்மை, தூய்மை, தன்னலமின்மை — இவை எதனிடம் இருக்கிறதோ அதனை அழிக்க சூரியனுக்கு மேலும் கீழும் சக்திகள் கிடையாது.
—சுவாமி விவேகானந்தா.



எர்ஸ்கைன்

கொடுப்பதாக இல்லை. ''மந்திரியானாலும் சரி, செயலாளர் ஆனாலும் சரி, யாரும் எனது பகுத்தறியும் திறனுக்கு விடப்பட்ட விஷயங்களில் தலையிட்டு எனக்கு அறிவுரை அளிக்க முடியாது'' என்றார்.

இப்படி சில மோதல்கள் இருந்தபோதிலும் எர்ஸ்கைனுக்கு ஸி. ஆரைப் பிடித்திருந்தது. ஆட்சிப் பொறுப்பில் ஒரு பெரிய புள்ளியுடன் தாம் தொடர்பு கொண்டிருந்தது குறித்து மகிழ்ந்தார் எர்ஸ்கைன்.

பிரிட்டிஷ் அரசருக்கு இவ்வாறு எழுதினார்:

பிரீமியரைப் பொறுத்தவரை — நான் அவருடன் ஒத்துப் போக முடிகிறது. அவர் ஓர் அபூர்வ கலவை. அவர் காந்தியின் உறவினர். அவர் மகள் காந்தியின் மகனை மணந்துள்ளார். அணிகின்ற ஆடையில் காந்திக்கும் இவருக்கும் அதிக வித்தியாசமில்லை. ஸி. ஆர். ஒரு லட்சியவாதி. வாழ்க்கையில் அவருடைய பிரதம குறிக்கோள், இந்தியாவை அசோக சக்ரவர்த்தி காலத்து நிலைமைக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்பது. அவர்தான் இங்கு எல்லாவற்றையும் நடத்திச் செல்கிறார். அவருக்கு ஏதேனும் நேர்ந்துவிட்டால் எல்லாமே சிதறிப் போகும். மந்திரிசபையை ஒருங்கிணைத்து இயங்கச் செய்கிற சூத்திரதாரி அவர்தான் (29.12.37).

எர்ஸ்கைன் வருடத்தில் மூன்று மாதங்கள் மவுண்ட் ரோடில் அரசு மாளிகையில் வசித்தார் — ராபர்ட் கிளைவ்வின் மகன் உபயோகித்த மாளிகை இது. அதில் அவன் ஒரு விருந்துக் கூடத்தை கட்டிச் சேர்த்திருந்தான். மேலும் மூன்று மாதங்களை தற்போதைய தமிழ்நாடு ஆளுநர் மாளிகையாய்த் திகழ்வதும், 1821—இல் தாமஸ் மன்ரோவால் முதன் முதலில் கவர்னரின் இளைப்பாறும் வீடாக உருவாக்கப்பட்டதுமான கிண்டி லாட்ஜில் தங்கினார். மற்ற ஆறு மாதங்களை உதகமண்டலத்தில் கழித்தார்.

ஸி. ஆர்., மாம்பலம் எல்லையில் பஸ்லுல்லா சாலையில் ஓர் எளிமையான வீட்டில் வசித்தார். ஹிந்து நாளிதழின் ஆசிரியர் குழுவில் பணியாற்றிய மகன் ஸி. ஆர். கிருஷ்ணசாமியின் வீட்டுக்குப் பக்கத்தில் இருக்கும் இவ்வீடு, ஸி. ஆரின் நண்பர் எழுத்தாளர் 'கல்கி' கிருஷ்ணமூர்த்தி கட்டியது. ஸி. ஆருக்கு வீடு தேவை என்பது தெளிவானதும் கிருஷ்ணமூர்த்தி அதை, காந்தி, ஸி. ஆர். மற்றும் பலருக்கு உதவி வந்த ஜம்னாலால் பஜாஜுக்கு விற்றார். பஜாஜ் அதை ஸி. ஆருக்கு வாடகைக்குக் கொடுத்தார். ஐந்து வருடங்கள் கழித்து பஜாஜ் இறந்த போது, ஸி. ஆர். அரசியல் பாலைவனத்தில் கவனிப்பாரின்றி இருந்த கால கட்டத்தில் பஜாஜ் குடும்பத்தினர் அவ்வீட்டின் பாத்தியதையை ஸி. ஆர். பெயருக்கே மாற்றித் தந்தனர்.

ஸி. ஆரின் விதவை மகள் நாமகிரியும் சிறிது காலத்துக்கு இளைய மகள் லக்ஷ்மியும் அவருக்காக வீட்டுப் பொறுப்புக்களை ஏற்று நடத்தினர். காலை ஏழு மணி முதல் விருந்தினரும், அலுவலர்களும், கட்சிக்காரர்களும் பிறரும் வர ஆரம்பித்துவிடுவார்கள். ஸி. ஆர். அவர்களை 'ஊஞ்சல் அறை' என்று அழைக்கப்பட்ட முன்னறையில் சந்தித்தார். அவர் ஊஞ்சலில் அமர, வந்தவர்கள் 'பாண்ட்' அணிந்த அதிகாரிகளானால் நாற்காலிகளிலும், மற்றவர்கள் தரையில் கோரைப் பாய்களிலும் உட்கார்ந்தனர். ஊஞ்சல் அறையை அடுத்து ஸி. ஆரின் படிப்பகம் இருந்தது. 9.30 முதல் 4.30 வரை செயிண்ட் ஜார்ஜ் கோட்டையில் பணியாற்றினார். இடையே பத்து நிமிட இடைவேளை— காப்பி அருந்தி வீட்டிலிருந்து கொண்டு வந்த ஓரிரு இட்டிலிகளைச் சாப்பிட. மாலையில் அதிகாரிகளை அவர் சந்திப்பதில்லை. அநேகமாக மாலைப் பொழுதில் பொதுக் கூட்டங்களுக்குப் போக வேண்டியிருக்கும். அல்லது சொந்தக் காரியங்களைக் கவனிக்க ஒதுக்கப்பட்டது. ஸி. ஆரின் மகன் நரஸிம்மனும் 1933—இல் மலபாரிலிருந்து ஸி. ஆரிடம் வந்து சேர்ந்த சங்கரனும் பிரதம மந்திரியின் சொந்தக் காரியங்களில் உதவினர்.

(தொடரும்)

தமிழாக்கம்: **சீதா ரவி**

மேலட்டையில்: சுபா
வண்ணப்படம்: ஏ. வி. பாஸ்கர்





பம்பாயிலிருந்து இந்த லெவலாம்; எனக்கென்ன தெரியும்!

கேள்வி (11): ஏக் துஜே கே லியே படத்தை எப்போது தமிழில் எடுக்கப் போகிறீர்கள்? (கே. சண்முகம், அரும்பாக்கம்.)

கே. பாலசந்தர்: காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை வெற்றிகரமாய் ஓடிவிட்ட படம் ஏக் துஜே கே லியே! அதன் அசல் பதிப்பான மரோசரித்ராவும், தமிழ்நாட்டின் பல நகர்களிலும் நன்றாய் ஓடியது. ஒருவேளை, இந்த இரண்டு படங்களையும், மக்கள் மறக்கிற நேரம் வரும்போது தமிழில் எடுக்கலாம். அந்த நேரம் எப்போது வருமோ?

எஸ். வி. ரமணன்: அதை மறக்கவே முடியாது. அதனாலே தமிழ் படம் வராது கஷ்டம்னு நினைக்கிறேன்.

கேள்வி (12): அந்த நாள் முதல் அச்சமில்லை வரை ரசித்தாலும், தங்களின் புன்னகையின் முற்போக்கு கருத்து போலக் காண ஆசைப்படுகிறேன். என் கனவு பலிக்குமா? (ஆர். கணேசன், சென்னை—4.)

கே. பாலசந்தர்: அந்த நாள் முதல், அச்சமில்லை வரை என்று சொல்லியிருக்கிறீர்கள். ''அந்த நாள்'' வீணை மேதை எஸ். பாலசந்தர் அந்த நாளிலேயே எடுத்த புரட்சிப் படம். ஒருவேளை அந்த நாள் முதல் நான் எடுத்த படங்களைக் குறிப்பிடுகிறீர்களோ? **சரி! புன்னகைக்கு வருவோம்! புன்னகை** வெளியான போது, அது என்னையோ, அதன் தயாரிப்பாளரையோ, புன்னகை புரிய விடவில்லை. நான் எந்தப் படம் எடுத்தாலும், ஏதாவது ஒரு முற்போக்குக் கருத்தைச் சொல்லித்தான் வருகிறேன். விகிதாசாரம் சற்று கூடும்; குறையும்; அவ்வளவுதான்.

கேள்வி (13): நீங்கள் டைரக்ட் செய்யும்போது உங்கள் மனைவியிடம் ஏதாவது ஆலோசனை கேட்பதுண்டா? (ஆர். ராஜம், மதுரை—16.)

கே. பாலசந்தர்: ஆகா! என்ன ஒற்றுமை! என் மனைவி பெயரும் தங்கள் பெயரும் ஒன்று என்பதால்தான் இந்தக் கேள்வியைக் கேட்டீர்களா? ரைட் பதில் சொல்றேன். என் மனைவி, எனக்கு ரொம்ப உதவியா இருப்பாள். என் பட சம்பந்தப்பட்ட எந்த வேலையிலும் அவள் தலையிடுவதே இல்லை. அதுதான் அவள் எனக்குச் செய்கிற மிகப் பெரிய உதவி. ஆனா, படம் முடிஞ்ச பிறகு, போட்டுக் காண்பிப்பேன், ஏதாவது அபிப்ராயம் சொன்னா, அது ரொம்ப கரெக்டா இருக்கும். ஆனா ஒண்ணு. எங்க ரெண்டு பேரோட லெவல் ஆஃப் திங்கிங்கும் அண்டர்ஸ்டாண்டிங்கும் வேறு இருந்தாலும், ரசனை ஒரே மாதிரிதான். அது எப்படின்னே எனக்குப் புரியலே. ரொம்ப ஆச்சரியப் பட்டதுண்டு.

கேள்வி (14): பாலகுமாரனின் எழுத்துக்கள் உங்களைப் பாதித்ததுண்டா? கல்கியில் வெளியான 'இரும்புக் குதிரைகள்' விஸ்வம் பாத்திரத்தில், கவிதைகளுடன் மென்மையாய்க் கமலை நடிக்க வைப்பீர்களா? (சித்ரா புதுவை.)

கே. பாலசந்தர்: பாலகுமாரன் நல்லா எழுதுறாரு. வெறும் கதைகளா மட்டும் இல்லாம, மனித இயல்புகளோட கட்டுரைகளா இருக்கு அவர் எழுத்து. அதனாலே படம் பண்றது ரொம்பக் கஷ்டம். இரும்புக் குதிரைகள் புத்தகம் என் மேஜை மேலே இருக்கு. இன்னும் படிக்கலே. மெர்க்குரி பூக்கள் படிச்சிருக்கேன்; ரொம்ப ரசிச்சேன்.

கேள்வி (15): நீங்கள் இவ்வளவு காலமாக படஉலகில் இருந்தும் இன்னும் புரிந்து கொள்ளாதது எது? கற்றுக் கொள்ளாதது எது? (எஸ். அருணா, பாளையங்கோட்டை.)

கே. பாலசந்தர்: இன்னும் புரிந்து கொள்ளாததுன்னா, அது உங்களைத்தான். எதை ரசிப்பீங்க, எதை ரசிக்க மாட்டீங்கன்னே பல சமயம் புரியறதில்லே. சில படங்கள் ஓடாத போது, இதை ஏன் ரசிக்கலைன்னு புரியலே; சில படங்கள் ஓகோன்னு ஓடற

கே. பாலசந்தர்

நேரம் நல்ல நேரம்

போது. எப்படி இதை ரசிக்கறீங்கன்னும் புரியலே...கத்துக்கொள்ளாததுன்னு,என்ன பதில் சொல்லறது? ஒண்ணு? ரெண்டா? கற்றது கைமண்ணளவுதானே?

கேள்வி (16): நீங்கள் இன்னும் ஒரே ஒரு சினிமா தான் எடுக்க வேண்டும். பிறகு சினிமா உலகை விட்டு விலகிவிட வேண்டும் என்று கண்டிஷன் போட்டால், நீங்கள் எத்தகைய படம் எடுப்பீர்கள் கே. பி. சார்? (மிஸ். உஷா, சென்னை.)

கே. பாலசந்தர்: சும்மா ஒரு பேச்சுக்குத் தான் இந்தக் கண்டிஷன்னு இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லுவேன். இல்லேன்னு, உங்க மேல கேஸ் போடுவேன்! பாரதியார் படம் எடுக்கணும். அதுதான் என் வாழ்க்கையோட குறிக்கோள். சும்மா எல்லாம் அந்தப் படத்தை எடுக்க முடியாது. அதற்கு ஒரு தவம் இருக்கணும். ஒருவேளை இந்த மாதிரி ஒரு கண்டிஷன் போட்டு என் கைகளைக் கட்டி மற்ற வேலைகளைச் செய்யா விடாம பண்ணினாத்தான் அந்தப் படம் எடுக்க முடியுமோ என்னவோ?

கேள்வி (17): கமலுக்கு பாரதியார் வேஷம் கொடுத்து பாரதியார் படமெடுத்து உடனே எங்கள் ஆசையை நிறைவேற்றுவீர்களா? (பி. குப்புசாமி, வழுதாவூர்.)

கே. பாலசந்தர்: இவர்னு நான், கமல் ரெண்டு பேரும் (மற்ற வேலைகளிலேயிருந்து, துறவறம் பூண்டு, இந்தப் பணியைத் தொடக்கினால்தான் இந்தக் காரியம் நடக்கும்னு நினைக்கிறேன். அதுக்காக நான் காத்துக்கிட்டிருக்கேன். இதுக்குக் காலம்தான் பதில் சொல்லணும்; நான் இல்லே.

கேள்வி (18): கவிதாலயாவின் மசாலாப் படங்களை மற்றவர்களை இயக்க விட்டுவிட்டு, சோதனைப் படங்களை மற்ற கம்பெனிகளுக்காகத் தாங்கள் இயக்குவதன் மர்மம் என்ன? (ஜெயந்தி முத்துராம், பாலூர்.)

கே. பாலசந்தர்: இந்த கேள்விக்கு எத்தனையோ தடவை பக்கம் பக்கமா பதில் சொல்லியிருக்கேன். அதாவது சோதனைப் (பரீட்சார்த்தமான) படங்களை இப்போது என் நிறுவனத்தில்தான் தயாரிக்கிறேன். பரீட்சார்த்தமான படங்களை நான் தொடர்ந்து தயாரிக்க வேண்டுமென்றுதான் பாபுலரான – வெகுஜன ரீதியிலான படங்களை மற்ற டைரக்டர்களைக் கொண்டு தயாரிக்கிறேன். இது ஒரு பொருளாதாரப் பிரச்னை. எக்னாமிக் பாலன்ஸிங். இதில் மர்மம் ஒன்றுமில்லே.

கேள்வி (19): பம்பாய் படஉலகிலிருந்து நீங்கள் கற்றுக் கொண்டது என்ன? வடக்கு என்றால் இப்போது உங்களுக்கு விரக்தியா? (ஆர். கே. லிங்கேசன், மேலக்கிருஷ்ணன்புதூர்.)

கே. பாலசந்தர்: நல்ல காலம், நான் ஒண்ணுமே கத்துக்கலே! அண்ணன், தம்பி சின்ன வயசில பிரிஞ்சுபோய், கிளைமாக்ஸ்ல ஒண்ணு சேருகிறதெல்லாம் அங்கிருந்து தான் கத்துக்கணும்கிறது இல்லே; எங்களுக்கே தெரியும்!

கேள்வி (20): கல்யாண ராமன் படத்தின் இரண்டாம் பாகம் வரப் போகிறதாமே! அதுபோலத் தங்களது படங்கள் எதையேனும் இரண்டாவது பாகமாய் எடுக்கும் உத்தேசம் உண்டா? (ஜி. உஷா பிரபாகரன், நாகப்பட்டினம்.)

கே. பாலசந்தர்: இது 'மீண்டும்' சீசன். ஆனா எனக்கு அப்போதே இந்த மாதிரி ஒரு எண்ணம் இருந்தது. அதற்காகக் கொடுத்த தலைப்புத்தான் 'அவர்கள்'. அதாவது 'அரங்கேற்றம்' லலிதாவும் 'அவள் ஒரு தொடர்கதை' கவிதாவும் சந்தித்துக் கொள்வதிலிருந்து கதை ஆரம்பம் என்று வைத்திருந்தேன். பிறகு பல காரணங்களால் அந்தத் திட்டத்தைக் கைவிட்டுவிட்டேன். பின் வேறு ஒரு கதை எழுதி, ''அவர்கள்'' என்று தலைப்புத் தந்து படம் எடுத்தேன். ஒருவேளை, மீண்டும் லலிதா, மீண்டும் கவிதா என்று தொடங்கலாம்; தொடரலாம்.

தொகுப்பு: **மௌஷ்மி.**
போட்டோ உதவி:

ஃபிலிம் நியூஸ் ஆனந்தன்.



ஏக் துஜே கே லியே படத்தை எப்போது தமிழில் எடுக்கப் போகிறீர்கள்?

எதிர்காலம் உங்கள் கையில்

இது ரொம்பக் கவர்ச்சிகரமான துறை. இந்த உலகில் இருக்கிற வேலை வாய்ப்புகள் பற்றி அறிய, 'மௌலிஸ் அட்வர்டைஸிங்'கை அணுகினேன். இதன் ஸ்தாபகர் திரு. ராமபத்ரன், முந்நாள் நேஷனல் ஹெரால்டுகாரர். அட்வர்டைஸிங் துறையில் கால் செஞ்சுரி போட்டவர். இப்போது அவரது மகன் சந்திரமௌலி (அடியேன் இல்லை) கையில் எல்லாவற்றையும் கொடுத்து விட்டு தாம் ஒதுங்கி, திருக்குறளை உடற்பயிற்சி மூலமாய் இசையுடன் பள்ளி மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பதில் பிஸியாய் இருக்கிறார். நமக்குத் தேவையான தகவல்களைச் சொன்னார்.

அமெரிக்காவில் கோகோ — கோலா நிறுவனம், தன் வியாபார எதிரியான இன்னொரு கோலாவை தூக்கிச் சாப்பிட நினைத்தது. பல விளம்பர நிறுவனங்களும் இதற்கு ஐடியா தர ஒருநாள் கூடின. கோகோ—கோலாவுக்கு ஒன்றும் இம்ப்ரஸிவாக இல்லை. கடைசியில் ஒரு இளைஞன், ஒரு துண்டு பேப்பரை அனுப்பினான். அதிலே எழுதப்பட்டிருந்த விஷயம்: ''கையாளுவதற்கு லகுவான, பாட்டிலில் கோலாவை அடைத்து விற்க.''

இந்த உத்தி உடனே ஏற்றுக் கொள்ளப்பட்டது. பற்றுவதற்கு இலகுவான வடிவில் பாட்டில் அமைக்கப்பட்டது. அந்தப் புதிய வடிவமைப்பே விளம்பரப் படுத்தப்பட்டது. விற்பனை ஓகோ.

இந்தச் சம்பவம் உணர்த்தும் விஷயங்கள் என்ன? விளம்பர உலகில் உத்தி, யோசனை என்பது யாரிடமிருந்து வேணுமானாலும் வரலாம். மக்களை வசீகரிக்கிறதா அந்த ஐடியா என்பதுதான் முக்கியம். மற்றொன்று பழகப் பழகப் பாலும் புளிக்கும் என்பதால் சதா ஏதாவது வித்தியாசமாக, புதுமையாகச் செய்து காட்டிக் கொண்டே இருக்க வேண்டும்.

''அதுசரி, இந்த விஷயம் எனக்கு எப்படி உதவப் போகிறது? எனக்கு வேலை வாய்ப்பு தந்து எவ்வாறு என் எதிர்காலத்துக்கு உதவப் போகிறது?'' என்று கேட்கிறீர்களா?

விளம்பர உலகில் நுழைவது ரொம்ப சிரமம் தான். ஆனால் உள்ளே நுழைந்து விட்டால், பிரமாதமாய் முன்னுக்கு வரலாம். உம்மிடம் ஐடியாக்களுக்கு பஞ்சமில்லை; எதையும் கவர்ச்சிகரமாகக் கூறத் தெரிகிறது என்றால் ஒரு ஏஜென்ஸியிலிருந்து இன்னொன்றுக்குக் கொத்திக் கொண்டு போய்விடுவார்கள்.

எந்த ஒரு வேலையைக் கொடுத்தாலும் எதில் எந்த விதப் பிரச்னைகள், வந்தாலும் திறமையாய்ச் சமாளித்து, வேலையை முடித்து வெற்றித் தேவதையின் முத்தத்தைப் பெறுகிற சாமர்த்தியம் உள்ளவர்களாய் இருக்க வேண்டும்.

ஒரு விஷயம் பற்றிப் பேசுகையில் அதை உடனே கிரகித்து, அதுசம்பந்தமாக முன்னால் படித்த, பார்த்த, கேட்ட விஷயங்களையெல்லாம் நினைவுக்குக் கொண்டு வருகிற திறமை இருக்க வேண்டும்.

நாட்டு நடப்பு பற்றி — அரசியல், சினிமா, விளையாட்டு என்று அத்தனை விஷயங்களும் (கிசுகிசுக்களோ வதந்திகளோ அல்ல) விரல் நுனியில் இருக்க வேண்டும்.

எம். பி. ஏ. க்களுக்கு இங்கே வாய்ப்பு அதிகம். விளம்பர நிர்வாகத் துறை டிப்ளமா வாங்கியிருந்தால், ரொம்ப நல்லது.

நல்ல ஆங்கிலப் புலமை அவசியம். பிராந்திய மொழி பாண்டித்யமும் கைகொடுக்கும்.

வருத்தப்பட வேண்டிய ஒரு விஷயம் — இந்தத் துறையில் நுழைய அவசியமான பயிற்சியைத் தருகிற நிறுவனங்கள் இல்லாததுதான். எந்த நிறுவனமும் புதிதாக ஒருவரைக் கூப்பிட்டுப் பயிற்சி தருகிற பணியை மேற்கொள்ளுவதில்லை. நாம் கஷ்டப்பட்டு டிரெயினிங் கொடுத்தால் பின் நம்மை விட்டு விட்டு வேறு எங்காவது தாவி விட்டால் என்ன செய்வது என்கிற எண்ணம்தான் காரணம்.

விருப்பமுள்ளவர்கள் சென்னை அட்வர்டைஸிங் கிளப்பை அணுகலாம்.

ஓவியக் கல்லூரியில் டிப்ளமா, டிகிரி, வாங்கினவர்களுக்கு இந்தத் துறையில் நல்ல எதிர்காலம்.

அழகானவர்கள் மாடலிங் வேலைக்குப் போகலாம்!

தவிர, இங்கேயும் கிளார்க், டைப்பிஸ்ட், ஸ்டெனோகிராபர்களுக்குத் தேவை உண்டு.

—எஸ். சந்திரமௌலி.

விளம்பரத்துறை— சில விவரங்கள்



''மௌலிஸ்'' விளம்பர நிறுவனம் எப்போதும் பிஸி!

ஒரு வருஷப் பிறப்பு வெகுமதி ஸன்ரைஸிடமிருந்து!

ரூ.3/- தள்ளுபடி

ஒவ்வொரு ஸன்ரைஸ் 200 கிரா. ரீஃபில் பேக்கின் மீதும்!



உங்களுடைய வருஷப் பிறப்பை ஸன்ரைஸின் விசேஷ சலுகையுடன் துவக்குங்கள்!

உங்களுக்கு பிடித்தமான ஸன்ரைஸ் காப்பியின் ஒவ்வொரு 200 கிரா. ரீ:பில் பேக்கிலும் ரூ. 3/- மிச்சப்படுத்துங்கள்.

ஸன்ரைஸ், அந்த முதல் காப்பியின் புதுமலர்ச்சியளிக்கும் நறுமணத்தை ஒரு நாளில் எந்நேரத்திலும் மீட்டுப் பெற சிறந்ததோரு வழி!

முந்துங்கள்!
சலுகை சரக்கு
தீரும்வரை

Nestlé ஸன்ரைஸ்

இன்ஸ்டன்ட் காப்பி-சிகரி ப்ளெண்ட்

அம்மாவின் அந்த முதல் காப்பியின் புத்துணர்ச்சியூட்டும் நறுமணத்துடன்.

FSL-8663 TAM

மௌனப் புயல்

3

டெலிபோன் ஒலித்தது.

மறுமுனையில் ராதாகிஷனின் உற்சாகக் குரல் கேட்டது.

"ஈவினிங் மிஸ்டர் ஸிங்! ஞாபகமிருக்கிறதா? எங்கள் பத்திரிகைக்காக உங்களைப் பேட்டி காண ஏழரை மணிக்கு ஒரு பெண் வருகிறாள்!"

"ஞாபகமிருக்கிறது ராதாகிஷண்! பெண் என்று சொல்லிவிட்டாய்! எப்படி மறப்பேன்?" அட்டகாசமாய்ச் சிரித்து, "எப்படி இருப்பாள்? பார்க்கச் சுமாராக இருப்பாளா? சீக்கியப் பெண் இல்லையே?"

"இல்லை!" என்று ராதாகிஷண் சிரித்தான்.

"தாங்க் காட்! ஆனால் ஹிந்து பஞ்சாபியும் எனக்கு இரண்டாம் பட்சம்தான்!"

"டோன்ட் வொர்ரி மிஸ்டர் ஸிங்! இவள் மதராஸிப் பெண். அழகும் புத்திசாலித்தனமும் உள்ள தமிழ்ப் பெண்!"

"குட்! எனக்கு அழகு மட்டும் போதும்! புத்திசாலித்தனத்தை நீயே வைத்துக்கொள்!"

மறுபடியும் வெளிப்பட்ட அட்டகாசச் சிரிப்பு ஓய்கிற வரை காத்திருந்து ராதாகிஷன் ஜாக்கிரதையாகச் சொன்னான்: "நீங்கள் நல்ல மூடில் இருப்பது சந்தோஷமாக இருக்கிறது மிஸ்டர் ஸிங்!"

"ஆ, ஒவ்வொரு விஷயத்துக்கும் தனித்தனி டிபார்ட்மெண்ட் வைத்திருக்கிறேன் மண்டையில்! அந்தந்த உணர்வு தட்டப்படும்போது மூட் மாறும். என்னுடைய எந்த உணர்வை முதலில் தட்ட வேண்டும் என்று தெரிந்து கொண்டிருக்கும் புத்திசாலி நீ!"

"தாங்க்யூ மிஸ்டர் ஸிங்! உங்களுடைய ஒத்துழைப்புக்கு நன்றி!" என்று உபசாரமாகச் சொல்லிவிட்டு ராதாகிஷண் ஃபோனைக் கீழே வைத்தான். "ஹி இஸ் டிஸ்கஸ்டிங் 'யார்'!" என்றான் தன் எதிரில் உட்கார்ந்திருந்த நண்பனிடம்.



வாஸந்தி



கர்தார் சிங் கண்ணாடிச் சுவரை மறைத்த கனத்த திரைச் சீலையை விலக்கி வெளியே தெரிந்த தோட்டத்தைப் பார்த்தார். மணி ஏழேகால் ஆனாலும் இன்னும் சாம்பல் பூத்த வெளிச்சம் இருந்தது. காம்பவுண்டுக்கு வெளியே ஒரு வெள்ளை ஃபியட் நின்றிருந்தது. தோட்டத்துக் கம்பிக் கதவைப் பிடித்தபடி அவருடைய மனைவி ரூபா நின்றிருந்தாள். அவள் எதிரில் கிர்பால் ஸிங் வழக்கமான மிடுக்கான நடையும், நளினமான பேச்சுமாய் நின்றான். மீசையும், தாடியும் கவனமாகச் சாயம் பூசப்பட்ட கருமையில், அவரை விட அவனைப் பதினைந்து வயது குறைவாகக் காட்டிற்று. அவனுடைய ஏதோ ஹாஸ்யத்துக்கு ரூபா குலுங்கக் குலுங்கச் சிரித்தாள். மெல்லிய ஜார்ஜெட் சேலைத் தலைப்பு நழுவி, சிக்கனமான ரவிக்கை தெரிந்தது. வெளேர் என்று மார்பும் இடுப்பும் பளிச்சிட்டன. கிர்பால் ஸிங்கின் கையைப் பற்றியபடி ஏதோ சொன்னாள். அவன் அவள் கன்னத்தைச் செல்லமாகத் தட்டிவிட்டுத் தன் ஃபியட்டை நோக்கி நடந்தான்.

கர்தார் ஸிங் திரையை மூடிவிட்டு நிதானமாக ஸோபாவுக்கு வந்தார். ரூபாளை நினைத்து மெல்லிய பரிதாபம் கூட எழுந்தது. மூப்பு என்பது மனிதனுக்குள் ஏற்படும் மிகப் பெரிய சோகம் என்று அவர் தனக்குள் சொல்லிக் கொண்டார். அவனுடைய தன்னம்பிக்கையையே குலைக்கும் சோகம். ராதாகிஷனிடம் தான் அர்த்தமில்லாமல் ஜோக் அடித்ததற்கும், கிர்பால் ஸிங் தாடி மீசைக்குச் சாயம் பூசுவதற்கும் ரூபா அன்னிய புருஷன் எதிரில் மார்புச் சீலையை நழுவவிடுவதற்கும் இந்தச் சோகம்தான் காரணம்...

கதவு திறக்கும் ஓசை கேட்டது: ரூபா உள்ளே நுழைவதைக் கண்டு அவர் ஆயாசத்துடன் ஸ்காட்ச் விஸ்கியை கிளாஸில் நிரப்பிக் கொண்டார்.

''யாருக்காவது காத்திண்டிருக்கியா என்ன?'' என்றபடி ரூபா எதிரில் நின்றாள்.

''ஆமாம். ஒரு பத்திரிகையிலிருந்து யாரோ வரப் போகிறார்கள் என்னைப் பேட்டி காண.''

விஸ்கியை உறிஞ்சியபடி அவளை மௌனமாகச் சில விநாடிகள் பார்த்த கர்தார் ஸிங்கிற்கு மெல்லிய அதிர்ச்சி ஏற்பட்டது: 'மை காட், இவள் எப்படி இத்தனை கோரமானாள்?'

ஒரு காலத்தில் இவளுடைய அழகு பிரசித்தம். அவனுக்குப் பெருமை தந்த அழகு. அவருக்கு உபயோகமாக இருந்த அழகு... இப்பொழுது அந்தப் பார்வையிலும் சிரிப்பிலும் ஒளியில்லை. அர்த்தமில்லாத எல்லைகளுக்காக ஓடிய ஆயாசம்தான் தெரிந்தது. தடித்த உடம்பும் அபரிமிதமான அலங்காரமும் டம்பமும் வெளிக்க நச்சத்தின் வெறுமையைக் காட்டின.

பணம், காக, சமூக மதிப்பு, லாப நஷ்டம் இந்த விஷயங்களைத் தவிர வேறு எதைப் பற்றியேனும் தீவிர சிந்தனை இவளுக்கு உண்டா என்று அவர் யோசித்தார். பொற்கோவிலுக்குள் ராணுவம் சென்றதைப் பற்றி இவளுக்கு எந்தவிதப் பாதிப்பும் இருப்பதாகத் தெரியவில்லை. இருந்தாலும் அவரிடம் சொல்லவில்லை. கிர்பால் ஸிங்கிடம் பேசியிருப்பாள். இன்னும் நான்கு பெரிய மனிதர்களோடு பேசி, அவர்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்து கொண்டு அவர்கள் சொல்வதைத் தான் இவளும் சொல்லப் போகிறாள்.

''எப்பொழுது வரப் போகிறான் அந்தப் பத்திரிகைக்காரன்?''

''பத்திரிகைக்காரன் இல்லை — பத்திரிகைக்காரி!''

''ஓ. அதுதானா இத்தனை ஆவலா உட்கார்ந்திருக்கியா?''

அவர் வாய் விட்டுச் சிரித்தார். ''ஆமாம்! வொய் நாட்? எனக்கு உன் முகத்தைப்

பார்த்து அலுத்துவிட்டது.''

அவள் அலட்சியமாக எழுந்தாள். ''உன்னுடைய இன்றைய ஸ்டேட்டஸுக்கு இந்த முகம்தான் காரணம். ஞாபகம் வைத்துக் கொள்!''

என்றைக்குமில்லாமல் இன்று இந்த வார்த்தைகள் மனசைக் குத்தின. 'ஷி இஸ் எ பிட்ச்!'' என்ற வார்த்தைகள் ஓசைப்படாமல் மூடிய வாய்க்குள் நொறுங்கின.

முக்கியப்பட்டவர்கள் என்ன சொல்லப் போகிறார்கள் என்று விசாரிக்கிறேன். நீ பாட்டுக்கு ஏதாவது வித்தியாசமாகச் சொல்ல போக நம்ம தலைக்கே ஆபத்தாப் போனாலும் போகும். பிந்தரன் வாலேயுடைய ஆட்களைப் பற்றிக் குறைவாக மதிப்பிடாதே!''

கர்தார் ஸிங் வாயே திறக்கவில்லை. அவள் பேசும் பேச்செல்லாம் கொஞ்ச நாட்களாக ரொம்ப எரிச்சல் ஏற்படுத்தினாலும் ஒவ்வொரு தருணத்து லாப நஷ்டத்தையும் எடை போடுவதில் இவளுக்கு நிகர் இவளேதான் என்று தோன்றிற்று.

அவள் சுறுசுறுப்பாகப் 'பெரிய வட்டா ரத்துச் சீக்கிய நண்பர்களை ஃபோனில் கூப்பிட்டு அபிப்ராயம் கேட்டாள்.

பிறகு வீராங்கனையைப்போல் அவர்பக்கம் திரும்பி, ''எல்லாரும் கண்டனம் தெரிவிக்கப் போகிறார்கள்'' என்றாள். ''நாளைக்கு பல பிரமுகர்கள் கையெழுத்திட்ட அறிக்கை கூட வந்து விடும். உன் பெயரையும் சேர்த்துக் கொள்ளச் சொல்லிவிடு...''

''ஓ. கே, ஓ.கே!'' என்றார் அவர் எரிச்சலுடன்.

அவரைப் பார்த்துக் குற்றம் சாட்டும் குரலில் சொன்னாள்: ''வருகிறது பெண் என்கிற காரணத்தாலே தலைகால் புரியாம எதையாவது உளறி வைக்காதே! நீ சீக்கியன் என்பதை மறந்து விடாதே!''

''வில் யூ ஷட் அப் அண்ட் கோ?''

அவள் அகன்றதும், அவர் அவசரமாகக் கிளாஸை நிரப்பினார். 'இவளோடு நான் எப்படி வாழ்ந்து வருகிறேன்?' — தினமும் இந்த நேரத்தில் எழும் கேள்வி இப்பவும் எழுந்தது. கூடவே எத்தனை பெரிய நிர்ப்பந்தத்தில் இருக்கிறேன் என்று சுய பச்சாதாபம் எழுந்தது.

''நீ சீக்கியன் என்பதை மறந்து விடாதே!'' — இதுவே ஒரு நிர்ப்பந்தம். முந்நூறு வருஷத்து நிர்ப்பந்தம். ஐந்து 'க'க்களின் நிர்ப்பந்தம். ஜீவநதியிலிருந்து பிரிந்த கிளையானாலும், நான் தனியான, வித்தியாசமான கிளை என்று இன்றையச் சூழ்நிலை காரணமாகச் சொல்ல வேண்டிய கட்டாயம். சொல்லாவிட்டால் தலைக்கே ஆபத்து வரலாம், ரூபா கூறியது போல். அதனால்தான் அரசு ஒவ்வொரு சீக்கியனையும் முட்டாளாக்கி விட்டது. என்னை, என் வீட்டுக்குள்ளேயே அவமானப்படுத்திவிட்டது. வெகு சாமர்த்தியமாக, திட்டமிட்டு...

ரூபா எட்டிப் பார்த்தாள். ''அந்தப் பெண் வந்து விட்டாள்!'' என்றாள்.

சட்டென்று கர்தார் ஸிங்கின் 'மூட்' மாறிற்று. ''அனுப்பு!'' என்றார் கம்பீரமாக.

ஃபோட்டோகிராபர் ஷ்யாம் கிஷோர் தொடர ரஞ்சனி,

''நமஸ்கார்!'' என்று புன்முறுவலுடன் உள்ளே நுழைந்தாள்.

கர்தார் ஸிங் எழுந்து, ''நமஸ்கார், ஆயியே!'' என்றார் இரு கரங்களையும் நீட்டி.

ஒரு நிமிஷம் முழுசாக எதிரில் நின்றவளை எடை போட்டார்.

அவர் எதிர்பார்த்திருக்கவில்லை இத்தனை லட்சணமான பெண்ணை. சராசரி தென்னாட்டு நிறத்தைவிட நல்ல நிறமாக இருந்தாள். கன்னங்கரேலென்ற அகன்ற கண்களில் இருந்த ஒளி, வியப்பைத் தந்தது. முகப்பூச்சே இல்லாமல், எளிமையான முடமுடத்த கைத்தறி சேலையில் இந்தப் பெண்ணின் உருவம் அவரை அசத்திற்று. அவருக்குப் பழக்கப்பட்ட பஞ்சாபிப் பெண்களிலிருந்து மிக மாறுபட்டவளாக இவள் தெரிந்தது அவரது சுவாரஸ்யத்தை அதிகரித்தது.

ஷ்யாம் கிஷோர் அவர் நின்ற நிலையிலேயும் உட்கார்ந்த நிலையிலேயும் மளமளவென்று நான்கைந்து ஷாட்டுகளை எடுத்தான்.

பெரிய புன்னகையுடன் கர்தார் ஸிங் ரஞ்சனியின் தோளைப் பற்றி, ''உட்கார்'' என்றார். ''ராதாகிஷண் கெட்டிக்காரன். இன்றைக்கு என் மூட் எப்படியிருக்கும் என்று தெரிந்து உன்னை அனுப்பியிருக்கிறான்.''

ரஞ்சனி உட்கார்ந்தாள். வெளியே போகக் கிளம்பிய ஷ்யாம் கிஷோரிடம், ''இங்கேயே இரு ஷ்யாம்!'' என்றாள். ''பேசும்போது ஏதாவது சுவாரஸ்யமான ஷாட் கிடைக்கலாம்.''

''இந்தப் பெண் ஏமாந்தவள் இல்லை'' என்று கர்தார் கணித்துக் கொண்டார்.

ரஞ்சனி நேராகக் காரியத்தில் இறங்கினாள். கேள்விகளைக் கேட்க ஆரம்பித்ததும் கர்தார்ஸிங் தன்னுள் ஒரு மாறுதல் ஏற்படுவதை உணர்ந்தார். இப்படித்தான் நான் பதில் சொல்லியாக வேண்டும் என்று உந்தப்பட்டவர் போல், ஏற்கெனவே ஒத்திகை பார்க்கப்பட்ட விஷயம்போலப் பதிலளித்துக் கொண்டு போனார்.

''ராணுவத்தைப் பொற்கோவிலுக்குள் அனுப்பியதில் அரசு ஒவ்வொரு சீக்கியனையும் அவமானப்படுத்தி விட்டது. ராணுவத்தை அனுப்ப மாட்டோம் என்று வாக்குக் கொடுத்துவிட்டு ஏமாற்றி விட்டது!''

''அத்தனை ஆயுதங்களைக் கோவிலுக்குள் சேகரித்து வைத்திருந்தது நியாயம் என்கிறீர்களா?''

''ஆயுதம் வைத்துக் கொள்வதில் என்ன தவறு? ஆயுதபாணிகள் நாங்கள். ஆயுதத்தைப் பூஜை செய்பவர்கள். போர் வீரம் எங்களது மரபு. தற்காத்துக் கொள்ள எப்பவும் ஆயுதம் இருக்க வேண்டும். அப்படியிருக்க பெரிய அளவில் தனக்குப் பாதுகாப்பு

நம்முடைய மிகப் பெரிய வெற்றி விழாமல் இருப்பதில் இல்லை. ஒவ்வொரு முறை விழும்போதும் எழுவதில் தான் இருக்கிறது.

— சுவாமி சின்மயானந்தா.



அதிக சுவையானது
அதிக முழுமையானது



**நீங்கள் பாசத்துடன்
ஊட்டும் ஒவ்வொரு கவளமும்
உங்கள் பாப்பாவின்
வளர்ச்சிக்குச் சிறந்ததாகும்.**

பால் அடங்கிய ஃபாரெக்ஸ் திட உணவு. இதைக் கலப்பது எளிது. பாப்பாவுக்கு ஊட்டுவதும் எளிது.

பாப்பாவின் வளர்ச்சிக்கு இன்றியமையாத புரதம் நிரம்பியது. மிக ஆரோக்கியமான இரத்தத்திற்குக் கூடுதல் இரும்புச்சத்து கொண்டது. உறுதியான பற்களையும் எலும்புகளையும் பெற சரியான விகிதத்தில் கால்ஷியமும் ஃபாஸ்ஃபரஸும் அடங்கியது. பாப்பாவின் மென்மையான ஜீரண சக்திக்கென முன்கூட்டிப் பக்குவம் செய்தது.

பால் அடங்கிய ஃபாரெக்ஸ் திட உணவு. அதிக முழுமையான திட உணவு.

உடல் நலத்தின் உறைவிடம்—**க்ளாக்ஸோ**

இலவசம்! குழந்தையின் முதலாண்டுப் புத்தகம்: உங்களது பிரதியைப்பெற தபால் மற்றும் இதர செலவிற்கு ரூ. 1/— தபால்தலை உள் வைத்து எழுதுவீர் இம்முகவரிக்கு—தபால் பெட்டி எண் **19119, (FCM-21) பம்பாய் 400 025.**

CLARION/B/GX/4/203 TAM

வேண்டும் என்று ஒருவன் நினைத்தானானால் அதிக ஆயுதம் வேண்டாமா?''

''இந்த அளவிலா? வெளிநாட்டு ஆயுதங்களையெல்லாம் சேகரித்து...''

''ஓ. பஞ்சாபில் வெளிநாட்டு ஆயுதங்களுக்குப் பஞ்சமே இல்லை — எல்லைப் புறத்தில் சர்வசாதாரணமாகத் தினமும் பல வருஷங்களாகக் கள்ளக் கடத்தல் நடந்து கொண்டிருக்கிறது. இதெல்லாம் அரசுக்குத் தெரியாது என்று பாசாங்கு செய்வது அபத்தம்.''

''மதத்தையும் அரசியலையும் கலந்து மக்களைக் குழப்புவது ஆபத்தில்லையா?''

''அரசுதான் குழப்புகிறது. எங்களுக்குக் குழப்பமேயில்லை. அரசியலிலிருந்து பிறந்த மதம் எங்களுடையது. அரசியலும் மதமும் எங்களுக்கு வெவ்வேறாக இருக்க முடியாது...''

ரஞ்சனி சில வினாடிகள் அவரைத் தீர்க்கமாகப் பார்த்தாள். அதன் தீட்சண்யத்தைத் தாங்காமல் அவர் குனிந்து தன்னுடைய க்ளாஸை எடுத்து உறிஞ்சினார்.

''என்னால் நம்ப முடியவில்லை'' என்றாள் அவள் மெள்ள.

''எதை?'' என்றார் அவர் விளங்காமல்.

''பஞ்சாப் ஜனங்கள் ஏற்கெனவே மதவெறியர்களின் பிற்போக்குப் பிரசாரத்தினால் குழம்பியிருக்கிறார்கள். நீங்கள் ஒரு எழுத்தாளர். அறிவு ஜீவி. அவர்களை நீங்கள் தான் தெளிவு படுத்த வேண்டும். மாறாக நீங்களும் அதே குழப்பத்தில் அல்லது அதே பிரமையில் இருந்தீர்களானால்...''

''குழப்பம் என்று நீ சொல்கிறாய்! எனக்குக் குழப்பமேயில்லை. அரசியலும், மதமும் கலந்ததுதான் எங்கள் மரபு. வாழ்க்கை முறை. அதை எங்களால் மீற முடியாது.''

''இந்த ராணுவப் பிரவேசத்துக்கு எப்படிப்பட்ட பின் விளைவு இருக்கும் என்று நினைக்கிறீர்கள்?''

''ரொம்ப மோசமானதாக இருக்கும். ஒரு சீக்கியனைக் கோபப்படுத்துவதைப் போல மடத்தனம் வேறொன்றுமில்லை.''

''உங்கள் கோபம் நியாயமில்லாதது. மூடத்தனமான மதப்பற்றினால் ஏற்படுவது! உங்களைப் போன்றவர்களுக்கும் இந்த மாதிரி ஒரு கோபம் இருக்கும் என்பது நம்பும்படியாக இல்லை.

''அதுதான் ப்ராப்ளம்'' என்று கர்தார் ஸிங் அழுத்தமாக டேபிள்மேல் க்ளாஸை வைத்தார்.

''உங்களால் எல்லாம் புரிந்துகொள்ள முடியாது. நீ ஒரு ஹிந்து. உன்னுடைய வேர்கள் எங்கே புதைந்திருக்கின்றன என்று உனக்குத் தெரியாது. எனக்கு என்னுடையதைப் பற்றித் தெரியும். முந்நூறு வருஷத்து ஞாபகங்கள் — சமீபத்திய ஞாபகங்கள். அதிலிருந்து நாங்கள் விலகுவது கஷ்டம். இதோ பார், உன்னுடைய அழகான மண்டையை ஏன் கஷ்டப்படுத்திக்கிறே? நீ பேட்டிதான் காண வந்திருக்கே. உபதேசம் செய்ய இல்லே. நான் சொல்வதை எழுது!''

பேட்டி முடிந்து விட்டது என்பதற்கு அறிகுறியாகக் கர்தார் ஸிங் எழுந்தார்.

ரஞ்சனி சமாதானமில்லாமல் எழுந்தாள். கர்தார் ஸிங் அவள் கன்னத்தைச் செல்லமாகத் தட்டினார்.

''இட் இஸ் எ பிட்டி! இத்தனை அழகான பெண் அரசியல் பேச வந்திருக்கே. இன்னொரு நாளைக்கு வா. இலக்கியம் பேசுவோம். கவிதை பேசுவோம்.''

''ஆ. அது நல்லயோசனை!'' என்று ரஞ்சனி மெலிதாகச் சிரித்தாள். ''அப்போதாவது நீங்கள் நீங்களாகவே இருப்பீர்கள் என்று நம்புகிறேன்!''

மெல்லிய திகைப்புடன் கர்தார்ஸிங் அவளைப் பார்த்தார். புன்னகை விரிய அவளது இடையைப் பற்றியபடி கதவு வரை நடந்தார்.

- ''உனக்கு மிக அழகிய கண்கள், ஸ்வீட் ஹார்ட்! கவிதையை ரசிக்க மட்டும் வைத்துக்கொள். அரசியலைத் துழாவாதே!''

ரஞ்சனி மெள்ளத் தன்னை விடுவித்துக் கொண்டு வெளியே வந்தாள். ''கவிதை பேசுபவர்கள்தான் நம் நாட்டில் அதிகம் மிஸ்டர் கர்தார் ஸிங்! அந்தக் கூட்டத்தில் நானும் ஒருத்தி எதற்கு? தாங்க்யூ!''

திரும்பிப் பாராமல் விடுவிடுவென்று நடந்து வெளியில் இருந்த மோட்டார் சைக்கிளில் ஷ்யாம்கிஷோருக்குப்பின்னால் அமர்ந்து செல்லும் அவளைக் கர்தார்ஸிங் சுவாரஸ்யத்துடன் பார்த்தார். 'இவளை மறுபடி சந்திக்க வேண்டும்' என்று தமக்குள் சொல்லிக் கொண்டார்.

(தொடரும்)



கோழிக்கோடில் நகரப் பேருந்துகள் முழுவதும் தனியார் வசமே உள்ளன. கோழிக்கோடு மாணவ, மாணவியர் தாங்கள் மாணவர் என்பதற்கான அடையாள அட்டையை மட்டும் வைத்துக் கொண்டால் போதும். கட்டணத்தில் நான்கில் ஒரு பாகம்தான் அவர்களிடம் வசூலிக்கப்படுகிறது. இதனால் கட்டணச் சலுகை அட்டை பெறுவதால் ஏற்படும் அலையும் நேரம் மிச்சமாகிறது. இதுதாப்பிலும் ஆதாவசிய செலவுகளும் இல்லை.

- பிரசன்னா

இதோ எளிதில் உபயோகிக்கக்கூடிய ஒரு ஹேர்-டை, மிகமிகக் குறைந்த விலையில்!

கோத்ரெஜ் பவுடர் ஹேர் டை கான்ஸென்ட்ரேட் உங்களுக்காகவே விசேஷமான கலவை முறையில் தயாரிக்கப்படுகிறது.
இந்தியாவில் பவுடர் ஹேர் டை கான்ஸென்ட்ரேட் இது ஒன்றே. இது தானாகவே பரவுகிறது. ஆகவே நீங்கள் சிறிதளவே உபயோகித்தால் போதும்!
மிகமிக முக்கியம், நீங்கள் நம்பமுடியாத அளவுக்கு குறைவான விலையில் இது கிடைக்கிறது!



கலப்பது சுலபம்
இந்தப் பவுடரை சிறிதளவு நீருடன் கலக்கவும். உபயோகிப்பதற்கு இப்போது தயார்.



உபயோகிப்பது சுலபம்
இதை சிரமமின்றி இலேசாகத் தடவுங்கள். தானாகவே ஒரே சீராக, மென்மையாக முடிமீது பரவி விடுகிறது. உங்கள் கேசத்துக்கு இளமையான அழகுத் தோற்றத்தைத் தருகிறது!





இந்தியாவில் தானாகவே பரவும் பவுடர் ஹேர்-டை இது ஒன்றே.

Godrej
பவுடர்
ஹேர்-டை
கான்ஸென்ட்ரேட்

CLARIAN/GS/11/203 TAM

தரமோ நீங்கள் நாடுவது விலையோ உங்களுக்குப் பிடித்தமானது.

"சுனி! நம்ம பட்டாபிராமன் பெண். அதுதான் ஆறு மாதத்திற்கு முன்னாலே கல்யாணம் ஆச்சே..." என்று குமார் ஆரம்பிக்கும் போதே அவர் மனைவி சுனிதாவின் முகத்தில் ஒரு கேள்விக் குறி எழும்பும்.

"எந்த பட்டாபிராமனின் பெண்ணுக்கு ஆறு மாதத்திற்கு முன் கல்யாணம் ஆனது" என்று அவள் மூளையைத் தூண்டிப் பார்த்து நினைவு படுத்திக் கொள்ள முயன்றாள்.

"அதான் சுனி! போன வருஷம் எங்கள் ஆபீஸை விட்டுப் போய் அவன் வேறு வேலை கிடைக்காமல் கொஞ்ச நாட்கள் கஷ்டப்பட்டு விட்டு பிறகு நல்ல உத்தியோகமாய்க் கிடைத்து ஜாம் ஜாம் என்று இருக்கிறான் என்றேனே" என்று சுனிதாவுக்கு ஞாபகம் மூட்டும் வகையில் சில சந்தர்ப்பங்களை எடுத்துச் சொன்னான்.

"அந்த அசடு மங்களத்தின் கணவரா? அப்படி சொன்னால்தான் 'டக்'னு புரியும்! சிநேகிதியின் எந்த குணக் குறைவு முக்கியமோ அதைச் சொல்லாமல் நீங்கள் வேறு எதை எதையோ சொல்லிக் கொண்டிருந்தீர்களானால்...? அதற்கு இப்ப என்ன வந்தது?" என்றாள் சுனி. 'அசடு' என்று சிநேகிதிக்குப் பட்டம் கட்டியதில் தான் புத்திசாலி என்று அவளுக்கு ஒரு பெருமிதம்.

"சம்பந்திக்கும் பட்டாபிக்கும் எலியும், பூனையும் போலவாம். அவன் வந்து என்னிடம் ஒரு பாடு அழுது விட்டுப் போனான்" என்றார் குமார்.

"அழ வைக்கும் படியாக என்ன தகராறும்? சம்பந்திகள் ரொம்ப நவநாகரீகம்னு புகழ்ந்தீங்களே அந்தப் பெண்ணுக்குக் கலியாணம் ஆன போது. சம்பந்தி முறுக்கு மட்டும் போகவில்லையா?"

"கேளேன், எப்படித் தகராறு வந்தது என்று. சம்பந்தி தம் வீட்டுப் பிள்ளையை போன மாதம் ஏதோ விசாரித்துக் கொண்டு வரப் பட்டாபியின் வீட்டிற்கு அனுப்பினாராம். அன்று ஞாயிற்றுக் கிழமையாம். பட்டாபி வீட்டில் குடும்ப ஸகிதமாய் டீ. வி. யில் சினிமா படத்தை ரஸித்துக் கொண்டிருந்தாராம். சம்பந்தி வீட்டுப் பையன் வந்து சமாசாரத்தைச் சொன்னானாம். டீ. வி. யில் சினிமா படக் காட்சியின் ஈர்ப்பு. வந்த பையனை உட்காரு என்று கூடச் சொல்லவில்லையாம். ஒரு டம்ளர் காப்பிக் கூட கொடுக்கவில்லையாம். அந்தப் பையனும் அப்படி இப்படி என்று ஒரு ஐந்து நிமிஷம் நின்று பார்த்தானாம். யாரும் அவனைக் கவனிப்பதாக இல்லை. வந்த கவடு தெரியாமல் வீட்டிற்குத் திரும்பி விட்டான். 'இனி மேல் என்னைப் பட்டாபி வீட்டிற்கு அனுப்பினால் நான் போகமாட்டேன். வந்தவனுக்கு மரியாதை கூட கொடுக்கத் தெரியவில்லை. உட்கார் என்று கூடவா சொல்லத் தெரியவில்லை. மரியாதை தெரியாத மனுஷன்கள்" என்று ஹா! ஹூ! என்று கத்தினானாம். அவனும் உத்தியோகத்திலிருக்கிற பையன். நானும் தான் கேட்கிறேன். அப்படி என்ன டீ. வி. சினிமாவில் அவ்வளவு மோஹம்? இந்தச் சின்ன விஷயத்திலே சம்பந்திக்குள்ளே மனக் கசப்பு என்றால் நன்றாயிருக்கிறதா?" என்று குமார் நடந்த விஷயத்தைச் சுனிதாவிடம் சொல்லிக் கொண்டிருந்தார். பையனும், பெண்ணும் ஓடி வந்து டீ. வி. யைப் போட்டனர்.

ஏண்டி... இப்பதான் உங்க அப்பா டீ.வி. யினாலே வந்த தகராறைப் பற்றிச் சொல்லிக்



அப்பா! நல்ல அப்பா!

கொண்டிருக்கிறார். நீங்க நாலு கால் பாய்ச்சலா வந்து இரண்டு பேருமா டீ. வி. ஸ்விட்சைப் போடுகிறீர்களே'' என்று தாயார் கொட்டி முழக்கினாள்.

''அம்மா! அப்பா சொல்றதை நம்பாதே. 'டூப், டூப்'. அப்பா ஒரு பெரிய 'டூப்' மாஸ்டர். அவருக்கு டீ. வி.ன்னா கொஞ்சமும் பிடிக்காது. அதற்காக இப்படி ஒரு கதையைக் கட்டி விட்டிருக்கிறார்'' என்று பிள்ளையும், பெண்ணும் ஏகமனதாய்த் தகப்பனார் மீது பழி சுமத்தினர். அதோடு கலகலவென்று சிரித்து விட்டனர். இந்த நம்பிக்கை இல்லாத அபிப்ராயத்தை ஆமோதிப்பது போல் தாயார் சுனிதாவும் கள்ளத்தனமாய்ச் சிரித்தாள்.

டீ. வி. ஸ்கிரீனில் ஆஸ்திரேலியாவில் நடந்து கொண்டிருந்த உலகக் கோப்பை ஒருநாள் கிரிக்கெட் ஆட்டம் பற்றி வர்ணனையுடன் நடந்து கொண்டிருந்தது.

''இப்ப என்னடா டீ. வி.? பரீட்சைக்கு இன்னும் ஒரு மாதம் கூட இல்லை.'' என்றார் குமார்.

டீ. வி. ஸ்கிரீனில் நிழலாட ஆரம்பித்தால் யார் சொல்லுவதுதான் காதில் விழும்? யார் என்ன மட்டமாகப் பேசினால்தான் ரோஷம் வரும்?

இவற்றை இலட்சியம் செய்யாது. ''லவ்லி.. கபில்தேவ் மற்றொரு பவுண்டரி. ஸ்ப்லெண்டிட்'' என்று பையனும், பெண்ணும் இருக்கைகளிலிருந்து குதித்துக் கை தட்டி அனுபவித்தார்கள்.

''இந்த டீ. வி. வந்தாலும் வந்தது. வீடு கொள்ளை போனால் கூட தெரியாது போலிருக்கிறது'' என்று குமார் முணுமுணுத்தார்.

''டீ. வி.-யில் வளரும் இந்த முறையை இனி பிரம்மாவினாலும் திருத்த முடியாது'' என்று 'தீர்ப்பு' வழங்கினார்.


* * * * * *

ஞாயிற்றுக்கிழமை. முக்கியமான சினிமா காட்டப்பட்டது. குமார் குடும்பத்தினர் லயித்துப் பார்த்துக் கொண்டிருந்தனர். வெளியே போயிருந்த குமார் வாசல் கதவு தாள் போடாமல் திறந்திருப்பதைப் பார்த்து உள்ளே நுழைந்தார். மெதுவாக, வாசல் அறைக்குச் சென்றார். அலமாரியில் வைத்திருந்த கடிகாரத்தை எடுத்துத் தம் பாக்கெட்டில் போட்டுக் கொண்டு மறுபடியும் வெளியே போய் விட்டார்.

''இவர்களுக்கு இப்படி ஒரு பாடம் கற்பிக்க வேண்டும். டீ. வி. பார்க்கத்தான் பார்க்கிறார்கள். வாசல் கதவைத் தாழ்ப்பாள் போடக் கூடாதா? நான் வந்து போனது கூட இவர்களுக்குத் தெரியவில்லையே. இந்த மாதிரி எவனாவது திருடன் வந்து கொள்ளையடித்துக் கொண்டு போனாலும் இப்படித்தானே இவர்கள் கவனக் குறைவாய் இருப்பார்கள்'' என்று நினைத்துக் கொண்டே பார்க்கில் உட்கார்ந்து விட்டு டீ. வி.யில் சினிமா முடிந்தவுடன் வீட்டிற்குத் திரும்பி வந்தார். ஒன்றும் தெரியாதது போல் சாப்பிட்டார். வீட்டில் யாராவது கடிகாரம் திருட்டுப் போனதைக் கவனித்தார்களா என்று பார்த்தார்... ஒன்றுமில்லை.

''சுனி! அலமாரியிலே கடிகாரம் வைத்திருந்தேனே, எங்கே காணோம்?'' என்று குமார் தாமே கேட்டார்.

''அங்கேதானே இருக்கும். எங்கே போயிடும். சரியாகப் பாருங்கள்'' என்றாள் சுனி.



அப்ஸரஸ்

''இல்லையே. இருந்தால் உன்னை ஏன் கேட்கிறேன்?''

சுனி தன் பையனையும், பெண்ணையும் கூப்பிட்டு, ''அப்பா கடிகாரத்தை நீங்கள் பார்த்தீர்களா? காணுமே'' என்று பிளேட்டைத் திருப்பினுள்.

''எங்களுக்கு ஒன்றும் தெரியாது'' என்று அலட்சியமாய்ப் பதில் சொன்னுர்கள்.

குமார் எல்லோரையும் கூப்பிட்டார். ''நான் உள்ளே வந்து கடிகாரத்தை எடுத்துக் கொண்டு போயிருக்கிறேன். நீங்கள் யாருமே கவனிக்கவில்லை. இதுபோல பெரிய சாமான் ஏதாவது திருட்டுப் போனு என்ன ஆவது ...? ஹூம்'' என்ருர் சிடுசிடுத்துக் கொண்டே.

''அம்மா! அப்பா சொல்றதை நம்பாதே. வெறும் டூப். சும்மாவாவது தான் வந்ததாகவும் கடிகாரத்தைத் தூக்கிக் கொண்டு போனதாகவும் சொல்ருர். நாமெல்லாம் இங்கேயே தானே உட்கார்ந்து கொண்டிருந்தோம்.'' என்று சமாதானம சொன்னுர்கள்.

''பக்கத்து விட்டு மாமி ஏதோ கேட்க வந்தாள். அவளை அனுப்பி விட்டு வாசல் கதவைத் தாழ்ப்பாள் போட மறந்திருக்கணும். இன்னிக்கி ஏதோ நடந்ததுன்னு தினமும் அப்படித்தான் நடக்கும்னு சொல்றேளே.'' என்று மனைவி பட்டதும், படாததுமாய் 'ஏதோ மறந்து போச்சு' என்று சால் ஜாப்பு சொல்லி விட்டார்.

ஒருவாரம் கடந்தது. குமாருக்காக சுனிதா வாசலிலேயே காத்துக் கொண்டிருந்தாள். பிள்ளை ஒரு பக்கம், பெண் ஒரு பக்கம். அந்தச் செய்தியைச் சொல்லத் துடித்துக் கொண்டிருந்தனர்.

குமார் உள்ளே வந்து ஆபீஸுக்குத் தூக்கிச் செல்லும் கைப் பெட்டியை இன்னும் வைக்கக் கூட இல்லை. சுனி எதிரில் வந்து நின்றுகொண்டாள். பையனும், பெண்ணும் துவாரபாலகர்களாக இரு பக்கத்திலும் நின்ருர்கள்.

''இன்று மங்களம் வந்திருந்தாள்'' என்று சொல்லி நிறுத்தினுள் சுனிதா.

''பட்டாபி என்னிடம் சொல்லியாயிற்று. இன்று மங்களம் உன்னிடம் சம்பந்தி பிரலாபத்தைச் சொல்ல வந்து விட்டாளா?' என்ருர் குமார்.

''எல்லாம் அவர்களுக்குள் சுமுகமாய்ப் போய் விட்டதாம்.''

''என்ன?'' என்று குமார் ஆச்சரியமாய்க் கேட்டார். ''சுமுகமாய்ப் போய் விட்டதாமா?''

''பின்னே என்ன? பட்டாபி ஒரு கலர் டீ.வி. வாங்கிப் பெண்ணுக்குப் பரிசாகக் கொண்டு போய்க் கொடுத்தாராம். முறைத்துக் கொண்டு குதித்த பையன்தான் பட்டாபிக்கு ஷோடசோபசாரம் செய்தானும்'' என்று சுனிதா சொல்லி நிறுத்தினுள்.

கணவன் முகத்தில் அசடு வழிந்தது. பையனும், பெண்ணும் குமாரின் வலக்கை, இடக்கையை பிடித்துக் கொண்டனர்.

''அப்பா! பழைய பிளாக் அண்ட் ஒயிட் டீ.வியை எடுத்துக் கொண்டு கலர் டீ.வி. கொடுக்கிருர்களாம் 'வாங்கலாம்பா ... நீ நல்ல அப்பாவாச்சே'' என்று தாஜா செய்தபடியே கபில்தேவின் பௌண்டரியை ரஸித்த இந்த இரண்டு குழந்தைகளும் கொஞ்சின!.

1987ல் பாரதம் உலகிலேயே நட்சத்திரம் போல் பிரகாசிக்க (3)

1. தனிப்பட்ட முறையில் ஒவ்வொருவரும் முன்னுக்கு வரவேண்டும்
2. தினசரி அரிசிமாவில் வாசலில் கோலம் போடுவதால் ஈ மற்றும் எறும்புகளுக்கு உணவாகும்.
3. தினசரி காலையில் பசுவிற்கு கீரை கொடுக்க வேண்டும்.
4. நாம் உணவு சாப்பிடுவதற்கு முன்னால் காக்கைக்கு அன்னம் அளிக்க வேண்டும்.
5. நாம் உணவு சாப்பிட்டபின் நாய்க்கு உணவளிக்க வேண்டும்.
6. ஒவ்வொருவரும் தங்களுடைய இஷ்ட தெய்வங்களுக்கு மலர்களால் பூஜை செய்ய வேண்டும். அவ்வாறு செய்ய ஆரம்பித்தவுடன் அவர்களுடைய விதி இறைவன் அருளால் மாற்றப்பட ஆரம்பிக்கிறது.

   — (ஸ்ரீ அரவிந்த மஹரிஷி)
7. கார்த்திகை, பௌர்ணமி போன்ற விஷேச நாட்களில் விரதம் இருந்து அன்று முழுவதும் தருமம் செய்ய வேண்டும்.
8. அவரவர்களுடைய பிறந்த நட்சத்திரத்தில் கோவிலில் அர்ச்சனை செய்ய வேண்டும்.
9. ஸ்ராத்தம் (திதி) அவசியம் செய்யப்பட வேண்டும். அதன் நோக்கம், ஆன்மாவை இன்னும் மண்ணுலகுடனும் அல்லது பிராண உலகங்களுடனும் பற்றுக் கொண்டிருக்கச் செய்யும் அதிர்வகளைத் தொலைத்து விட்டுத் துரிதமாக 'சைத்தியலோகம்' சென்று அமைதி பெற உதவுவதே.

   — (ஸ்ரீ அரவிந்த மஹரிஷி)
10. அத்துடன் கிராண்ட் ஸ்வீட்ஸ் வாங்கி, நல்லவர்களுக்குக் கொடுக்க வேண்டும்.

மோகினித் திருக்கோலம்



ஸ்ரீ வேணுகோபாலன்

28

போர், ராஜ்யம் இவைகளால் என்ன சுகம்?

குரல் கேட்டதும் வர்மனும், சிந்துவும் தங்கள் குதிரைகளை இழுத்து மர அடர்வுகளுக்குள் சென்றார்கள்.

அங்கிருந்து நடந்ததை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

குரல் மட்டுமல்ல! குதிரை குளம்பின் படபடப்பும் கேட்டது.

அந்தத் தனி வழியில் வேன்லான் குதிரை மீது விரைவாகப் போய்க் கொண்டிருந்தான்.

அவன் தான் இஷ்டமாகப் பாடிக் கொண்டிருந்தான்.

அந்த நேரத்தில் பாட்டின் இவலை மர இடைவெளிகளிலெல்லாம் சென்று நிரப்பி ஒரு சின்ன அளவு பிரதித்துவனியைக் கொடுத்தது.

எழுந்திருக்கப் போன வர்மனை சிந்து கைப்பிடித்து அமர்த்தினாள். "அவரை இப்போது விட்டு விடுங்கள்!" என்றாள்.

வேன்லானும் குரலும் சேர்ந்து சிறிது தூரத்தில் மறைய

இருவரும் வெளி வந்தார்கள்.

"அப்பா! ஏதோ பிரஞ்சுக் காதல் பாட்டு பாடுகிறார்" என்றான் வர்மன்.

"காதல் பாட்டா? என் மனம் அவர் குரல் கேட்டே வேதனைப் படுகிறதே!" என்றாள் அவள்.

உண்மையில் அவள் கண் கலங்கியிருந்தது.

அவள் குதிரை அருகில் வர்மன் வந்தான்.

கண்களில் சிலிர்ப்புடன், சிந்துவின் நீண்ட மென் கரங்களை ஏந்திக் கொண்டான்.

"வீரரே!" என்றாள் அவள். "நம் தனிமையைக் கலைத்து விட விருப்பமில்லை. அதனால்தான் அவரை நிறுத்தச் சொல்லவில்லை!" என்றாள்.

அவள் முகம் பூராவும் உணர்ச்சி மயமாகி இருந்தது.

கண்கள் வெளி தூரங்களில் நீந்தி ஓடியிருந்தன.

அவளைப் பார்த்தாலே ஏதோ பிரமிப்பில் மூழ்கி இருந்தது போல் தோன்றியது.

"சிந்து" என்றான் தழுதழுக்கும் குரலில்.

அவள் பேசவில்லை.

இப்போது சிறிது நேரமாக ஒரு பெரிய லயிப்பில் இருந்தாள் அவள்.

அதுவும் அவர்கள் இருவரின் மனங்களும் திறந்த பிறகு அவளை அறியாமல் அவள் தன் இதயத்தில் எத்தனையோ மாறுதல்கள் நிகழ்ந்து கொண்டிருந்தன.

திடீரென்று அவளுக்கு ஒரு புதிய நோக்கு கிடைத்தது போலவும் இருந்தது.

அவளுள் மறைந்திருந்த சுய ஆசை, சுய ஆர்வம், சுய தாபம் எல்லாம் அவளை ஒரு சுய பரமான வாழ்க்கைக்கு இழுத்தன.

நாடு ஏன், ராஜ்யம் ஏன், ராஜாக்கள் ஏன், வஞ்சங்கள் ஏன்? சண்டைகள் ஏன்? எல்லாமே விடுத்து, எங்காவது ஒரு அமைதி பூமியில் ஒரு குடில் போட்டு ஒரு எளிய இனிய மென்மை வாழ்வு வாழலாம் போல இருந்தது.

"வீரரே!" என்றாள் அவள் தழுதழுப்பான குரலில்.

"சிந்து" என்றான் அவன்.

"வாழ்க்கையில் நான் தப்பிதம் செய்து விட்டேன் என்று தோன்றுகிறது" என்றாள்.

"என்ன தப்பிதம்!" என்றான் அவன்.

குதிரையை விட்டு வழுவினான். கடிவாளக் கயிற்றைப் பற்று இல்லாமல் கடாசினான்.

"இல்லை வீரரே! நிர்மலமாக, நிச்சிந்தை



யாக இருந்த உங்களை, நான் கெடுத்து விட்டேனோ என்று நினைக்கிறேன்'' என்றான் அவன்.

''நீங்களா? ஏன் என்னைக் கெடுக்கப் போகிறீர்கள்?''

''தெற்கு சீமைக் கிராமப்புறத்திலிருந்து வெகுளியாக இங்கே வந்தீர்கள்! உங்களை அனாவசியமாக ராஜாங்க விஷயங்களில் ஈடுபடச் செய்தேன்'' என்றான் அவன்.

''ஏன்? நல்லது தானே அது? நாட்டு நடப்பு தெரியாது இது வரை இருந்தேன். அதை கற்றுக் கொடுத்ததில் என்ன தப்பு?''

அவள் சிறிது நேரம் நிதானித்து விட்டு பேசினாள்.

''அறிவு ஒரு பந்தம்! வீரரே.''

ஆச்சரியமுடன் பார்வையைத் தூக்கினான் அவன்.

''அது ஒரு விலங்கு! சிறை! அறிவு குழலும் போது தான் நமக்கு அமைதி கிடைக்கிறது''

''தத்துவமா! சிந்து!''

''தத்துவமோ இல்லையோ! என் அனுபவமாகத் தோன்றுகிறது. இப்போது பாருங்கள். நாட்டைப் பற்றி நானும் சொன்னதால் தானே உங்களுக்கு அதைப் பற்றி கவலை வருகிறது.''

''ஒரு விதத்தில் உண்மை.''

''இதைச் சொல்லாமல் இருந்தால் நீங்கள் புதுக் கவலைப் பட்டிருக்க மாட்டீர்கள் அல்லவா?''

''அதுவும் உண்மை.''

''அறிவை வளர்த்துக் கொண்டே போய் விட்டு கவலைகளையும் ஏன் சேர்த்துக் கொண்டே போக வேண்டும்? ஊகூம்! வேண்டாம் இது! வேண்டாம்!''

என்று சொல்லி எல்லாம் துறந்தவன் போல் நிழல் ஓரத் தரையில் அமர்ந்தான் அவன்.

''ஊகூம்'' என்று, புன்னகை சாய்ந்து, மினிர்வான முகத்துடன் வர்மன் அவனை நெருங்கினான்.

அதற்குள் அவள் தனது வாளையும், இடைக் கச்சையையும் அவிழ்த்துப் போட்டிருந்தாள்.

முகத்தில் என்ன விரக்தி தோய்ந்திருந்தது!

வியப்புடன் வர்மன் அவனை நோக்கி அடியிட்டுச் சென்றான்.

அந்த நேரம் தரையில் கிடந்த கச்சையிலிருந்த உருண்டு வரும் ஓலை மீது அவன் கண் பாய்ந்தது.

எடுத்து அதைப் பிரித்தான்.

உள்ளே அதன் வாசகங்களைப் படிக்கும் போது உடல் சிலிர்த்தது.

''சிந்து!'' என்றான் பரபரப்புடன்

* * * * *

ராபர்ட் கிளைவ் அந்த இரைச்சலுக்குக் காரணத்தைச் சீக்கிரம் தெரிந்து கொண்டான்.

உள்ளே அவசரமாக வந்த சிப்பந்திகள் ''ராஜா சாகிப் தூது ஆள் அனுப்பியிருக்கிறார்!'' என்று சொன்னார்கள்.

''உடனே ஆபீஸ் அறைக்கு அழைத்து வா.'' என்று சொன்ன கிளைவ், எழுந்து தாங்கலாக நடந்து, அடுத்த அறைக்குப் போனான்.

மேஜை முன்னால் உட்கார்ந்து, தனது காயம் பட்ட காலை மறைப்பதற்காக, மேஜை மேலே விரிப்பைப் போட்டு முன்னால் தரை வரை தொங்கச் செய்தான்.

கறுக்கான உடையுடன் நிற்கும் அதிகாரிகளைத் தன்னோடு உட்கார்த்தி வைத்தான். களைப்போ, சோர்வோ தெரிந்தவர்களை உள்ளே போகச் சொன்னான்.

சிப்பந்திகள் தூதுவரை அழைத்து வந்தார்கள்.

நீள அங்கி தரித்த நவாப் ராணுவ அதிகாரி உள்ளே வந்தார்.

நவாப் ராஜா சாகிப் அனுப்பித்த தூதுவன் என்ருர்.

கோட்டை அதிகாரியிடம் அனுமதி வாங்கி உள்ளே வந்திருந்தார்.

கிளைவைப் பார்த்ததும் முகமன் தெரிவிக்க, கிளைவ் எழுந்து நின்று கை குலுக்கினன்.

அதிகாரியின் பெயர் அடில் கான்!

கிளைவ் ஒரு சிறுவனு?

அடில் கானின் பதிந்த பார்வை அப்படியே இருந்தது. லேசாக மீசை மேல் புன்முறுவல் தோன்றியது.

''என்ன வேண்டும், தளபதி!'' என்ருன் கிளைவ் ஒரு கம்பீரக் குரலில்.

அதில் இடியின் கடினம் இருந்தது.

அடில்கான் நிதானப்பட்டார். உண்மையில் இந்த கிளைவ் இரண்டு சண்டைகளில் ஜயித்திருப்பான். ஒரு கடின இதயத்தின் கடுங் குரல் கேட்கிறதே என்று நினைத்தான்.

''இந்தாருங்கள்! நவாப் தங்களுக்கு அனுப்பிய கடிதம்'' என்று கிளைவிடம் அவன் ஒரு கடிதத்தை நீட்டினன்.

கிளைவ் வாங்கினன்.

கடிதத்தைப் பிரித்தான்.

படித்தான்.

பிறகு சர்வ சாதாரணமாக மூடினன்.

''இந்தா'' என்று அழைத்தான்.

சிப்பந்தி ஓடி வந்தான்.

''கோப்பை கொண்டு வா.''

கோப்பை வந்தது.

சீமை மது அது பூராவும் நிரம்பியிருந்தது.

பாட்டமான திராட்சையின் வாசனை மெள்ள லகரியாகச் சுழன்றது.

''இந்தா''.

சிப்பந்தி நின்ருன்.

''எல்லோருக்குமே கொடு! நவாப் தூதுவர் வந்திருக்கிருர். மகிழ்ச்சி அல்லவா!''

வெண்கலக் கோப்பைகள் வெளி வந்தன. அங்கே கூடியிருந்தோர் ஒவ்வொருவர் கையிலும் சென்றன.

அடில் கான் திகைப்புடன் அந்த நடவடிக்கைகளைக் கவனித்தார்.

இருபது நாள் ஆகிவிட்டது.

இன்னுமா சீமை மது மிச்சம் இருக்கிறது.

ஆச்சரியம்! எல்லோரும் தடையின்றிக் குடிக்கிருர்களே!

''தளபதி சாப்ஸ் ஏதாவது வேண்டுமா? அல்லது முந்திரி?''

''போதும். போதும். துரை!''

''இன்னெரு கோப்பை?''

''போதும், போதும். துரை!''

கிளைவ் சிப்பந்தியை விடவில்லை. அங்குள்ள தனது அதிகாரிகளுக்கு மீண்டும் கோப்பையை நிரப்பச் சொன்னன்.

அடில்கான் மனத்துக்குள் கணக்குப் போட்டுக் கொண்டிருந்தான்.

அருள்வாக்கு

ஜீவிக்கிறதற்கு **basic** ஆக இருப்பது சாப்பாடு தானே? அதனால் இந்த ஸ்வயம்பாகத்துக்குத்தான் **basic education** லேயே (அடிப்படைக் கல்வியிலேயே) முதலிடம் கொடுத்து ஆண் பெண் அனைவருக்கும் சமையல் அறிவைக் கொடுத்து விட வேண்டும். ஆமாம்! ''சமய அறிவைக் கொடுக்கும்படியாக இப்போதிருக்கிற ஸெக்யுலர் எஜுகேஷனை மாற்ற வேண்டும்'' என்கிற நான் தான் இப்போது ''எல்லாவற்றிற்கும் முந்தி சமையல் அறிவைக் கொடுக்கணும். எல்லாரையும் சாப்பாட்டுராமன் ஆக்கணும்'' என்கிறேன். ஆஹாரத்தைப் பொருத்துத் தான் குணங்களும் மனப்பான்மையும் உண்டாகிறதால், சமய ஞானத்தில் பிடிப்பு உண்டாவதற்கே சமையல் ஞானத்தை உண்டாக்க வேண்டியதாகிறது.

நேரு **Kitchen Religion** 'அடுப்பங்கரை மதம்' என்று ஹிந்து மதத்தைப் பற்றி அடிக்கடி சொல்கிருர். அப்படிச் சொல்கிறபோது தாம் ஹிந்து மதத்தை ரொம்ப நன்ருகப் பரிஹாசம் செய்கிரேரும் என்று நினைக்கிருர். வாஸ்தவத்தில் அவர் தான் ஹிந்து மதத்தின் ஸாரத்தைப் புரிந்து கொண்டு அதற்கு ஸர்ட்டிபிகேட் தருகிருர். நம் மதம் **Kitchen Religion** தான். அடுப்பங்கரை மதம் தான்.

வேதம் தான் நம் மதத்துக்குப் பிரமாண நூல். வேதத்துக்கும் சிரஸில் இருப்பது உபநிஷத். அதிலே ஒரு உபநிஷத்திலே — ஆத்மா, பிரம்மம் என்று நமக்குப் புரியாத தத்துவங்களைச் சொல்கின்றனவே, அந்த உபநிஷத்துக்களில் ஒன்றிலேயே — நம் மதத்தை அடுப்பங்கரையாகத் தான் ஆக்கி வைத்திருக்கிறது...

''தூய் உணவில் ஆரம்பி. அது தான் குணம் தூய்மையாவதற்கு வழி. இப்படி சித்த சுத்தி ஏற்பட்ட பின்தான் படிப்படியாக ஈஸ்வர ஸ்மரணம், கட்டுக்கள் விடுபட்ட மோக்ஷம் எல்லாம் ஸித்திக்கும்'' என்று ஸநத்குமாரரே **Kitchen religion** ல் தான் ஆரம்பிக்கிருர்.

அதனால் அடிப்படைக் கல்வி, ஆதாரக் கல்வி என்று பெரிசாகச் சொல்லிக்கொண்டு இப்போது ஆரம்பிக்கிருர்களே அதில் ஜீவாதாரமாக, பண்புகளுக்கும் ஆதாரமாக இருக்கிற ஸ்வயம்பாக போதனையைச் சேர்த்து விட வேண்டும் என்கிறேன்.

ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்





கோபு: கடல் பொங்கினா சேதம்! ஆனால் அடுப்புல சாதம் பொங்கினாத்தான் சாப்பாடு! இதிலேயிருந்து என்ன தெரியுது?
பாபு: வெய்யில் இன்னிக்கு ஜாஸ்தின்னு தெரியுது

— பாஸ்கர்.

கடிதத்தைப் படித்ததும் இந்த இளைஞன் கிளைவ் எந்த விதச் சலனமும் செய்யவில்லையே. குஷியாக இருக்கிறானே! ஒரு வேளை மனத்தில் முடிவு செய்து விட்டானோ?

நேரம் ஆவது தெரிந்ததும், ''துரை!'' என்றான் அடில்கான்.

''என்ன?'' என்றான் கிளைவ்

''பதில் ஏதாவது உண்டா?''

''ஓ... உங்கள் கடிதமா? ...அதையே மறந்து விட்டேனே...!. என்ன பதில் எழுத வேண்டி இருக்கிறது... நீங்களே போய் வாயால் சொல்லுங்கள்!''

''என்ன சொல்ல?''

''கிளைவ் துரை பணத்தின் மீது ஆசை வைக்கவில்லை என்று!''

திடுக்கிட்டான் அடில்கான்.

''இதுதான் முடிவா?''

''ஆமாம். நீங்கள் போய்ச் சொல்லலாம்.

''சரி!'' என்று எழுந்தான் அடில்கான்.

விடைபெற்று காலடி வைத்தவனை ''தூதரே!'' என்று நிறுத்தினான் கிளைவ்!

''நான் சொன்னதை உங்கள் ராஜா சாகிப்பிடம் தெரிவியுங்கள்! உடனே முற்றுகையை விட்டு அவர் திரும்பிப் போக வேண்டும். இல்லாவிட்டால் படை பூராவும் சின்னா பின்னமாக்கப்படும். ராஜா சாகிப்பின் தலையும் கொய்யப்படும். நான் ஒரு வெள்ளைக்காரன்! நினைவில் வைக்கச் சொல்லுங்கள்!''

தூதுவனுக்குச் சொந்தமாக பதில் சொல்ல ஆத்திரம் ஓடியது. ஆனால் அதைச் சொல்லவில்லை. அதற்குப் பதிலாக கடைவாயை வெளிப்படையாக அரைத்தான்.

ஒரு வணக்கம் தெரிவித்து விட்டு விடை பெற்றான்.

அவன் போனதும் எல்லோரும் சிரித்தார்கள்.

உண்மையில் கிளைவ் ஒரு நாடகமாடி இருந்தான்.

உள்ளே மதுவின் சேமிப்பு மிகவும் குறைந்து விட்டது.

அடில் கானுக்கு மட்டுமே முழுக் கோப்பை மது கொடுக்கப்பட்டது.

கிளைவ் உட்பட மற்ற எல்லோருக்கும் முக்காலும் நீர் கலந்த மது வழங்கப்பட்டது.

மறைவிலிருந்த சங்கரசுப்ரமணியம் கிளைவிடம் வந்தான்.

''துரை! உங்களுக்கு அவன் என்ன கடிதம் எழுதியிருந்தான்?'' என்றான்.

''எனக்கு ஐந்து லட்சம் ரூபாய் லஞ்சம் கொடுக்கிறார்களாம். கோட்டைப் பொறுப்பை உதறி விட்டு நான் போய் விட வேண்டுமாம்!''

சொல்லி பிரமாதமாகச் சிரித்தான் கிளைவ்.

மற்ற எல்லோரும் அதில் கலந்து கொண்டார்கள்.

கிளைவ் உடனே, ''தேங்க்'' என்றான். ''நடந்ததை எல்லாம் ஸான்டர்ஸிடம் சொல்லு. என் திடத்தை அவர் எப்போதும் நம்பலாம். ஆனாலும் ஒரு நெருக்கடியில் பணபலம் அல்லது ஆள் பலம் ஏதாவது வேண்டியிருக்கிறது. எனக்கு இரண்டும் கிடைத்தால் கூட நல்லது'' என்றான்.

சங்கர சுப்பிரமணியம் விடை பெற்றான்.

கிளைவ் அரை விநாடி உட்கார்ந்திருக்கவில்லை.

''தாமஸ்'' என்றான்.

''எஸ் ஸார்!''

''நாளை நிச்சயம் தாக்குதலை எதிர்பார்க்கிறேன். கோட்டை சரியாக இருக்கிறதா?''

''இருக்கிறது.''

''ஆள் பலம்?''

''இருநூறு சிப்பாய்கள் நோயாளிகள்''.

''ஓ'' என்றான் கிளைவ். அந்த விஷயம் அவனுக்குக் கசப்பாக இறங்கியது. ''வாருங்கள். பரிகங்களைப் பார்ப்போம்!'' என்றான்.

எல்லோரும் கோட்டைச் சுவருக்குச் சென்றார்கள்.

கிளைவ் தனது காயத்தைப் பாராமல் விறுவிறுப்பாக சாரத்தில் ஏறி பரிகங்களைப் பார்த்தான்.

இந்தியச் சிப்பாய்தான் இரண்டு மூன்று என்று விரவி நின்று கொண்டிருந்தார்கள்.

தெம்பும், சகிப்புத் தன்மையோடும் அவர்கள் நிற்பதைப் பார்த்து கிளைவின் கண் சிறிது கலங்கியது.

''போதுமான ஆட்கள் இல்லை. எனினும் களைக்க தளரவில்லை. இவர்களுக்கு நாம் முழு உணவு கூடக் கொடுக்காமல் பங்கிட்டுக் கொடுக்கிறோம்'' என்றான் தாமஸிடம்.

இரண்டாவது பரிகத்தில் கற்கள் பெயர்ந்து கிடப்பதைப் பார்த்து மலைத்து நின்றான் கிளைவ்.

(தொடரும்)







பரோபகார ஆவி

மாண்ட்யா அருகே காரில் அதிவேகமாய் பிரயாணம் செய்து கொண்டிருந்தான் என் நண்பன். வெள்ளை உடை அணிந்த பெண் ஒருத்தி வழிமறித்து சற்று தூரத்தில் லாரி விபத்து நடந்ததால் சாலையில் பெரிய எண்ணெய் கொட்டியிருப்பதாகக்கூறி மெதுவாகப் போகும்படி எச்சரித்தாள். ஒரு கிலோ மீட்டர் தள்ளி அவள் சொன்னது போலவே நிகழ்ந்திருந்தது. எச்சரிக்கை செய்தது முன்பு

வாசகர் பங்கு

கார் விபத்தில் இறந்து போன ஒரு பெண்ணின் ஆவி என்று பிறகு தெரிந்தது. பல பிரயாணிகளை இது போல் எச்சரித்துள்ளதாம்.

டி. என். ராம்பிரஸாத், சென்னை—41.

நள்ளிரவு அனுபவம்

இருபது ஆண்டுகளுக்குமுன் நள்ளிரவில் மயிர் பொசுங்கும் வாசனை என்னை எழுப்பியது. கண் திறந்த போது எதிரே ஒரு நெடிய உருவம். பயந்து நடுங்கி தாலிக் கயிற்றில் இருந்த சிலுவையைக் கண்களில் ஒற்றிக்கொண்டு இயேசுவைதியானித்தேன். சற்று நேரத்தில் வாசனை மறைந்து, உரு வமும் போய் விட்டது. மறு நாள் என் மகளுக்குப் அதே அனுபவம் ஏற்பட்டது. சீக்கிரமே நாங்கள் வீடு மாற்றிக் கொண்டு வேறு இடத்துக்குப் போய் விட்டோம்.

திருமதி ஜிரேஸ், பொறையார்.

தோட்டத்தில் ஏவல்

புது வீட்டில் குடி புகுந்தது முதல் ஒருவர் மாற்றி ஒருவருக்கு உடம்பு சரியில்லாமல் படுத்திக் கொண்டிருந்தது. சாஸ்தா உபாசகரான நண்பர் ஒருவர் வீட்டுத் தோட்டத்தில் ஏவல் இருக்கிறது என்று கண்டு பிடித்து, பூஜை செய்து, கிணற்றுப் பக்கம் பூமிக்கடியில் நான்கடி ஆழத்தில் புதைத்து வைத்திருந்த தலைமயிர் அடங்கியதகரடப்பாவைக் கண்டெடுத்து அகற்றினார். அதன் பிறகு தான் வீடு விடாயிற்று..

புதியூர் பாலு, எரவான்சேரி.

சுழலில் மூழ்கிய சேலை

திருமணத்திற்கு முன்னரே இறந்து விட்ட எங்கள் வீட்டுப் பெண்ணின் நினைவாக ஆண்டிற்கு ஒரு முறை குறிப்பிட்ட தேதியில் புடவை வாங்கிப் படைப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தோம். எனக்குத்திருமணமான புதிதில் இப் பழக்கத்தை மறந்து விட்டேன். என் வீட்டிற்கு வந்த பெண் விருந்தாளி மீது 'சாமி' வந்து விட்டது. அவள் புடவை படைக்கும் பழைய பழக்கத்தைத் தொடரு மாறு நினைவூட்டினாள். அவள் சொன்னபடி ஆற்றில் புதுப் புடவையைப்போட்டவுடன் திடீரென்றுசுழல்தோன்றிசேலையைஉள்ளே 'வாங்கி'க் கொண்டு விட்டது.

எஸ். அருள், ஹைதராபாத்—43.

தாக சாந்தியும் ஆத்ம சாந்தியும்

எங்கள் உறவினர் ஒருவர் காலமான போது ஊர் வழக்கப்படி பத்து நாட்களும் பலகாரங்கள் செய்து படைத்து வந்தோம். ஓரிரவுஎங்களுள் ஒருவரது கனவில்தோன்றி தண்ணீர் படைக்காததால் தனக்கு விக்கல் எடுத்ததாகக் கூறினார் காலமானவர். உண்மையில் நாங்கள் தண்ணீர் வைக்க மறந்திருந்தோம்!

சி. ரா. கண்ணன், இரணியல்.

கனவால் கிடைத்தது தோடு

வீட்டைத் தலைகீழாக்கித் தேடியும் கிடைக்கவில்லை. காணமற் போயிருந்த அந்த

ஒற்றைக் காதுத் தோடு. என் மாமியாரின் கனவில் அவருடைய இறந்து போன நாத்தனார் தோன்றி வீட்டின் கொல்லைப் புறத்தில் உள்ள எலி வளையில் தோடு இருப்பதாகச் சொன்னாராம். அவர் கூறியதை வைத்துக் கொண்டு அங்கு சென்று பார்த்ததும் இரண்டடி ஆழத்தில் எலி வளைக்குள் கிடந்த தோடு கிடைத்தது.

கி. சகுந்தலா, ஒரத்தநாடு.

'டொக்! டொக்!'

தாய் மாமன் காலமான பத்தாம் நாள் இரவு முழுக்கடையில் 'டொக்டொக்'கென்று சப்தம். கிணற்றடி வரை சென்று தேய்ந்து மறைந்தது அவ்வோசை. எழுந்து பார்த்தால் உருவம் எதுவும் தெரியவில்லை. மாமா கைத்தடியுடன் நடப்பது போலவே இருந்தது அந்த ஓசை. வெளியே படுத்திருந்த எனக்கு மட்டுமின்றி உள்ளே தூங்கிக் கொண்டிருந்தவர்களுக்கும் அவ்வோசை கேட்டதாம்!

ஏ. நடராஜன், புதுக்கோட்டை—1.

எச்சரித்தது யார்?

லாரியில் க்ளீனராக வேலை பார்க்கிறான் என் நண்பன். ஓர் இரவுப் பிரயாணத்தில் ஆட்டுக் குட்டிகளை ஏற்றிக் கொண்டு சென்ற போது திடீரென்று விசில் சப்தம் கேட்கவே ஓட்டுனரிடம் வண்டியை நிறுத்தச் சொல்லி விட்டுக் கீழே இறங்கியிருக்கிறான். அடுத்த வினாடியே எதிர்த் திசையிலிருந்து வந்த பெட்ரோல் லாரி ஒன்று மோதி ஆடுகளும் ஓட்டுனரும் உரு தெரியாமல் போய் விட்டனர். கலங்கிப் போன என் நண்பனின் புத்தி தெளிய இரண்டு ஆண்டுகள் ஆயிற்று. இன்று வரையும் மனித சஞ்சாரம் இல்லாத இடத்தில் விசில் அடித்து எச்சரித்தது யார் என்று கண்டு பிடிக்க முடியவில்லை!

கே. இராசசேகரன், மதுரை—7.

கனவல்ல நிஜம்

அடுத்த வீட்டுப் பெண்ணுடன் திருப்பதி போய்விட்டு இரவில் திரும்பிக் கொண்டிருந்தபோது அவள் தூக்கத்தில் 'திருடன்! திருடன்! எங்கள் வீட்டில் கொள்ளை' என்று அலறினாள். அவளை அமைதிப் படுத்தி அழைத்துக் கொண்டு வந்தோம். ஊர் வந்து பார்த்ததும் உண்மையிலேயே எங்கள் இருவர் வீட்டிலும் முந்தைய இரவு திருட்டுப் போயிருப்பது தெரிந்தது.

எஸ். பி. ஜானகி, மதுரை.

மறக்க முடியாத மடில்டா


என் மகளின் தலைப் பிரசவ சமயம். இரவு பதினோரு மணிக்கு அவளுக்கு வலி எடுத்தது. வீட்டிலோ எங்கள் இருவரைத் தவிர யாரும் இல்லை. வாசலுக்கு ஓடினேன். தெய்வம் போல நர்ஸ் ஒருத்தி நின்று கொண்டிருந்தாள். தன் பெயர் மடில்டா என்றாள். விடிவதற்குள் அழகான பெண் குழந்தை பிறந்தது — சுகப் பிரசவம். மடில்டாவுக்கு சர்க்கரை, பழம், பணம் எல்லாம் எடுத்துக் கொண்டு வந்து பார்த்தால் அவளைக் காணோம்! மடில்டா என்ற நர்ஸ் ஒருத்தி இரண்டாண்டுகளுக்கு முன் தற்கொலை செய்து கொண்டு இறந்து விட்டாள் என்று எங்கள் வேலைக்காரி சொன்ன போது எனக்கு சப்த நாடியும் ஒடுங்கி விட்டது. இப்போது மகளும் பேத்தி மடில்டாவும் சுகமாய் இருக்கிறார்கள்!


கே. வனஜா, சென்னை—4.

இருளில் கரைந்த உருவம்

ஓரிரவு யதேச்சையாக விழித்துக் கொண்ட போது வெள்ளை சட்டையும், மடித்துக் கட்டிய வெள்ளை வேஷ்டியுமாக ஓர் உருவம் என் கால் மாட்டிற்குச் சற்று







வலது புறமாக நிற்கக் கண்டேன். சற்றைக்கெல்லாம் 'அது' நகர்ந்து என் கால்மாட்டிற்கு வந்தது. திரும்பவும் பழைய இடத்துக்குச் சென்றது. திருடன் என்று நினைத்து அலறினேன். அம்மா விழித்துக் கொண்டு டார்ச்சை ஆன் செய்து பார்த்தாள். யாரையும் காணவில்லை. வெளிச்சத்தில் என் கால் மாட்டில் பாட்டி படுத்திருப்பது தெரிந்தது. அப்படியானால் அந்த உருவம் தரையில் கால் பாவாமல் அல்லவா வந்திருக்க வேண்டும்! நினைத்தபோதே உடம்பெல்லாம் வியர்த்து விதிர் விதிர்த்துப் போயிற்று.

வி. ராஜசிங், சென்னை—98.

கடைசி வார்த்தைகள்

கல்லூரி நாட்களில் பிறருடைய நடை உடை பாவனைகளை அப்படியே கேலியாகச் செய்து காட்டும் பழக்கம் எனக்கு இருந்தது. ஆனால் எவ்வளவு முயன்றும் குரலை மட்டும் மாற்றிப் பேச என்னால் முடியவில்லை.

ஒரு நாள் மத்தியானம் 2.30 மணி இருக்கும். ஏதோ ஒரு உந்துதலின் பேரில் என் தோழியிடம் சென்று "நீ நன்றாகப் படித்துப் பெரிய வேலைக்குப் போக வேண்டும் கலா. அம்மாவைக் கவலைப்படாமல் இருக்கச் சொல்" என்றேன். அவள் ஆச்சரியப்பட்டுப் போனாள். தன் அப்பாவைப் போலவே அதே குரலில் நான் பேசியதாகச் சொன்னாள். அன்றே மாலை அவளுக்குத் தந்தி வந்தது, மதியம் 2.30 மணி அளவில் அவளது தந்தை இறந்து விட்டதாக! என் மூலமாக தன் மகளிடம் அவர் பேசி விட்டாரோ?

கௌசல்யா ஸ்ரீவத்ஸலன், கோவை—4.

மீண்டும் பிறந்தான்


திருமணமாகி ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு அருமையாய்ப் பிறந்த நண்பரின் குழந்தை ஓடி ஆடும் பருவத்தில் கடும் ஜுரம் கண்டு இறந்து விட்டான். குழந்தையின் தாய் உடலும் மனமும் பட்டுப் போனாள். இனி அவளுக்குக் குழந்தையே பிறக்காது என்று மருத்துவர்கள் கூறிவிட்டனர். சில காலம் கழித்து அந்தத் தாயின் முன் அவளுடைய குழந்தை ஆவி வடிவில் தோன்றி சமாதானம் சொன்னதாம். அன்று முதல் அவள் உடலும் மனமும் தேறலாயின. சீக்கிரமே கர்ப்பம் தரித்தாள். கருவுற்ற நாளிலிருந்து இறந்த குழந்தையின் ஆவி அவள் முன் தோன்றுவது நின்று போயிற்று. முதல் குழந்தையே இரண்டாவதாக உருவெடுத்தது என்று அந்தத் தாய் தீவிரமாக நம்புகிறாள்.

ஆர். ஆர். பூபதி, வேடசந்தூர்.

ராகமாலிகா வழங்கும் பட்டுப் புடவையைக் குலுக்கல் முறையில் பரிசாகப் பெறும் அதிர்ஷ்டசாலி:

வி. ராஜசிங்,
நெ. 39, பெஸ்ட் அண்டு கிராம்ப்டன் இன்ஜினீரிங் லிட்.,
பி. டி. எஸ். ஃபாக்டரி, விட்கோ எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை—98.

அடுத்த வாரம்



விஷம் போல் ஏறும் விலைவாசி





VVD
COCONUT OIL
V.V.D & SONS

ஆகாச கங்கை

16

அவர்களுடைய திருமணம் செட்டா நகர் ஆலயத்தில் டேப் ரிகார்டரில் மேளம் முழங்க, மந்திரச் சுருக்கத்துடன் நடந்து முடிந்தது.

திருமணம் இரைச்சலோடு நடக்கவில்லை. தாரக்ராம் தம் நெருங்கிய நண்பர்களையும், கிட்டிய உறவினர்களையும் கூட அழைக்கவில்லை. பிள்ளை வீட்டிலிருந்து பிள்ளை மட்டுமே வந்திருந்தான். அவனுக்கு வேண்டியது அவன் ஒருவன் தானே? இதை அவருக்கு அரவிந்தன் கடுமையாகவே உணர்த்தி விட்டான்.

* * * * *

கோவிலிலிருந்து திரும்புகையிலதான் முதன் முதலாக மாயா பேசினாள். ஒரு காரில் வைதிகர்களும், திருமணத்திற்கு இன்றியமையாத சில பொருள்களும் செல்ல, இன்னொரு பெரிய காரில் மற்றவர்கள் திரும்பினார்கள். முன் ஸீட்டில் தாரக்ராம். பின்னால் ஒரு ஓரத்தில் அரவிந்தன். நடுவே மாயா. இன்னொரு ஓரத்தில் இருக்கிற சின்ன உடலையும் குறுக்கிக் கொண்டு ராஜம்மா ஒடுக்களித்து உட்கார்ந்திருந்தாள்.

''ஏம்ப்பா, இதை இவன் என் கழுத்திலே கட்டத்தான் மலபார் ஹில்ஸ்லேந்து செட்டா நகர் வந்தோமா?''

''ஆமாம்மா'' — தாரக்ராம்.

''தட் மீன்ஸ் ஹி இஸ் நௌ மை ஹஸ்பண்ட்! சுஸ் இட் நாட்?''

''யெஸ் டார்லிங் மாயா'', தாரக்ராமுக்குத் தொண்டை அடைத்துக் கொண்டது.

''உன் பேரென்ன... மறந்துட்டேன்... இரு... கொஞ்சம் இரு... யெஸ் அந்தன்... நோ நோ அவிந்தன்... சீ... நீயே சொல்லு.''

''அரவிந்தன்.'' மெல்லிய குரலில் அரவிந்தன் பேசினான்.

''அப்ப இனிமே நான் மாயா அரவிந்தன்.. மாயா தாரக்ராம் இல்லே...''

யாரும் பதில் சொல்லவில்லை.

''எம்பா சும்மா இருக்கீங்க? ஐ'ம் நோ மோர் மாயா தாரக்ராம்!''

''கரெக்ட்...''

''எனக்குப் புதுப் பேரு பிடிச்சிருக்கு... ஆமாம், நீயும் அப்பா மாதிரி, நெனைச்ச போதெல்லாம் வாட்டரும் டாப்ளட்டுமா வந்து பிராணனை வாங்குவியா?''

''மாட்டேன்.''

''பிராமிஸ்?''

''காட் பிராமிஸ்...''

''நான் உன்னை நம்பறேன். என் டாடிக்கு என்ன ஹாபி தெரியுமா? எனக்குச் சிரப்பு, ஊசி, வெள்ளை, மாத்திரைகளைத் தர்றது தான்... இப்ப எனக்கு விடுதலை கெடைச்ச மாதிரி இருக்கு...!''

யாரும் பதில் சொல்லவில்லை.

மாயாவுக்குத் திடீரென்று கண்கள் செருகின. கொட்டாவிகள் ராகம் போட்டு வந்தன. அவனையுமறியாமல் சாய்ந்தாள்.

தன் தோள் மீது அவள் தலை கிடப்பதைக் கண்ட அரவிந்தன், இன்னும் சற்றே நகர்ந்து, மல்லிச் சென்டைத் தூக்குவது போல மாயாவின் தலையைத் தூக்கித் தன் மடியில் போட்டுக் கொண்டான். இதை ஓரப் பார்வையால் கவனித்த ராஜம்மா மெய் சிலிர்த்துப் போனாள். இந்த அன்பும், அரவணைப்பும் இருந்தாலே போதும், மாயா குணம் அடைய, அப்பா பணத்தால் வாங்க முடியும் என்று நினைத்து ஏமாந்து போனார். கணவன் குணத்தால் வாங்க முயற்சி செய்கிறான். தெய்வம் அவர்களை வாழ வைக்கட்டும். ராஜம்மா மறு பக்கம் பார்த்து, கண்களின் கனத்தைப் புடவைத் தலைப்பால் லேசாக்கினாள்.

* * * * *

அத்தனை பெரிய பங்களாவில் தோட்டக்காரன், டிரைவர்கள், வீட்டைச் சுத்தம் செய்கிறவன் என்று பலர் இருந்தும் இடம் வெறிச்சோடியது. பாம்பே விடியில் பம்பாய் — சென்னை மெயிலில் பெண்ணை ஏற்றி விட்டு வீடு திரும்பிய தாரக்ராம் பான்ட் கோட்டுகளை மாற்றவில்லை. விஸ்கி பாட்டிலை எடுத்தார்.


பி.வி.ஆர்

''ராஜம்மா!''

அவருடைய குரலின் அவசரம் ராஜம்மாவைத் திடுக்கிட வைத்தது.

''இதோ...''

''ஃபிரிஜ்லே சோடா இருக்கு... கொண்டு வாங்கோ.''

ராஜம்மா சோடா பாட்டிலுடன் வந்தாள்.

கணக்குப் பாராமல் விஸ்கியைத் தம்ளரில் ஊற்றிய அவர் சோடாவைக் கலந்தார்.

''அவ போயிட்டா, ராஜம்மா. என் பொண்ணு போயிட்டா... நானும் என் பெண்டாட்டி கோமளியும் எவ்வளவு சந்தோஷமா, உறவாடினோம்கறத்துக்குச் சாட்சியா இருந்த எங்க பொண்ணு போயிட்டா, ராஜம்மா... இப்ப நான் என்ன செய்வேன்... என்ன செய்வேன்...?''

அவர் இன்னும் குடிக்க ஆரம்பிக்கவில்லை. புலம்பல் போதை ஊட்டிய புலம்பல் இல்லை. பாசம் அள்ளிக் கொட்டும் வேதனையின் கதறல்.

ராஜம்மா துக்க அனுபவங்களைக் கண்டவள். ஒரே நாளில் பெற்ற பிள்ளையும் அதைக் கொடுத்தவரும் போயிருக்கிறார்கள். சடலங்களை அருகருகே வைத்துக் கொள்ளி போட்டிருக்கிறார்கள். பூத்துக் குலுங்கிய நந்தவனம் ஒரே கணத்தில் பாலைவனமாகியிருக்கிறது.

''நம்ப மாயா போயிட்டா, போயிட்டான்னு நீங்க மாய்ஞ்சு போறது சரியில்லே. கலியாணமான பொண்கள் புருஷனோடதான் போவா...''

''ஐயோ, ராஜம்மா. இனிமே நான் அவளைப் பார்க்க மாட்டேனே...''

''யார் சொன்னா?''

''அவன் சொல்லிட்டானே!''

''வெறும் பேச்சை எல்லாம் பெரிசா எடுத்துக்காதீங்கோ. நீங்க வீம்பு பிடிக்கறதா அவன் நெனைச்சிருப்பான். பதிலுக்கு வீம்பாய் பேசியிருக்கான்... அடுத்த வாரமே மெட்ராஸ் போய்ப் பார்க்கலாம்...''

ஒரு முறை நான் வெளியில் செல்லும் போது மனைவியிடம் ''கடைப் பக்கம் போறேன்! சோப்பு சீப்பு ஏதாவது வாங்கவா?'' என்றேன்.

உடனே அவள், ''ஏங்க! என்னை தைரியம் இருந்தா என்கிட்டேயே ''சீப்பு'' வாங்கவான்னு கேட்கிறீங்க'' என்றாளே பார்க்கலாம்!

— பாஸ்கர்



''இப்பப் பாரு மணி பதினொண்ணடிச்சது... கல்யாண்கிட்டே போயிண்டிருக்கும் ரயில்.''

''கலியாணமான அன்னிக்கே ரெண்டு பேரும் போயிருக்க வேண்டாம்'' என்றாள் ராஜம்மா.

''எல்லாம் அரவிந்தனுடைய வேலை ராஜம்மா... செடியிலேந்து பூவைப் பறிச்சுட்டு ஓடற மாதிரி ஓடிட்டான்.''

''நீங்கதானே, 'பறிச்சுக்கோ'ன்னு சொன்னேள்?''

''இப்ப என் புத்தியைச் செருப்பாலே அடிச்சுக்கணும் போல இருக்கு... பெரிய, ரொம்பப் பெரிய தப்பு பண்ணிட்டேன் ராஜம்மா!''

''இப்படி நினைக்கறது தான் தப்பு... அரவிந்தன் நல்ல பிள்ளை. குணம் இருக்கு. விவேகம் இருக்கு. நம்ப மாயா அவன் கிட்டே நிச்சயமா கஷ்டப்பட மாட்டா...''

''மாயா இந்த வீட்டை விட்டுப் போனதிலே உங்களுக்குத் துக்கமோ, வருத்தமோ, இல்லியா, ராஜம்மா... இத்தனை வருஷமா பழகியிருக்கேளே! பெத்த தாயார் மாதிரிப் பார்த்துண்டிருக்கேளே!''

''இல்லை.''

''இல்லையா... என்ன கல் நெஞ்சு உங்களுக்கு!'' ஒரு வாய் குடித்தார்.

''நீங்க எப்படி வேணும்னாலும் எடை போடுங்கோ... மாயாவுக்கு மருந்தும், மாத்திரையும் தேவை இல்லை. அன்பு, வெறும் அன்பு தான் தேவை... உங்களுக்கு ஒண்ணு தெரியுமா? ஒரு சின்னக் குழந்தை, யாரும் பக்கத்திலே இல்லாத போது, தத்தித் தத்தி நடக்கறப்ப விழுந்துட்டா ஒன்னு ஓலமிடறதில்லை. ஏன் சிணுங்கறது கூட இல்லே. ஆனா அம்மா, அப்பா, பாட்டி, தாத்தா, அக்கா, அண்ணான்னு யாராவது இருக்கட்டும். ஒன்னு கதர்றது. ஏன்? அதைத் தூக்கி வைச்சுத் தேத்தணும். கை கால்களைத் தடவணும்... மாயா அப்படிப்பட்ட குழந்தை...''

''நான் அன்பா இருக்கலையா? நீங்க அன்பா நடந்து கொள்ளவில்லையா?''

''நடந்து கொண்டேன்... டார்லிங் டார்லிங்னு கூப்பிட்டேன். அதே சமயம் அங்கே போகாதே, இதை செய்யாதேன்னேன்... அவ தொந்தரவு இருக்கபடாதுங்கறதுக்காக அப்பப்பா மாத்திரையை அவ வாயில போட்டேன். பாதி நேரம் நீங்க அவளுக்கு ஊசி குத்தற டாக்டராகத் தான் தெரிஞ்சேள்!''

தாரக்ராமனால் பதில் சொல்லமுடியவில்லை. வேளமாகக் குடித்தார்.

''நான் மட்டும் என்ன? வேளா வேளைக்கு போர்ன்விட்டா கலந்து கொடுத்தேன்... அவளுக்கு என்னென்ன பிடிக்கும்னு பார்த்துப் பார்த்துச் சமைச்சுப் போட்டேன்... வேறு என்ன செய்தேன்... நம்ப ரெண்டு பேர்களோடு பழகின தோஷத்தில அவளுக்கு நம்ப ரெண்டு பேரையும் பிடிச்சுப் போயி நந்

தது. அவ்வளவுதான் ...'' என்றான் ராஜப்பா.

''திடீர்னு முளைச்ச இந்த அரவிந்தன் எப்படி நம்ப ரெண்டு பேரையும் விட ஒசத்தி? உங்க அபிப்ராயமே சரியில்லேன்னு படறது ...''

''நீங்களும் ஒருத்தியைக் கலியாணம் பண்ணிண்டு வாழ்ந்திருக்கேள். நானும் ஒருவரோடு அவருக்கு மனைவியா கொஞ்ச காலம் வாழ்ந்திருக்கேன் ... என்னதான் தம்பதிகளுக்குள்ளே ஆயிரம் கருத்து வேற்றுமை இருந்தாலும், காலப் போக்கில ரெண்டு மனசும் இணைஞ்சு போயிடறது ... இணையாத மனசுகளை நீங்க இப்ப உதாரணம் காட்டப் பார்க்காதீங்கோ ... இணையற மனசைப் பத்தி நெனைச்சுப் பாருங்கோ ... ஒரு நாள் மாயாவின் மனசிலே அரவிந்தன் உறைஞ்சு போவான். அன்னிக்கு அவ மனசிலேந்து மத்ததெல்லாம் மறைஞ்சு போயிடும்.''

''நீங்க ஒரு பக்கமாகவே பேசறேள். அரவிந்தன் மனசிலேயும் என் பொண் மாயா உறைஞ்சு போகணுமே!''

''போயாச்சு.''

''எப்படிச் சொல்றேள்?''

''சிலதெல்லாம் கண்ணாலே மட்டும் பார்த்துத் தெரிஞ்சுக்க முடியாது. மனசாலேயும் பார்க்கணும். நான் பார்த்தேன். ஒரு தடவை இல்லே... பல தடவை...''

''இப்ப ரயில் கல்யாணைத் தாண்டி கர்ஜத்தைப் பார்த்து ஓடிண்டிருக்கும். கார்த்தாலே ஷோலாப்பூர்லே மாயா என்ன சாப்பிடுவா ... போர்ன்விட்டா கொடுத்து விட்டேளா?''

''அரவிந்தனே ஞாபகமா கேட்டு வாங்கிண்டான் ...''

தாரக்ராம் மௌனமாகக் குடித்துக் கொண்டிருந்தவர் எழுந்தார்.

''நீங்க போய்ப் படுத்துக்குங்கோ, ராஜப்பா! கோமளி போனன்னிக்கு என் உசிர்லே பாதி போச்சு ... பாக்கி பாதி உசிரை இன்னிக்கு என் மாப்பிள்ளை பறிச்சுண்டு போயிட்டான் .. நீங்க தூங்குங்கோ ...''

''குடிச்சது போதும்னு தோணறது!'' என்றாள் ராஜம்மா.

''இன்னமே இதுதான் என் வலிக்கு மருந்து ... எல்லா இடத்திலேயும் என் மாயா தான் தெரியறா ... அதோ அங்கே நிக்கறா ... இதோ இங்கே உட்கார்ந்திருக்கா ... சிரிக்கிறா ... அழறா ... கார் ஓட்டறா ... தூங்கறா ... இப்ப நான் அவ ரூமுக்குப் போறேன் ... என்னைப் பார்த்தா அவ சந்தோஷப் படுவா .. என் பெண்ணாச்சே ...''

தாரக்ராமை ராஜம்மாவால் தடுக்க முடியவில்லை. பெண்ணைப் பிரிந்த துக்கம் அவருடைய அறிவையே பாதித்திருக்கிறது. இது தற்காலிக பாதிப்பு தான். எல்லாம் நாளாவட்டத்தில் சரியாகி விடும்.

குடித்திருந்தும் அவர் நடையில் தள்ளாட்டம் இல்லை. நேரே மாயாவின் அறையை நோக்கி விரைந்தார். ஓரிரு நிமிடங்கள் அசையாமல் நின்றிருந்த ராஜம்மா மெல்ல நகர்ந்தாள்.



பையன்: (அப்பாவிடம்) எப்போ நான் இவ்வளவு மோசமா மார்க் வாங்கியிருக்கேனே இதுக்குக் காரணம் நம்ம வம்ச பரம்பரையா இல்லே நம்ம வீட்டு சூழ்நிலையா?

அப்பா: ! ? !

—பாஸ்கர்.

தாரக்ராம் என்ன செய்கிறார்?

மாயாவின் அறைக்குச் சமீபமாக வந்து சற்றே எட்டிப் பார்த்தாள். தாரக்ராம் மாயாவின் கட்டிலில் அமர்ந்து, இரு கைகளிலும் முகத்தைப் புதைத்து அழுது கொண்டிருந்தார். கேவல்கள் அவருடைய வேதனையைக் கொட்டிக் கொண்டிருந்தன.

* * * * *

பொழுது புலர்ந்தது.

இரவு முழுவதும் தூங்காமல், அவளுடைய கால்மாட்டில் உட்கார்ந்திருந்த அரவிந்தன், மாயாவின் கால் இடிக்கவே, திரும்பிப் பார்த்தான்.

''நான் எப்படி இப்ப ரயில்லே இருக்கேன் ...?'' என்றாள் மாயா.

''குட்மார்னிங், மாயா.''

''குட் மார்னிங் இருக்கட்டும் ... எப்படி ரயில்லே இருக்கேன் ... நீ என்னை அட்டாக் பண்ணிட்டியா ...''

''நீ எவ்வளவு நல்ல பொண் ! நான் உன்னை அட்டாக் பண்ணுவேனா?''

''அதுதானே ... நீ என் ஹஸ்பெண்ட் ... ஐ'ம் மாயா அரவிந்தன். அது சரி. இப்ப எங்கே போறோம்?''

''நம்ப வீட்டுக்கு?''

''அப்பாமன்னா?'' மாயாவின் கண்கள் பயத்தில் வெளிறின.

''சொல்றேன் மாயா ... மொதல்லே பல் தேய்க்கலாம். அப்புறம் நான் போர்ன் விட்டா கலந்து தரேன் ... குடி.''

''எனக்கு ராஜம்மாவைப் பார்க்கணும்!''

''ஷ்யூர். அவளைப் பார்க்கத்தான் போயிண்டிருக்கோம்!'' என்றான் அரவிந்தன்.

இருவர் மட்டுமே பயணம் செய்யக் கூடிய முதல் வகுப்பு கூபேதான். இருந்தாலும் நாளை அதிகாலை வரை மாயாவை அவன் எப்படிச் சமாதானப்படுத்திச் சமாளிப்பான்?

ஆனால் நாளைக்கு விடியற் காலையில் பிரச்னை தீர்ந்து விடப் போகிறதா என்ன? இப்போது தானே ஆரம்பித்திருக்கிறது?

மாயாவை அவன் கைலாகு கொடுத்து, மெல்ல நடந்து பாத்ரூமிக்கு அழைத்துச் சென்றான்.

(தொடரும்)

நமது முடிவு சரி என்ற திருப்தியுடன், மற்றவனுடைய முடிவு தவறு என்று நிரூபிக்கும் ஆர்வம் இல்லாதிருப்பின் அதுவே மன முதிர்ச்சியின் ஆரம்பம்.

—சிட்னி ஹாரிஸ்.

டேக்-கு

வஸந்த்

சரசுவை உங்களுக்குப் பிடிக்கும் அழகான அழகான அழகான சரசு.

அவளின் பிரதானமான கவர்ச்சியை, மிஸ்டர் பிரும்மா, அவள் கண்களில் எழுதியிருந்தார். அவள் அயம் விசேஷமாக என்றால், அவள் கண்கள் அதிவிசேஷமாக!

கொல்லன் தெருவில் ஊசி விற்றதற்கு மன்னிக்கவும். அதாவது, உங்களுக்கு மிக நன்றாகத் தெரிந்த பிரபல கதாநாயகியும், தமிழ் சினிமாவின் முன்னணி நடிகையுமான வந்தனாவைப் பற்றி உங்களிடம் இது காறும் வருணித்ததற்குத் தண்டனிடுகிறேன்.. சரசுதான் வந்தனா. வந்தனா தான் சரசு. தென்காசி ரயில் நிலையத்தில் வெள்ளரிப் பிஞ்சு விற்றுக் கொண்டிருந்த போது, அவள் சரசுதான்! குற்றாலத்து ஷூட்டிங்கில் ஹீரோ வருண்குமாரைச் சந்தித்த போது அவள் சரசுதான்!

வேலைக்காரி உத்யோகமானாலும் பரவாயில்லை, வாழ்வு தாருங்கள் என்று அவனிடம் கெஞ்சிய போதும் அவள் சரசுதான்!

சுற்றத்தார் யாருமில்லை, உங்களுடனேயே வந்து விடுகிறேன் என்று வருண் காலைப் பிடித்துக் கதறிய போதும் அவள் சரசுதான்! 'சப்பை மூக்கும், பூனைக் கண்ணுமாக, தினமும் நூறு நடிகைகள் உதயமாகையில் அழகின் உச்சமான உன்னை (கதையின் முதல் பத்தியைப் பார்க்கவும்.) தமிழ் சினிமா நிச்சயம் மறுக்காது என்று சரசுவை அவன் சென்னை அழைத்து வந்ததும் தான், அவள் வந்தனா!

நம் கதை ஆரம்பிக்கும் சமயம், வந்தனா, வருண்குமாரின் பிரத்யேகமான படுக்கை அறையில், சொகுசு மெத்தையில், அவன் மார்பில் சாய்ந்திருந்தாள். சஸ்பென்ஸை உடைத்து விடுகிறேன். படுக்கையில் வெற்று மார்போடு படுத்திருந்த வருண் நிஜம். வந்தனா புகைப்படம்! ஆமாம்! தினமும் வந்தனாவை, அதான் போட்டோவை மார்பில் கிடத்திக் கொண்டால் தான் ஹீரோ சாருக்குத் தூக்கம் வரும்.

இரண்டையும், இரண்டையும் உங்களுக்குக் கூட்டத் தெரியும். வருண், வந்தனாவைப் பாதாதி கேசம் காதலிக்கிறான். காதல் என்றால் அப்படி ஒரு காதல்! ஏரி ஃபெளக்ஸ் வழியாக, அவன் ரசிகர்களைத் திருப்திப்படுத்தச் செய்யும் மேக்—அப் காதலில்லை. இது நிஜம்.

தற்சமயம், நுங்கம்பாக்கத்தில் வசிக்கும், திருவள்ளுவர், அறத்துப் பாலில், செய்நன்றி அறிதல் அதிகாரத்தில் சொல்லியிருப்பதையெல்லாம் படித்திருக்கும் உங்களுக்கு வருண் – வந்தனா காதல் விவகாரத்தில் சிக்கல் எதுவும் இருக்குமென்று தோன்றாது.

மன்னிக்கவும். சிக்கல் இருந்தது. வெள்ளரிப் பிஞ்சு விற்ற வந்தனா, நுங்கம்பாக்கத்துக் காரரைப் படிக்காததால் வந்த விவகாரமில்லை இது! வில்லன் நடிகர் ரகுபதியால் வந்த பிரச்னை!

மேக்—அப் அறையில், பான்கேக் பூசுகிற போதும், மீசை எழுதுகிற போதும், 'விக்' வைக்கிற போதும், மேக்—அப் மேன் நாகபூஷணம் சொன்ன தகவல்கள் வருண் குமாரின் ரத்தத்தை உபரியாகச் சூடேற்றின.

வந்தனா காதலிக்கிறாளாம்!

அவன் காதலிப்பதைத் தெரிந்து கொள்ளாமல்!

அவனைக் காதலிக்க வேண்டுமென்கிற ஆதார அபிப்பிராயம் கூட இல்லாமல்! கேவலம்! ரகுபதியைக் காதலிக்கிறாளாம்.

"டாமிட்! பொய் சொல்றீங்க" என்று சீறினான் வருண்.

"இல்ல தம்பி, ஷூட்டிங்குக்கு, பாப்பா நிதம் லேட்டா வருதுல்ல! அது எதனால? நேத்திக்கு டப்பிங்குக்கு வரேன்னுட்டு, வரலையே அது எதனால? அந்தாலுதான் தம்பி காரணம்! ரகுபதியைத்தான் அது கட்டிக்கப் போகுதாம்!"

கடைசி வரியை நாகபூஷணம் சொல்லிக் கொண்டிருக்கும்போது, வருண் கை அவரின் கன்னத்தில் அறைந்திருந்தது. வருண் குமாருக்குக் கோபம் புதிதில்லை! மூன்றாம் வகுப்பில் அவனுடைய பெஞ்சில் உட்கார்ந்ததற்காக, காதரைப் பிடரியில் அடித்துக் கீழே வீழ்த்தி நெற்றியை உடைத்த போதே அது பிரசித்தம். அவன் அனுமதியில்லாமல் ஸ்டீரியோவைத் தங்கை ஜெயந்தி இயக்கியதற்காக அதைத் தூக்கிப் போட்டு உடைத்துச் சுக்கலாக்கிய போதே அது பிரசித்தம்! அவனையும், அனிதாராஜையும் இணைத்துக் கிசுகிசுத்ததற்காகத் 'திரைச்செண்டு' நிருபரின் சில் மூக்கைப் பதம் பார்த்தபோதே அது பிரசித்தம்!

ஜன்னல் வழியாக ஏழாவது ஃப்ளோர் வாசலில் கேன்ட்டஸா வந்து நின்றதும், அதிலிருந்து வந்தனா இறங்கிக் கொண்டதும், கையை அசைத்துவிட்டு அந்த ரகுபதி காரைக் கிளப்பிக் கொண்டு போனதும் கண்ட வருண் குமாருக்கு சுரீர் என்றது.

மேக்—அப் மேனின் காலரைப் பிடித்திருந்த கையை உதறிக் கொண்டான். நாக பூஷணம் சட்டையில் படிந்திருந்த கறையையும், மனசில் படிந்திருந்த வருத்தத்தையும் ஒரு சேரத் துடைத்துக் கொண்டார். அப்போதுதான் ஃபீல்டில் தொடர முடியுமென்பது அவரது அனுபவ பாடம்!

* * * * *

மேக்—அப் அறையின் கதவைத் திறந்து கொண்டு உதவி இயக்குனர் உள்ளே நுழைந்த போது வருண் கண்களை மூடிக் கொண்டிருந்தான்.

''ஷாட் ரெடியண்ணே! முதல்ல, கௌண்டர் குளோசப்ஸ் எடுத்துடலாம்னு டைரக்டர் சொன்னாப்பல!'' என்ற குரல் கேட்டு வருண் கண் திறந்த போது கண்ணாடியில் அந்த உ. இயக்குனரின் முகம் தெரிந்தது. பணிவான முகம். பவ்வியமான முகம். பயந்த முகம். இன்னும் இரண்டு வருடம் போனால், இரண்டு படம் பாக்ஸ் ஆபீஸில் ஹிட்டானால் துள்ளுவானுகள்.



நன்றி, விசுவாசம் என்கிற பழங்கதையெல்லாம் அப்போது வேகாது. அப்படித்தானே அவனுமிருக்கிறான். 'பிஞ்சு வெள்ளரிக்கா சாமி! கூறு எட்டணா!' 'பத்துப் பாத்திரம் தேய்க்கிறேன் அய்யா' 'யாருமில்லாத அனாதை துரை! நீங்கதான் காப்பாத்தணும்.'

சட்டென்று எழுந்து கொண்டான் வருண். வெளியே வரும் போது அவனுள் எரிமலை கனன்று கொண்டிருந்தது. கௌண்டர் குளோசப்புகள் முடிந்து ஆடும் நாற்காலியில் உட்கார்ந்திருந்த போதும் அந்தக் கோபம் தொடர்ந்தது. அடுத்த காட்சிக்காக உடை மாற்றிக் கொண்ட போதும் உள்ளம் படபடத்தது.

'ஏமாற்றிவிட்டான்! ஏமாற்றி விட்டான்.' சட்டென்று பார்வை உயர்ந்தபோது வெளிச்ச வெள்ளத்தில் அவள் இருந்தாள். "வணக்கம் ஸார்" என்று அங்கிருந்தபடியே கைகூப்பினாள்.

டைரக்டர், 'வாங்கண்ணே' என்று வருணை அழைத்தார். வந்தனா பக்கம் திரும்பி; "நீங்க வந்தும்மா, இந்தப் படுக்கையில சாஞ்சுக்கிட்டு புஸ்தகம் படிச்சுக்கிட்டிருக்கீங்க! கேமரா முதல்ல உங்க முகத்துல இருக்கும். நான் 'ஜூம்' சொன்னதும் அண்ணே நீங்க என்ட்ரி கொடுக்குறீங்க! உங்க முகத்துல கோபம் - இது அன்னைக்கு பஸ் ஸ்டாண்டுல எடுத்தமில்ல? அந்த ஸீனுடைய தொடர்ச்சி! சம்பத்து டிரஸ் கண்டின்யூட்டி கரெக்டு தானே? அப்புறம் நீங்க அவுங்ககிட்ட போய் தோள்ல கைவைக்குறீங்க! மெதுமெதுவா கழுத்துக்கிட்ட கைபோவுது! அப்ப, கேமிரா டிராலி வந்து உங்க ரெண்டு பேரு டைட் க்ளோஸ் மட்டுமிருக்கும். கழுத்த நெறிச்சுட்டு அப்படியே நீங்களும், அவுங்களோடேயே படுக்கையில சாஞ்சுடுறீங்க! — அது வரைக்கும் ஷாட்டு! ஓ.கே? பாக்கணுமா? வேண்டாம்! நேரா 'டேக்'கே போயிடுவம்! சம்பத்து அண்ணங்கையில வசனத்தக் குடு" என்றபடி கேமிராமேனை நோக்கிப் போனார் டைரக்டர்.

அவன் கையில் வசனமிருந்தது. அதைவிட முக்கியமாய், அவளைக் கேட்க வேண்டிய, எத்தனையோ வசனங்கள் அவனுக்குள் இருந்தன.

வந்தனாவின் கண்கள் அவனை ஊடுருவின. அவளது வெள்ளரிப்பிஞ்சு உதடுகளில் ஒரு புன்னகை நெளிந்ததையடுத்து "என்ன ஸார் பேசவே மாட்டேங்குறீங்க?" என்று கேட்டாள்.

"பேசறேன்" என்றான் வருண். குரலில் கரகரப்பு.

"உன்னைப் பத்தி எல்லாரும் பேசிக்கறது நிஜமா?"

குற்றால அருவி மாதிரி புரளும் தலை முடியை ஒரு முறை சிலுப்பிக் கொண்டாள்.

"என்ன ஸார் பேசிக்குறாங்க?"

"நீ ரகுபதியக் கட்டிக்கப் போறியாமே?"

ரூஜ் தீற்றிய கன்னங்கள் சட்டென்று செர்ரி நிறத்துக்கு மாறின.

"உங்ககிட்டே சொல்லக் கூச்சமாயிருந்துச்சு ஸார்."

"உன்னை மெட்ராஸ் கூட்டிக்கிட்டு வந்தது யாரு? அவனா?"

"நீங்கதான் ஸார்."

"உன்னை இண்டஸ்ட்ரிக்கு அறிமுகப்படுத்தினது யாரு? அவனா?"

"நீங்கதான் ஸார்."

"இன்கம்டாக்ஸ்காரனை ஏமாத்தி, கரன்ஸி நோட்டாலேயே கைகழுவுற நிலைமைக்கு உன்னை உசத்தினது யாரு? அவனா?"

"இல்ல ஸார்! நீங்கதான்!"

"பின்னே இதெல்லாம் பண்ண மட்டும் நான் வேணும். கல்யாணத்துக்கு மட்டும் அவன் வேணுமா?"

அவள் கண்கள் திடீரென்று கலங்கிப் போயின. "ஸார்! நீங்க என்னை உருவாக்குனீங்க! உசரத்துல ஏத்தி வச்சீங்க! நீங்க தெய்வம் ஸார்! கடவுளைக் கும்பிட முடியும். அவரோட குடித்தனம் நடத்த முடியுமா?" சட்டென்று கட்டிலில் உட்கார்ந்து கொண்டாள் வந்தனா. வசன ஒத்திகை முடிந்து விட்டது என்கிற நினைப்பில் ஷாட் ரெடி என்று குரல் கொடுத்தார் சம்பத்.

* * * * *

கேமிரா வந்தனாவின் முகத்திலிருந்தது. அதில் தெரிந்த சோகம் பொய்யில்லை. ஜூம் பேக் ஆகி ஏர்ரிப்ளக்ஸ் வருண் முகத்தில் நிலைத்தது. அதில் தெரிந்த கோபம் பொய்யில்லை.

கேமிரா டிராலி முன்னடைந்த போது, அவன் கை அவள் தோளில் பதிந்த வேகம் பொய்யில்லை.

"நிஜமா? அப்படிச் செய்தது நிஜம்தானா? நான் ஒருத்தன் இருக்கற போது, அப்படிச் செய்ய உனக்கு அவ்வளவு துணிச்சலா? நோ! அதை என்னால அனுமதிக்க முடியாது. எனக்கு இல்லேன்னா அது யாருக்கும் வேண்டாம்."

சொல் சுத்தமாக அந்த வசனத்தை வருண் சொன்ன போது அதில் கொப்புளித்த உணர்ச்சிகள் பொய் இல்லை.

கேமரா முன்னடைய, கைவிரல்கள் வந்தனாவின் கழுத்தில் இறுக, ஒருவினாடி அதிர்ச்சி. ஒரு வினாடி பயம், ஒரு வினாடி மயக்கம் என்று வந்தனா படுக்கையில் சரிய, கழுத்தை நெறித்து விட்ட குரூரமான மகிழ்ச்சியோடு அவனும் படுக்கையில் சரிந்தது பொய் இல்லை.

"கட்! ஷாட் ஓ.கே! பியூட்டிஃபுல்" என்று டைரக்டர் கூவினார்.

அவர் விரும்பியிருந்தாலும், அந்த 'ஷாட்'டை இரண்டாவது டேக் எடுத்திருக்க முடியாது என்பதும் பொய் இல்லை.

* * * * *

உயர்ந்த மனிதனும் விளங்க விரும்பினால், அகந்தையின்றி அடங்கி இருக்கக் கற்றுக் கொள். பழங்களைத் தாங்கும் மரம் எப்போதும் பணிவுடன் தாழ்ந்தே இருக்கிறது. —ராமகிருஷ்ண பரமஹம்ஸர்.

வட்டமேஜை

இயக்குனர் பாலசந்தரின் பாராட்டு!

* கவிஞர் வைரமுத்து அவர்கள் இளைஞர்களுக்கு எழுதும் 'வாரம் ஒரு கடிதம்' பகுதி படித்தேன். அடாடா! நாமும் ஒரு இளைஞனாக இல்லாமல் போய் விட்டோமே என்கிற எண்ணம்தான் உடனே என்னைத் தாக்கியது.

வைரமுத்து அவர்கள் சொல்லுகின்ற, சொல்ல விருக்கின்ற கருத்துக்களை இளைஞர்கள் படித்துப் பயன் பெறட்டும். கல்கி அதற்கு ஒரு கருவியாகப் பயன் படட்டும்.

சென்னை-4. கே. பாலசந்தர்.

* சிறப்பிதழ்கள் — சொற்பொழிவுகள் — இளைஞர் ஆண்டு கருத்தரங்குகள் தர முடியாத தன்னம்பிக்கையையும், உறுதியையும், மனோபலத்தையும் ஜகத்குருவின் அருள் மொழிகள் ஏற்படுத்துகின்றன.

சென்னை-57. இரணியல் கலா.

* "அரசியல் ரீதியாக கலைஞரை எதிர்ப்பவர்கள் தான் நாங்கள்; ஆனால் அவரது மொழியுணர்வையோ, இன உணர்வையோ அவரது தியாகத்தையோ யாரும் குறைத்து மதிப்பிட்டதில்லை." என்ற வரிகளே, முத்துலிங்கத்தின் பதில் சத்தானவை என்பதற்கு சாட்சி!

கிருஷ்ணகிரி — 1. ஆர். பாலன்.

* "இப்படி ஒரு மாறுத"லான குறு நாவலை சுஜாதா எழுதுவார் என எதிர்பார்க்கவேயில்லை. குறு நாவலென்றாலும் குட் (நல்ல) நாவலாய் அமைந்து மனதில் பதிந்து 'வட்ட மேஜை' பகுதிக்கு இப்படி ஒரு கடிதத்தை எழுத வைத்து விட்டது.

அயன்புரம். த. சத்தியநாராயணன்

* "இளைஞர்களின் எதிர்காலம் இருட்டு" என்ற தலையங்கம் ஏ. ஒன். நம் நாட்டின் இளைஞர்களின் இன்றைய நிலையை படம் பிடித்துக் காட்டியுள்ள விதம் அருமை.

கோவை. உமார்த்தி.

* "நேரம் நல்ல நேரம்" பகுதியில் இயக்குநர் திரு கே. பாலசந்தர் தமக்கே உரிய பாணியில் நேயர்களின் கேள்விகளுக்குப் பொறுமையாக, விளக்கமாக, ஆணித்தரமான பதில்களை அளித்து மகிழ்விக்கிறார்.

ஆத்தூர் (சேலம்). வி. சீனிவாசன்.

* கல்கி நடத்திய 'புதிய சமுதாயம் படைப்போம்' கருத்தரங்கு படிக்கும் போது இளைஞர்களின் பிரச்னைகளை அலசிப் பார்த்தது போல் இருந்தது..

கமுதி. பொ. பொன்ராஜ் குமார்.

* மனைவியின் குண நலன்களைப் பொருத்து தான் ஒரு கணவனின் வாழ்க்கை சீரும் சிறப்பும் பெறும் என்பதற்கு ஓர் உதாரணம் திருமதி ஸோனியா காந்தி!

லால்குடி-1. எம். ராஜேந்திரன். பி.எஸ்.ஸி.

* வாஸந்தி அவர்களின் "மௌனப் புயல்" கதையைப் படித்தேன். ஆரம்பமே இவ்வளவு விறு விறுப்பாக உள்ளது.

சென்னை-44. டி. ஆர். சந்திரசேகரன்.

* "சொந்தச் சகோதரர்கள்" கதையின் மூலம் இலங்கையில் ராணுவ அதிகாரிகளின் அராஜகத்தினையும், தமிழர்கள் படும் துயரத்தினையும், அப்படியே கண் முன் நிறுத்திவிட்டார் இரவிச்சந்திரன்.

ஆத்தூர் (சேலம்) வி. சீனிவாசன்.

* சமீபத்தில் சேலம் பேருந்து நிலையத்திலிருக்கும் நவீன சிறுநீர், கழிப்பிடத்திற்கு சிறு நீர் கழிக்க 20 பைசாவைக் கொடுத்து விட்டு உள்ளே சென்றால் அங்கே கழிக்கப்பட்ட சிறு நீர் வெளியேறாமல் அப்படியே தேங்கி நிற்கிறது. ஒரே துர்நாற்றம். ஆபாச அசுத்தம். இதனால் தொற்று நோய்கள் பரவ வாய்ப்பு அதிகம். கட்டணம் வேறு வசூலிக்கிறார்களே, சுத்தமாக வைத்திருக்கக் கூடாதா? தமிழகம் முழுதுமே கட்டணம் வசூலிக்கும் நவீன சிறு நீர் கழிப்பிடங்கள் பலவும் இந்த நிலையில் தான் இருக்கின்றன.

சேலம். கொடுமுடி கணேசன்.


* எனது ஜப்பானிய நண்பர் திரு ஆசோ மாட்சுஹகா அவர்கள் ஜப்பான் மொழியில் மொழி பெயர்த்து வெளியிட்ட 'திருக்குறளுக்கு' தஞ்சாவூர் தமிழ் பல்கலைக் கழகம் ரூ 5,000/— பரிசு அளிப்பதாகவும் பரிசளிப்பு விழா 23.3.85ம் தேதி நடைபெறுவதாகவும் அறிவித்திருந்தது. அவரது ஒப்புதல் பெற்று விழாவில் அவரது சார்பாக பரிசு பெற நான் விழாவுக்குச் சென்றிருந்தேன். மேலும் ஸில்லாங் உள்பட பல ஊர்களிலிருந்தும் எழுத்தாளர்கள் பரிசு பெற வந்திருந்தார்கள். டாக்டர் மு. வ. அவர்களின் 'அகல் விளக்கை' தெலுங்கில் மொழி பெயர்த்து பரிசு பெற்ற திரு நரசிம்மலு ஷில்லாங்கிலிருந்து தனது மனைவி, குழந்தைகளுடன் விமானத்தில் சென்னை வந்து, ரயிலில் தஞ்சை வந்திருந்தார். பரிசளிப்பு விழா சிறப்பாக பொது மக்கள் முன்னிலையில் நடைபெறும் என்று நம்பி குடும்பத்தினர் கண்டு களிக்கட்டும் என அழைத்து வந்தவருக்கு ஏமாற்றம் தான் காத்திருந்தது. அவர் பரிசு பெறுவதை அவரது மனைவி கூட காண முடியவில்லை! செனட் அங்கத்தினர்களின் ஆலோசனை கூட்டத்தினிடையில் பல்கலைக் கழகத் துணை வேந்தர் பரிசுக்கான சான்றிதழையும், ரூ 5,000/— க்கான காசோலையையும் ஒரு பிளாஸ்டிக் பெட்டியில் வைத்து கொடுத்து விழாவை முடித்துக் கொண்டார்.

தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த திரைப்படத்துக்கும், நடிகர், நடிகைகளுக்கும் பரிசளிக்கும் போது பொது நிகழ்ச்சிகளாக விரிவாக விளம்பரம் செய்து பொது மண்டபத்தில் அமைச்சர்கள், பொது மக்கள் முன்னிலையில் ஆடம்பரமாக விழா நடத்தி பரிசளிக்கிறார்கள். ஆனால் தமிழ் எழுத்தாளர்களைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் பரிசளிப்பு என்ற பெயரில் இப்படி அவமானப்படுத்தி இருட்டடிப்பு செய்ய வேணுமா? பேசாமல் காசோலையைத் தபாலில் அனுப்பியிருக்கலாமே?

கொமாரபாளையம். செ. மு. முத்து.


(கடைசி கடிதம் பரிசு பெறுகிறது)

பரிதாபத்துக்குரிய பரிசளிப்பு விழா


துள்ளித் திரியும் பருவமிது,
தடுத்து நிறுத்திட இயலாது!
உங்கள் வீட்டில் டிவி இருந்தால்
அடுத்தவர் வீட்டிற்குச் செல்வாளோ?

உங்கள் அருமை செல்வி. அவள் மிகவும் புத்திசாலி. இந்த வயதிலேயே கலையிலும், களிப்பிலும் அவளுக்குத்தான் எத்தனை ஆர்வம்! வெகு சீக்கிரத்தில் அவள் ஓர் நாட்டியப் பேரொளியாகவோ அல்லது இசைக் கலைஞராகவோ திகழக்கூடும். ஏன், உங்கள் கனவும் அதுதானே? அவ்வாறிருக்க, அவளுக்கு வேண்டிய வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய கடமை உங்களதுதானே? அதற்கான முதல் அத்தியாவசியம் ஒரு டிவி. ஆம், அவளை ஒரு டிவியின்மூலம் எத்தனையோ நல்ல பல நிகழ்ச்சிகளை கண்டு ரசித்து, கற்றுக்கொள்ள முடியும். நீங்களே வேண்டுமானாலும் பாருங்களேன். இப்போதெல்லாம் டிவியில் பல அரிய நடன இசைக்கச்சேரிகள், இலக்கிய உரைகள், அன்றாட செய்திகள், விஞ்ஞான விந்தைகள், உலக விநோதங்கள், வினா விடை நேரம் போன்ற பல அரிய உபயோகமான நிகழ்ச்சிகள் கொண்டுவரப்படுகின்றன. ஆதலால் அவளுக்காக உங்கள் வீட்டிலேயே ஒரு டிவி இருந்தால் அடுத்த வீட்டிற்குச் செல்லத் தேவையிருக்காதே!

இப்போது, நீங்கள் எந்த டிவியையும் வாங்கும் முன், அது நம்பகமானதா என்று உறுதி செய்துகொள்ளுங்கள். அதில் தெள்ளத்தெளிவான படத்தோற்றத்திற்கு நீங்கள் தனி முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். செய்தி வாசிப்பவரின் கண் இமைகள் கூட அதில் துல்லியமாகத் தெரிய வேண்டும். அதாவது சாலிடெரில் தெரிவதுபோல்! அணுகிடுவீர் சாலிடெர் வைத்திருப்போரை, அறிந்திடுவீர் அதன் சிறப்பம்சங்களை, அப்போது தெரியும் உங்களுக்கு எதனால் சாலிடெரே அனைவராலும் விரும்பப்படும் டிவி என்று!



VCR
& பிக்-அப்
கனெக்ஷன், டீலக்ஸ்
அம்சங்கள் கொண்ட
எகானமி மாடல்
TS 32E

சாலிடர்

-தொல்லையில்லாத் தொலைக்காட்சி

"கயிறு அறுந்துவிட்டது. வாளி கிணற்றில் விழுந்து விட்டது" — வேலைக்காரி இந்தச் செய்தியைச் சத்தம் போட்டுச் சொல்லிவிட்டுச் சென்று விட்டாள்.

ஒன்றும் தெளிவாகப் புரியாத நிலையில், "இனி என்ன செய்யப் போகிறோம்?" எனத் தனக்குள் முணுமுணுத்துக் கொண்டான். இத்தகைய பிரச்னைகளுக்கும் தனக்கும் எந்த விதத் தொடர்பும் இல்லை என்பதுபோல் வேலைக்காரி, வேலையைப் பாதியில் போட்டு விட்டு நிம்மதியாக, மகிழ்ச்சியுடன் போய் விட்டாள். அவனுக்கு மிகவும் எரிச்சலாக இருந்தது.

பொறுப்பு ஒரு சிறிதும் இல்லாத இந்த கைய மனிதர்கள் உலகத்தில் எப்படித்தான் இருக்கிறார்களோ?'

"கயிறு அறுந்துவிட்டால் பொறுப்பு யாருடையது? இதை நிச்சயப்படுத்திக் கொள்ளும் சக்தி அவனுக்கில்லை. இனி என்ன செய்வது? இனி என்ன செய்ய வேண்டும்? எதுவும் அவனுக்குப் புரியவில்லை. கோபத்தால் அவன் உடல் நடுங்கியது. "அவள் போகாமலாவது இருந்திருக்க வேண்டும். இல்லை, 'இனி என்ன செய்யலாம் என்றாவது யோசனை சொல்லியிருக்க வேண்டும். அவனுக்கு வேலைக்காரியைக் கொன்றுவிட வேண்டும்என்றஎண்ணம்ஏற்பட்டது. "என் இஷ்டப்படி நடக்க முடிந்தால், இப்படிப்பட்ட ஆட்களையெல்லாம் அங்கேயே கொன்று போட்டு விடுவேன்..." அவனுக்குத் தன்னுடைய இயலாமையின் மீது, கோழைத்தனத்தின் மீது வெறுப்பு ஏற்பட்டது.'

'மனைவியோ வெளியேபோகத்தயாராகிக் கொண்டிருந்தான். இன்று நாள் முழுதும் அவள் வீட்டில் இருக்க மாட்டாள் என்பது தான் தெரியும்.

கயிறு அறுந்துவிட்டது. வாளி கிணற்றில் விழுந்து விட்டது என்பதை ஒரு சாதாரண விஷயமாகக் கொள்ளவே முடியாது! அப்படி இருந்தும், வீட்டுச் சொந்தக்காரியே இப்படி அவசரமாக வெளியே போய் விட்டால்...?! இது அவளுடைய பொறுப்பில்லாத்தனம்என்றுதான் சொல்லலாம்... தகுதியில்லாதவள்..." என அவன் முணுமுணுத்துக் கொண்டான். இத்தகையவர்களை அடித்துத் தள்ளி இந்தக் கிணற்றிலேயே நட்டுவிட வேண்டும் — என்ற ஓர் எண்ணமும் அவன் உள்ளத்தில் ஓடியது. இங்கு வேடிக்கையான பேச்சு எதுவும் நடக்கவே இல்லையே? ஆனால் அவளோ மறுபடியும் சிரித்துக் கொண்டே சந்தோஷமாகப் போகிறாளே...?

வாளி கிணற்றில் விழுந்துவிட்டது என்று என்னைத் தவிர வேறு யாருக்கும் எந்தவிதக் கவலையும் இல்லை.

அன்று ஆபீஸுக்குப் போக முடியாது என அவனுக்குத் தோன்றியது. கதவுகளைத் தாழிட்டுக் கொண்டு படுக்கையில் விழுந்தான். ஒரே புழுக்கமாக இருந்தது. நாலா புறமும் ஜன்னல் கதவுகள் எல்லாம் மூடப்பட்டிருந்தன. சிறையில் அடைபட்டுக் கிடப்பது போல் அவனுக்குத் தோன்றியது. வெளியே எங்கேயாவது ஓடிப் போய்விட வேண்டும் என்ற விருப்பம் அவனுக்குள் எழுந்தது. ஆனால் அப்படித் தன்னால் செய்ய முடியும் என அவனுக்குத் தோன்றவில்லை. அப்படியே படுக்கையில் விழுந்து கிடந்தான். நேரமும் கூட அவனுடன் அந்த அறையில் சிறைபட்டுக் கிடப்பது போல் அவனுக்குத் தோன்றியது. எவ்வகையிலும் அந்த இடத்தை விட்டுத் தப்பித்துப் போக முடியாமல் திண்டாடினான்.

அடுத்த வீட்டு அக்கா, பாபுவைத் தூங்க வைக்கத் தாலாட்டுக்கள் பாடிக் கொண்டிருந்தான். அந்த அக்காவைப் பாட வேண்டாம் என்று சொல்ல வேண்டும் போலிருந்தது. அவர்களாகவே தெரிந்து கொண்டிருக்க வேண்டும். என்னடா இது... பக்கத்து வீட்டில் இதுபோன்ற ஒரு அசம்பாவிதம் நடந்திருக்கும்பொழுது... சே!

வீட்டில்ஒருசொட்டுத்தண்ணீரும்இல்லை. குழப்பம் அவனுடைய வீட்டில் இருக்கும் பொழுது உலகம் முழுவதும் எப்பொழுதும் போலவே ஒழுங்காக இயங்கிக் கொண்டிருக்கிறது. "உண்மையில் இந்த உலகத்தில் யாருக்கும் யாரைப் பற்றியும் கவலை இல்லை!"

மீண்டும் அவன் படுக்கையில் விழுந்தான். அவன் ஆபீசுக்குப் போகாததினால்

கிணற்றுக்குள் பூதம்



அவனுடைய நண்பர்கள் காரணத்தை அறிந்து கொள்ள அவன் வீட்டிற்கு வருவார்கள்... கதவு தட்டப்படும் ஓசை அவன் தலை மேல் சம்மட்டியால் அடிப்பது போல் கேட்டது...

நண்பர்கள் வந்தார்கள். விசாரித்தார்கள். அடே! முட்டாள்களே! எனக்கு ஒன்றும் நேர்ந்துவிடவில்லை! கயிறு அறுந்துவிட்டது. வாளி கிணற்றில் விழுந்துவிட்டது... இதைக் கூடவா உங்களால் புரிந்து கொள்ள முடியவில்லை?'' எனக் கேட்க நினைத்தான். ஆனால் அதே நேரத்தில், அது பொருள் இல்லாத பயனற்ற பேச்சு என்பதையும் உணர்ந்தான்.

பெண்கள் சிலர் அவனைப் பார்க்க வந்திருந்தார்கள். எதற்காக வர வேண்டும் என்பது அவனுக்குக் கொஞ்சம் கூடப் புரியவில்லை. அவனுடைய கோபம் மேலும் அதிகமாகியது. தன்னைப் பற்றி அறிந்து கொள்ளப் பெண்களும் வந்திருக்கிறார்கள் என்பதை உணர்ந்து ஒரு சிறிது ஆனந்தமடைந்தான். வந்தவர்களுள் ஒருத்தி உண்மையாக அழகாகவே இருந்தாள். அவளுடைய வசீகரமான விழிகளை அவன் பார்த்தான். அழகான அவளுடைய கண்கள் ஒளிவிட்டுப் பிரகாசித்துக்கொண்டிருந்தன. உடனே அவ

குஜராத்தி கதை:
ரமண்லால் பாடேக்
தமிழில்:
கலாதாக்கர்



னுக்கு, ஆழமும், ஒளியும் கொண்ட கிணற்றில் தண்ணீர் நினைவுக்கு வந்துவிட்டது. வெறுப்பால் அவனுடைய மனம் சஞ்சலப்பட்டது.

இனி யாரிடமாவது இந்த விஷயத்தைப் பற்றிச் சொல்லிப் பகிர்ந்து கொள்ளத்தான் வேண்டும் என்று அவனுக்குத் தோன்றியது. இது ஒன்றும் சாதாரண விஷயமில்லை. இதுபோன்ற விஷயங்களை, எளிதாக, அவன் விருப்பப்படிப் பேசக் கூடிய நபர் இந்த உலகத்தில் 'அவர்' ஒருவர்தான் இருக்கிறார் என அவன் எண்ணினான். அந்த '(X)' வீட்டிற்கு அவன் போவதும், அவருடன் அவன் பேசுவதும் அவன் மனைவிக்குக் கொஞ்சமும் பிடிக்காது. மனைவியின் கோபத்தை விலைக்கு வாங்கினாலும், இப்போது 'எக்'ஸைச் சந்திக்காமல் இருக்க முடியாது. தன்னுடைய கஷ்டத்தை அவரால்தான் புரிந்து கொள்ள முடியும். அங்கு சென்றால் ஏதாவது ஒரு வழி பிறக்கும். எனவே போகாமல் ஒன்றும் நடக்காது என்று அவனுக்குத் தெளிவாகத் தோன்றியது.

'எக்' ஸும் நல்லபடியாகவே பேசிக் கொண்டிருந்தார். அவர் எதிரில் உட்கார்ந்து அனைத்தையும் கேட்டுக் கொண்டிருந்தான். உண்மையில் அவர் நல்ல மனிதராகவே இருந்தார். சரியாக அரை மணி நேரம் வரை பொறுமையாகவே உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருந்தார். அவர் எதை எதையோ முன்னும் பின்னுமாகத் திரும்பத் திரும்பப் பல தடவைகள் சொன்னார். இருந்த போதிலும் அங்கிருந்து புறப்படும் பொழுது அவனுக்கு உற்சாகம் ஏற்படவில்லை. அவர் மேற்போக்காக, பட்டும் படாமலும் பேசியதாகவே அவனுக்குத் தோன்றியது.

பாதாள கரண்டி... என்ற முன்பின் அவன் அறிந்திராத ஒரு புதிய பொருளின் சுமையை ஏற்றிக் கொண்டு வந்தான். பாதாள கரண்டி என்ற சாதனத்துடன் கிணற்றில் விழுந்த வாளியை எடுக்க முடியும்... அதை எடுத்துக் கொடுப்பதற்கென இருப்பவர்கள்... உண்டு... என்ற புதிய விஷயம் அவன் கவலையுடன் சேர்ந்து அதைப் பன்மடங்கு அதிகரிக்கச் செய்தது.

'கிணற்றில் விழுந்ததை எடுப்பவன்' வந்தான். அடிக்கடி அவன் பாதாள கரண்டியை நேராக வீசித் தண்ணீரில் மூழ்கடித்தான். பிறகு தண்ணீரைக் கலக்குவது போல, சிறிது நேரம் வரைக் கயிற்றை வட்டம் வட்டமாகச் சுழற்றினான். அந்த ஆள் ஒவ்வொரு முறை அவ்வாறு செய்யும்பொழுதும் அவனுடைய வயிற்றில் எதையோ கலக்குவது போலவும், நொறுக்குவது போலவும் சஞ்சலம் ஏற்பட்டுக் கொண்டிருந்தது. பிறகு அந்த ஆள் மெல்ல மெல்லக் கயிற்றை மேலுக்கு இழுப்பான். அப்பொழுது ஆவலுடன் பார்க்கும் அவனுடைய இதயம் பூரா மேலே எழும்பித் தொண்டைக்கிடையில் நின்று விடும்! வெற்றுப் பாதாளக் கரண்டி மட்டுமே தண்ணீரின் மேல் மட்டத்திற்கு வரும். அப்பொழுதெல்லாம் அவனுக்கு ஏற்படும் ஏமாற்றத்திற்கு எல்லையே இல்லை.

ஒருவேளை பாதாள கரண்டியில் அந்த வாளி சிக்கிக் கொள்ளாமலும் இருக்கலாம்! சிக்கிக் கொண்டு வருவதாக இருந்தால் முதல் முயற்சியிலேயே ஏன் வந்திருக்க கூடாது? வாளி கிணற்றில் கவிழ்ந்து விழுந்திருக்கிறதோ என்னவோ? அப்படியானால் பாதாளக் கரண்டி அதை எப்படி மாட்டி எடுக்கும்? அப்படி விழுந்திருந்தால், பிறகு அதை எடுக்கவே முடியாது. இல்லையா? நம்முடைய முயற்சிகள் பயனற்றவை என்று நன்கு அறிந்திருந்த பிறகும் கூட பிரயத்தனத்தைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்க வேண்டியதாகிருக்கும். இதைவிட அதனிடத்துக் கருணை காட்டும் செயல் வேறு ஏதாவது இருக்க முடியுமா? கிணற்றில் விழுந்து கிடக்கும் வாளியை எடுக்க முடியும் என்ற நம்பிக்கை அவனுக்கு அடியோடு அற்றுவிட்டது. சில சமயம் வாளி சிக்கிக் கொள்ளுகிறது என்றும், கொஞ்ச தூரம் மேலே வரும் போதை நழுவித் திரும்பத் தவறிப் போகிறது என்றும் அந்த ஆள் சொன்னான். அப்படியானால் இன்னும் ஆசைக்கு இடமிருக்கிறது. அந்த ஆள் விடாமல் முயன்று கொண்டிருந்தான்... வாளி நிஜமாகவே மேலே வந்தது! தண்ணீர் மேல் உண்மையாகவே தெரிந்தது...! அந்த ஆள், மிகுந்த கவனத்துடன், நிதானத்துடன், நிதானமாகக் கயிற்றை மெள்ள மெள்ள மேலே இழுத்துக் கொண்டிருந்தான்... சிறிது, சிறிதாக ஊஞ்சலாடிக் கொண்டே வாளி மேலுக்குமேல் இழுக்கப்பட்டு வந்தது... இன்னும் கொஞ்ச தூரம் தான், ஒரு கால் மேலே வந்து சேர்ந்து விடும். அவன் அதைப் பார்த்தான். வாளியின் அடிப்பாகத்தில் விளிம்பு கொஞ்சம் ஒரு பக்கமாக வளைந்து நசுங்கிப்போயிருந்தது. பாதாள கரண்டியின் ஒரு முள் அந்த வளைவில் மாட்டிக்கொண்டிருந்தது! வாளி தலைகீழாகத் தொங்கிக் கொண்டு மேலே வந்து கொண்டிருந்தது. அதனுடைய உயிர் அந்தரத்தில் ஊசலாடிக் கொண்டிருக்கிறது' என அவன் நினைத்தான். மனிதன் ஒருவன் உள்ளே விழுந்து இறந்து போயிருந்தாலும் இது போலவே மேலே இழுத்து வரலாம் அல்லவா? அவனுடைய கண்கள் நேர்பார்வையில் உயிரற்றவை போல, சலனமில்லாமல் ஒரே பார்வையில் வாளியை முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தன. ஆனால்..: வாளியோ பாதாள கரண்டியின் முள்ளிலிருந்து நழுவி விட்டது.. தண்ணீரில் மறுபடியும் விழுந்து மூழ்கிவிட்டது...!

அதற்குப் பிறகு... என்ன செய்கிறோம் என்பதை அறியாது... வாளியின் பின்னாலேயே அவனும் கிணற்றுக்குள் குதித்து மூழ்கினான்.

நான் முயல்வது நல்ல சிறந்ததைச் செய்ய, செய்வது முடிந்ததை மட்டும். —விண்டன். பி. ஜான்சன்.

தேர்வு என்று தேசிங்குராஜன் குதிரை

இனிய இளைஞனே!

''பிரிட்டிஷ்காரர்கள் தங்களின் கனத்த புத்தகங்களினால் எங்களின் விரல்களை நசுக்கிவிட்டார்கள்'' என்றோர் ஆப்பிரிக்கக் கவிதை உண்டு.

இங்கென்ன வாழ்கிறது?

நமது கல்விமுறை எதிர்காலத்தைக் கூட இறந்த காலமாக்கிக் கொண்டிருக்கிறது.

தனது ஆயுளின் நாலில் ஒரு பங்கைக் கல்விக் கூடங்களிலேயே செலவிட்ட பிறகும் வாழச் சொல்லிக்கொடுக்காத — வாழ்க்கையைச் சொல்லிக் கொடுக்காத — ஒரு சொட்டுத் தன்னம்பிக்கையைக் கூட ஊட்ட முடியாத இந்தக் கல்விமுறை இருந்தாலென்ன? எரிந்தாலென்ன?

ஓராண்டு காலமாய்த் திணித்த திணிப்பைப் பரீட்சைக்கூடத்தில் மூன்று மணி நேரத்தில் அவசரமாய் வாந்தியெடுக்கச் சொல்வது அநியாயம்.

மேல்நாடுகளில் எந்திரங்களைக் கூட மனிதர்களாக மாற்றி வருகிறார்கள்.

நமது கல்விமுறையோ மனிதர்களைக் கூட எந்திரங்களாக மாற்றிக் கொண்டிருக்கிறது.

பல இளம்பெண்கள் புத்தகச் சுமை பொறுக்காமலேயே பூப்பெய்தி விட்டார்கள்!''

(இன்னொரு தேசிய கீதம்: பக்கம் 87.)

—என்ற எனது வரியின் அலங்காரத்தை மறந்துவிட்டு அதன் ஆதங்கத்தை நீ அறிந்து கொள்ள வேண்டும்.

கல்வி என்பது இதமான விஷயமாக இருக்க வேண்டும்; நெஞ்சுக்கு இணக்கமான விஷயமாக இருக்க வேண்டும்.

அதனால்தான் வள்ளுவன் கூட கல்வியைத் 'தொட்டனைத்தூறும் மணற்கேணி'க்கு ஒப்பிட்டான்.

பாறையை உடைத்து நீர் பெறுவது போன்றதல்ல கல்வி; ஊற்றைத் தோண்டி நீர் வருவது போன்று கல்வி சுகமானது என்று சொல்லாமற் சொன்னான் வள்ளுவன்.

ஆனால், நமது கல்வி என்பது கல்லில் கூட அல்ல. இளைஞர்களின் நரம்பில் நார் உரிக்கிறது.

கவிஞர் வைரமுத்து

வாரம் ஒரு கடிதம்

இவ்வளவும் செய்துவிட்டு, அவன் ரத்தத்தை உறிஞ்சிவிட்டு, அவனை வாழ்க்கைக்கு வெளியே ஒரு வனாந்தரத்தில் விட்டுவிட்டுப் போய்விடுகிறது.

இளைஞனே! இதையெல்லாம் மறந்துவிட்டு நீ எங்கே நடந்து கொண்டிருக்கிறாய்?

(உன் பயணம் அண்ணா சாலையில் கண்ணாமூச்சி விளையாடுவது மாதிரி ஆபத்தானது.)

இதையெல்லாம் எதிர்த்துப் போராடுவதை விட்டுவிட்டு ஓட்டுநரோடும், நடத்துநரோடும் நீ யுத்தம் செய்து கொண்டிருக்கிறாய்.

உன் தோள்களில் இருக்கிற திணவும், கண்களில் இருக்கிற கனவும் ஒரு கிரகத்தையே உருவாக்க வல்லவை.

ஆனால், அவை விலாசம் தெரியாத காரணத்தால் விரயமாகிவிடுகின்றன.

கல்வியின் நோக்கம் வேலைவாய்ப்பு பட்டுமல்ல; வேலைவாய்ப்பு என்பது கல்வியின் ஓர் அம்சம்.

கல்வி ஒரு மனிதனை வாழ்க்கைக்குத் தயாராக வார்த்து அனுப்ப வேண்டும்.

அவன் கல்விச்சாலையை விட்டு வெளியே வரும்போது இனிமேல்தான் நிறையக் கற்க வேண்டும் என்ற வேட்கையை அவனுக்குள் விதைத்து அனுப்ப வேண்டும்.

ஆனால் ஒரு சமூகம் மாற்றப்படுவது வரைக்கும் மாற்ற நினைப்பவன் கூட அந்த மாறாத சமூகத்தில்தான் வாழ்ந்து தீர வேண்டியதிருக்கிறது.

எனவே இளைஞனே! இந்தக் கல்வி முறையின் தேர்வுதான் உன் அறிவைக் காட்டும் அடையாளமென்றால் அதிலிருந்து நீ அங்குலமும் பின் வாங்காதே.

தேர்வு என்பது தேசிங்குராஜன் குதிரை.

அதை நீ அடக்கிவிட்டால் அது உனக்குப் பொதி சுமக்கும் கழுதை.

நான் தேர்வை ஜெயித்தவன்தான்; ஆனால் இந்தத் தேர்வுமுறை எனக்கு உடன்பாடில்லை.

இந்தத் தேர்வுமுறை உனக்கும் உடன்பாடில்லைதான்; ஆனால் இந்தத் தேர்வை நீ ஜெயித்தாக வேண்டும்.

தொடர்ந்து சந்திக்கிறேன்,

புகைப்படம்: **யோகா.**



கமலாவும் காரும்

'கடுகு'

என் அருமை மனைவி கமலாவுக்கு எந்த வேளையில் அந்த யோசனை தோன்றியதோ எனக்குத் தெரியாது (தெரியாது என்று சொன்னேன்? தப்பு, தப்பு. அவளுக்கு அந்த ஐடியா தோன்றிய வேளை, எனக்குப் போதாத வேளை!)

சூடாகக் காப்பியைக் கொடுத்தபடியே — சூடான காப்பி என்பது எனக்கு அவள் வைக்கும் ஐஸ் — கமலா கேட்டாள். ''எப்போ காரை வாங்கப் போகிறீங்க?''

''அநியாய விலை விக்கிறது. கிரை கெட்ட கேட்டுக்கு இவ்வளவு கிராக்கியா?'' என்றேன். சமயத்தில் இப்படி அரைகுறையாகக் காதில் விழுந்தது போல் நான் பாவிப்பது உண்டு.

''நான் காரைச் சொன்னால், நீங்க கிரையைச் சொல்றீங்க. அதுவே உங்க அக்கா...''

''இதோ பார், கமலா. இனிமேல் எங்க அக்காவுக்கு ஒரு ரிப்பன் கூட வாங்கிக் கொடுக்கலே. அவளுக்கு வாங்கிக் கொடுத்தால், உங்கிட்டே வாங்கிக் கட்டிக்க வேண்டியிருக்குது... என்ன கேட்டே? கார் வாங்கணும்னு... இதென்ன புதுசா...? இத்தனை நாளாக எதிர்வீட்டு மைதிலி கண்ணன் புடவை வாங்கினால், நீ வாங்குவே. அடுத்த வீட்டு மல்லிகா மோகன், பிளாஸ்டிக் டப்பா வாங்கினால் நீ வாங்குவே. மூணாவது வீட்டு ஜானகி சந்துரு எவர்சில்வர் பாத்திரம் வாங்கினால் நீயும் வாங்குவே. கோடி வீட்டு சுதா மூர்த்தி நகைச் சீட்டுக் கட்டினால் நீயும் கட்டுவே. இந்த நாலு பேர்லே யார் கார் வாங்கியிருக்கா, சொல்லு. அவங்களை ஒரு கை பார்த்துவிட்டு வருகிறேன்'' என்றேன்.

''நன்னாயிருக்குதே நீங்க சொல்றது? ஏன் என்னைப் பார்த்துதான் அவங்க ஏதாவது வாங்கட்டுமே! 'மிஸஸ் கமலா கடுகு கார் வாங்கியிருக்கா, நாமும் வாங்கலாம்' என்று அவங்க சொன்னால் என்ன தப்பு?''

''ஒரு தப்பும் இல்லே கமலா... உனக்குத் தெரியும்னு நினைக்கிறேன். சீட்டுக் கட்டிக் கார் வாங்க முடியாது. வாயைக் கட்டி, வயத்தைக் கட்டித்தான் கார் வாங்கணும்.''

''இதமாதிரி இடக்கரடக்கலாப் பேசறதைத்தான் உங்கம்மா நன்னாக் கத்துக் கொடுத்திருக்கா... ஒவ்வொருத்தர் மாதிரி சினிமா, டிராமான்னு கேட்கிறேனா...? ஓட்டல், பீச்சுன்னு சொல்றேனா. கேவலம் ஒரு கார்... அதைக் கேட்டால் இவ்வளவு பேச்சும் ஏச்சுமா?'' — இதைத் தொடர்ந்து கமலா பேசியதை எழுதத் தமிழ் மொழிக்கு வளம் போதாது. ஒரே சமயத்தில் அழுது கொண்டும், மூக்கை உறிஞ்சிக் கொண்டும் கேவியபடியே அவள் பேசியதை எழுதுவது இயலாத காரியம்.

* * * * *

சில நாள் கழித்துக் கமலா சொன்ன 'கேவலம்' ஒரு காரை நான் வாங்கினேன். என் மைத்துனன் தொச்சுதான் சகாயமாக வாங்கிக் கொடுத்தான். சகாயம் என்பது என் நிதி நிலைமைகளில் பெருத்த காயம் ஏற்படுத்தியது! ஆப்கானிஸ்தானத்திலிருந்து பேரீச்சம் பழம் வருவது குறைந்து போய்விட்டதால், இந்த மாதிரிக் கார்களைப் பணம் கொடுத்து வாங்குகிறார்கள்!



கார் வாங்கிய சந்தோஷத்தில் கமலா ஒரு சுற்றுப் 'பருத்துவிட்டாள்.

''போதும், கமலா. ரொம்ப சந்தோஷப்படாதே... அப்புறம் காருக்குள் நுழைய முடியாதபடி ஆகிவிடுவாய்'' என்றேன்.

கமலாவிற்கு வாயெல்லாம் பல்; எனக்கு வயிறு எல்லாம் எரிச்சல்.

அடுத்த ஒரு வாரம் கமலா ரொம்ப பிஸி. என்னையோ, என் அக்காவையோ என் அம்மாவையோ ஒரு செகண்ட் கூட 'வாயில்' போட்டுக் கொள்ளவில்லை. காரணம் அவளுக்குத் தன் புதுக் காரைப் பற்றிப் பெருமை அடித்துக் கொள்ளவே நேரம் போதவில்லை! சங்கீதக் கச்சேரிகளுக்குச் சென்றால், வழக்கமாகப் புடவை, பாத்திரம், எத்தனாவது மாசம்?' போன்ற சப்ஜெக்

டுகளை விட்டுவிட்டு, பெட்ரோல் அநியாய விலை விக்கிறது? இதுக்கு ஏதாவது கவர்ன்மெண்டு வழி செய்யணும்' என்றே.

இந்த வெயில் காலத்தில் காருக்குள் உட்கார்ந்தால் அடுப்புக்குள் உட்காருகிற மாதிரி இருக்கிறது என்றே கார் சம்பந்தமாகவே பேசிக் கொண்டிருந்தாள். எந்த விஷயத்தைப் பற்றி யார் பேசினாலும் அதை எப்படியாவது காருடன் சம்பந்தப்படுத்திப் பேசி, தான் கார் வாங்கியதைத் தெரிவித்து விடுவாள்!

* * * * *



ஒரு வாரம் கழித்து கமலா, ஏன்னு, உங்களையே தொந்தரவு பண்ண வேண்டியிருக்கிறது, எப்போது காரில் வெளியே போக வேண்டுமென்றாலும், நானும் டிரைவிங் கத்துண்டா உங்களுக்குச் சௌகரியமாக இருக்குமே' ' என்றாள்.

உரலில் அகப்பட்டுக் கொண்டாகி விட்டது. உலக்கைக்குப் பயப்பட்டால் நடக்குமா? கமலாவிற்கு லேர்னர்ஸ் லைசென்ஸ் வாங்கிக் கொடுத்தேன்.

ஒரு நல்ல நாளாகப் பார்த்து டிரைவிங் சொல்லிக் கொடுக்க ஆரம்பித்தேன். முதலில் கிளட்ச், கியர், ஆக்ஸிலேட்டர், ஸ்டீயரிங், பிரேக், ரிவர்ஸ், இவைகளைப் பற்றி விளக்கினேன்.

இப்படி ஆரம்பிக்கும்போதே அரை டஜன் விஷயங்களைச் சொன்னால் யாரும் கத்துக்க முடியாது. ஒண்ணொண்ணை சொல்லிக் கொடுங்க. இன்னிக்கு பிரேக்' ' என்றாள்.

அவள் வழியே நான் போனேன். காரை ஸ்டார்ட் செய்தாள். கியரை நான் போட்டுவிட்டேன். கார் எப்போது விமானமாக மாறிற்று? கமலா ஆக்ஸிலேட்டரை, நடராஜப்பெருமான் தன் காலின் கீழுள்ள முயலகனை அழுத்துவதைப் போல, அழுத்தக் கார் டேக்—ஆஃப் செய்தது. ஓ, ரைட் சகோதரர்களே, ஒரு விமானத்தைக் கண்டுபிடித்துப் பெருமை தட்டிக் கொண்டீர்களே, கமலா உங்களுக்கு முன்பு பிறந்திருந்தால், அந்தப் பெயரை அவள் தட்டிக் கொண்டு போயிருப்பாள்!

காரை நோக்கி ஒரு ஆலமரம் வேகமாக ஓடி வந்து கொண்டிருந்தது. ' ' கமலா, மரம், மரம்'' என்று கத்தினேன். ''என்கிட்டே ஏன் கத்தறீங்க... அதை ஒதுங்கிப் போகச் சொல்லுங்களேன். என்கிட்ட கத்தறதுக்குத் தான் உங்கம்மா சொல்லிக் கொடுத்திருக்கிறாள்'' என்றாள்.

சட்டென்று பிரேக்கை அழுத்தினேன். கமலா 'வீல்' என்று அலறினாள். அவள் கால்மேல் வைத்து அழுத்தியதால், 'கால், கால்' என்று கத்தினாள். (காள், காள் என்று கத்தினாளோ!)

கியர் போடுவதற்குக் கமலா பட்ட பாடு இருக்கிறதே. அதை அதிகம் விவரிக்க முடியாது. காரணம், அது எங்கள் விவாகரத்தில் போய் முடியும். ''மேலே தூக்கியபடி போட்டால் முதல் கியர், கீழே வந்தால் இரண்டு, முன் பக்கம் அழுத்தியபடி மேலே தூக்கினால் மூன்றாவது...

''அதெப்படி? மேலே போட்டால் ஒன்று, அதுவே மூன்று...?''

''ஒண்ணும் மூணும் ஒரே பொஸிஷன் மாதிரி இருந்தாலும் மேல்பக்கமாக இழுத்துப் போடும்போது முதல் கியர்...''

''எதுக்கு இப்படி வைச்சிருக்காங்களோ? 1, 2, 3, 4 என்று வரிசையாக வெக்கறது. சரியான வடிக்கட்டியவன் காரை மேனுஃபாக்சர் பண்ணவன்'' என்று டீர் சர்ட்டிபிகேட்டைக் கொடுத்தாள்.

''இல்லே கமலா... எல்லாக் கார்லேயும் இப்படித்தான் இருக்கும்...''

''அப்போ எல்லாரும் கலப்படமில்லாத முட்டாள்கள்'' என்றாள் கமலா.

நல்ல காலம், ஃபோர்டு, ரோல்ஸ் ராய்ஸ், டொயோட்டா, வாக்ஸால், எட்



செட்ரா, எட்செட்ரா கார் தயாரிப்பாளர்களுக்குத் தமிழ் தெரியாது. ஆகவே நான் பிழைத்து இருக்கிறேன் — மான நஷ்ட வழக்குகளில் அகப்பட்டுக் கொள்ளாமல்!

''கமலா, நியூட்ரல் கியர் பற்றிச் சொல்லலையே. ஒரு கியரிலிருந்து இன்னொரு கியருக்குப் போகும் போது நியூட்ரல் வழியாகத்தான் போகும்.''

''இதென்ன கூத்து. அப்பப்போ, 'தாச்சி' தொடற மாதிரி நியூட்ரலைத் தொடணுமா''



சுரேஷ் புரொடக்ஷன்ஸ்
சென்னை
அலங்கார் A/C
உதயம் A/C
முரளிகிருஷ்ணா A/C
பகல் 11.30 காட்சி
வசந்தி A/C
மகாராணி
3 காட்சிகள்
தெய்வப்பிறவி
தயாரிப்பு
D.ராமாநாயுடு
டைரக்ஷன்
R.கிருஷ்ணமூர்த்தி
வசனம்
வி.சி.குகநாதன்
பாடல்கள்
கவிஞர் வாலி
இசை
சங்கர் கணேஷ்
ஒளிப்பதிவு
படத்தொகுப்பு
சக்ரபாணி

என்று சொல்லியபடியே கியரை மாற்ற, அது நியூட்ரலில் விழுந்து இருப்பதை அறியாமல் கமலா ஆக்ஸிலேட்டரை அழுத்தக் கார் இஞ்சின் ஓவென்று — அதாவது கமலாவின் குரலுக்கும் ஒரு படி மேலே போய் — அலறியது.

நான் கியருக்குத் தள்ளிவிட்டேன். கார் மறுபடியும், பஞ்ச கல்யாணியாயிற்று. இந்தத் தடவை 'குதிரை' கமலாவைப் பின்னால் தள்ளிவிட அவள் ரொம்பவும் குலுங்கி விட்டாள். பயந்து போய்விட்டாள். என் வாழ்க்கையிலே, கமலா பயந்ததை அன்று தான் முதன் முதலில் பார்த்தேன். கார், கணவனை விட உசத்திதான்!

ஒரு மாதிரி செட்டில் ஆன பிறகு மேலே காரை ஓட்டினாள். எதிரே கார் ஒன்று வந்தது. கமலா, "கொஞ்சம் ஓரம் ஓட்டு" என்றேன். பின்னால் கார் வரும்போது, "சைட் கொடு கமலா" என்றேன். நாலைந்து தடவை இப்படிச் சொன்ன பிறகு, கமலா பொறுமை இழந்தாள். "எல்லாருக்கும் இடம் கொடுத்துக் கொண்டு இருந்தால் தலை மேலே ஏறுவாங்க!" என்றதுடன், "எதுக்கு இத்தனைக் கார் ரோடுலே ஓடணுமோ? ஒரு பாவிக்கும் இந்த கியர், பிரேக் தொல்லை இல்லை. நிம்மதியா ஓட்டறாங்க. நம்ப கார்லேதான் எல்லா வம்பும்" என்றாள். நான் பேசாமல் இருந்தேன்.

சுமார் பத்து நாட்கள் பாடம் நடத்தினேன். கமலா ஒரு மாதிரியாகக் கற்றுக் கொண்டு விட்டாள்.

"ஆமாம். ரிவர்ஸ் எப்படி எடுப்பது என்று சொல்லிக் கொடுக்கலையே?" என்று கேட்டாள். ஒரு சுபயோக சுபதினத்தில் (மன்னிக்கவும். 'அசுபயோக அசுபதினம்' என்று திருத்தி வாசிக்கவும்.) உ ர ல் — உலக்கைத் தத்துவத்தின் அடிப்படையில், ரிவர்ஸ் சொல்லிக் கொடுத்தேன். தீவுத்திடலில் சொல்லிக் கொடுத்ததால், ஒரு சங்கடமும் இல்லாமல் அனாயாசமாகக் கற்றுக் கொண்டுவிட்டாள்.

அன்று வீட்டிற்கு வந்தோம். 'காரை ரிவர்ஸ் செய்து காரேஜில் விடுகிறேன்' என்றாள் கமலா. 'சரி' என்றேன். காரை ரிவர்ஸ் எடுத்தாள் ஜம்மென்று. ஆனால், துரதிர்ஷ்டவசம், காரேஜ்தான் காணாமல் போய்விட்டது.

நேரே பின் சுவரிலே போய் கார் மோத, சுவர் தன் மூதாதையரை நாடிப் போக, மேலே இருந்த ஆஸ்பெஸ்டாஸ் கூரை சடசடவென்று உடைந்துவிழ, கொடுக்கிற தெய்வம் இப்படிக் கூரையைப் பொத்துக் கொண்டு வருகிறதோ என்று நான் வெளியே தலைநீட்ட, ஒரு மரச் சட்டம் என் தலையை முத்தமிட, நான் அலற, கமலா 'ஹியர் சஸ் ஹாஸி' மாதிரி கத்தினாள்!

* * * * *

ஆப்கானிஸ்தானிலிருந்து பேரீச்சம் பழம் வர ஆரம்பித்தால்தான் என் காருக்கு மதிப்பு ஏற்படும்!



போட்டி: 52

லண்டனில் ஹைட்பார்க் பூங்காவில் போய் யார் வேணுமானாலும் உரையாற்றலாம். ஜனநாயகப் பொறுப்புணர்வுடன் நாட்டு நிலவரம் பற்றி, தலைவர்கள் போக்கு குறித்து, மக்களுக்குள்ள நிவர்த்தி செய்யப்பட வேண்டிய குறைகள் சம்பந்தமாக மனம் விட்டுக் காரசாரமாகப் பேசலாம். ஆக்க பூர்வ யோசனைகளைச் சொல்லலாம். கல்கியின் இந்த அரைப் பக்கத்தை இந்திய ஹைட்பார்க் பூங்காவாக எண்ணி சில வார்த்தைகள் "பேசுங்கள்". ஒருவர் ஓர் அம்சம் பற்றி மட்டுமே கீழே வெற்றிடத்தில் எழுதலாம். பிரசுரமானால் பரிசு. தவிர குலுக்கல் முறையில் ஒருவருக்குப் பட்டுப் புடவை. உறையின் மேல் "ஹைட்பார்க் பேச்சு" என்று குறிப்பிடவும். இந்த அரைப் பக்கத்தை முழுமையாகக் கத்தரித்து அனுப்பவும்.

முடிவு தேதி: 13.5.85

இந்தக் கடைசி பட்டுப் புடவையைப் பெறும் அதிர்ஷ்டசாலி நீங்களாக இருக்கலாமே!

என் பெயர்: ....

விலாசம்: ....

....

பட்டுப் புடவை பரிசுத் திட்டம்

தொழில் துறையின்

கிரியா ஊக்கி

''இவர் ஆயிரம் வருஷங்கள் இருப்பாரோ என்னவோ. ஆனால் இவர் பெயர் ஆயிரம் வருஷங்களுக்கு நிச்சயம் இருக்கும்!'' என்றார் ஸ்ரீமதி ருக்மிணிதேவி. அப்படி ஆயிரம் ஆண்டு பெயர் சொல்லிக் கொண்டு வாழப் போகிறவர் யார்? 81—வது பிறந்தநாளை அண்மையில் கொண்டாடிய தொழிலதிபர் திரு. சித்ரா நாராயணசுவாமி தான். இந்த விழாவை பாரதீய வித்யா பவன் சிறப்பாகக் கொண்டாடியது.

பல இளைஞர்கள் தொழில் தொடங்க; ஊக்குவித்தவராக; தமிழகத் தொழில் வளர்ச்சியில் முனைந்து பாடுபட்டவராக; தன்னலம் கருதாதவராக; எந்த பிரச்னைக்கும் ஒரு முடிவு காண முடியும் என்ற நம்பிக்கையாளராக — பலரும் அவரை வர்ணித்தார்கள். இவை தவிர—

ம. பொ. சி.:

எனக்கும் ராஜாஜிக்கும் இருந்த இடைவெளியை இட்டு நிரப்பியவர் நாராயணசாமி... இவர் இந்த மேடையில் இத்தனை சுறுசுறுப்பாக இருப்பதைப் பார்த்தால் எனக்குச் சந்தேகம் வருகிறது — இவருக்கு அறுபதாம் ஆண்டு விழாவோ என்று!

டாக்டர் ஹண்டே:

தமது பயணங்களுக்கு முன்னால், தாமே பெட்டியில் எல்லாவற்றையும் எடுத்து வைத்துக் கொள்வார். இப்போதும் அப்படித்தான்.

எம்.ஏ.எம்.ராமசாமி:

திரு. நாராயணசாமியை மறுபடியும் எம்.எல்.சி.யாக, சட்ட மேலவைக்கு நாமினேட் செய்ய வேண்டும் என்று முதல்வரையும் சிலம்புச் செல்வரையும் கேட்டுக் கொள்கிறேன்.

அமைச்சர் ராஜாராம்:

சித்ரா நாராயணசாமி ஆயிரம் பிறை கண்டவர் என்பதை நம்ப முடியவில்லை. இவர் சேலத்தில் பிறந்ததால் எங்கள் ஊர்க்காரர் என்ற பெருமை எனக்கு உண்டு.

• வி. எஸ்., ஆர். வி., சித்ரா நாராயணசுவாமி, விசாலாக்ஷி நாராயணசுவாமி.



ஜி.கே.சுந்தரம்:


'சித்ரா' நாராயணசாமியின் ஆங்கிலப் புலமை எல்லாருக்கும் தெரிந்தது. கம்பெனி கூட்டங்கள் சம்பந்தமான அறிக்கைகளில் கூடத் தப்புக் கண்டுபிடித்து விடுவார். அதனால் டிராஃப்ட்டை கூட்டத்துக்கு முன்னாலேயே அவருக்கு அனுப்பி வைத்துவிடுவோம்!

ஒருவர் பின் ஒருவராகப் பலர் சித்ரா நாராயணசாமிக்கும் ராஜாஜிக்கும் இடையில் இருந்த நெருங்கிய தொடர்பையும் சுதந்திராக் கட்சியின் கொள்கையான பர்மிட் லைசென்ஸ் ஒழிப்பு, வரிகள் குறைப்பு ஆகியன ஒருவழியாக இப்போது ஏற்கப்பட்டிருப்பதையும் சுட்டிக்காட்டி ராஜாஜியின் கருத்தே சரியானது என்பது இன்றேனும் ஏற்கப்பட்டதில் மகிழ்ச்சி தெரிவித்தனர். ஆர். விக்குப் பொறுக்கவில்லை. "அன்றைக்கு இருந்த நாட்டுப் பொருளாதாரச் சூழ்நிலையில் கண்ட்ரோல்கள் அவசியமாயிருந்தன. இன்றைய, மாறியுள்ள தொழில்–பொருளாதாரச் சூழ்நிலையில் அத்தகைய கட்டுப்பாடுகள் தேவையில்லை. எனவே தான் அவற்றை எடுத்துவிட்டார்கள்" — என்று கூறி நேருஜி, இந்திராகாந்தியின் கொள்கைகளை நியாயப்படுத்தித் திருப்தி அடைந்தார்.

'சித்ரா' நாராயணசாமி:

நானும் சர் சி. பி. ராமசாமி அவர்களும் ஒரு முறை ராஜாஜியைப் பார்க்கப் போனோம். "நீங்கள் சுயசரிதை எழுதுகிறீர்களாமே?" என்றார் ராஜாஜி சர். சி.பி.யைப் பார்த்து. "எழுதாதீர்கள்! சுயசரிதை எழுதுகிறவனுக்கு எதிர்காலம் கிடையாது—இறந்த காலம்தான்!" என்றார். எனக்குத் தெரிந்து அரை டஜன் ஆசாமிகளை, சுயசரிதை எழுதாமல் தடுத்த பெருமை ராஜாஜிக்கு உண்டு!

தொகுப்பு: **சித்தார்த்**



மோட்டார் கார் பந்தயத்தில் முதலில் வந்தவரிடம் பரிசுப் பணத்தை அளித்த போலீஸ் உயர் அதிகாரி, "இந்தப் பரிசுப் பணத்தை என்ன செய்ய உத்தேசித்துள்ளீர்கள்?" என்று கேட்டார். கார்க்காரர், "முதலில் கார் ஓட்ட லைசன்ஸ் வாங்க வேண்டும்!" என்றார். அதிகாரி திடுக்கிட்டு, "அப்படியானால் லைசன்ஸ் இல்லாமலா கார் ஓட்டிக் கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்க, முன் சீட்டிலிருந்த கார்க்காரனின் மனைவி, "அவர் குடி போதையில் ஏதோ உளறுகிறார். நம்பாதீர்கள்!" என்று சொல்ல, அதிகாரி மேலும் அதிர்ச்சியடைந்து, "என்ன! குடி போதையில், லைசன்ஸ் இல்லாமல் கார் ஓட்டி வருகிறீரா?" என்று சத்தம் போட்டார். காரின் பின் சீட்டில் காரை ஓட்டி வந்தவரின் தந்தையார் இருந்தார். அவருக்கு 'காது சரியாகக் கேட்காது. ஆனால் ஏதோ விபரீதம் நடந்து விட்டதை மட்டும் உணர்ந்து கொண்டு, "ஐயா, இந்தப் பயலிடம் காரையெல்லாம் இரு டாதே; வம்பிலே மாட்டிக் கொள்வாய் என்று படித்து படித்துச் சொன்னேன். கேட்டானா? நல்லா பட்டும்!" என்றார்!

— வெள்ளகால் இரா. சுந்தையா

நான் கல்லூரி ஹாஸ்டலில், 79–80 வருடத்தில் இருந்த போது, எங்கள் மெஸ் சாப்பாட்டில் ஒரே கல்லாக இருந்தது. வார்டன் திரு பண்டரிநாதனிடம் எவ்வளவோ முறையிட்டும் பயனில்லை.

குறும்புக்காரனான என் நண்பன் ஒரு கவிதை எழுதி அவர் டேபிளில் வைத்து விட்டான்:

கல்பாதி மண்பாதி
கலந்துண்டோம்
பல்லின்
முன் பாதி காணவில்லை
பண்டரிநாதா!

அதைப் படித்தவுடன் அவருக்குச் சிரிப்பு தாங்கவில்லை. யார் 'இதை எழுதியது' என்று கேட்டு பெருந்தன்மையுடன் தட்டிக் கொடுத்துப் பாராட்டினார். சாப்பாடு அதற்குப் பிறகு எப்படி என்கிறீர்களா? நாங்கள் ஹாஸ்டலை விட்டே வெளியேறி விட்டோம்!

— பாஸ்கர்





தேவி பாரடைஸ் 70MM A-C
அன்னை அபிராமி A-C
ஸ்ரீ கிருஷ்ண
உதயம் A-C
மற்றும் தமிழகமெங்கும்
கமல் நடிக்கும்..
சத்யா மூவீஸ்
காக்கி சட்டை A
ராஜசேகர்
இளையராஜா
ஏ.எல். நாராயணன் • ரங்கா • K.R. கிருஷ்ணன் • சூப்பர் சுப்பராயன்
G.தியாகராஜன் • V.தமிழழகன்

* மனோபாரதி, பாண்டிச்சேரி.

? சிவாஜியின் 250—வது படம் கே. ஆர். விஜயாவின் 200—வது படம் எது தேவலாம்?

! சிவாஜி தமது 250—ல் விழியை உருட்டுகிறார், பெரிதாய் மீசை வைத்திருக்கிறார் என்பதைத் தவிர சொல்வதற்கு எதுமில்லை. படிக்காத பண்ணைதான் விஜயாவுக்கு இருநூறு. ருத்ர தாண்டவம், கண் கலங்கல் அப்புறம் அவருக்கே உரிய ஸ்பெஷல் புன்னகை என்று அலட்டிக் கொள்ளாமல் செய்திருக்கிறார்.

ஒரு சின்ன மனத்தாங்கல். சிவாஜியின் 250 ஆக ப. பண்ணையாரைக் கொண்டு வந்திருந்தால் ஆறுதலாக இருந்திருக்கும்.

* எஸ். சீதாலக்ஷ்மி, காரைக்குடி.

? தி. மு. க. சட்டசபையில் எண்ணிக்கையில் குறைந்திருந்தாலும் மக்கள் மத்தியில் அதன் செல்வாக்குக் குறையவில்லை என்று வீரமணி கூறியுள்ளாரே?



* கலைவை



* சுற்றி வளைத்து...

பார்த்திருக்கிறீர்களா? அதுவாவது எப்படியும் ஒரு சொம்பு நீரையாவது மொண்டு கொண்டு வந்துவிடும்...

* கோ. பாஸ்கர், இளங்கார்குடி.

? இந்திய அரசியல் அகராதிப்படி சோஷலிஸம் என்றால் என்ன?

தூங்குகிற புலியை

! கடுகு சிறுத்தாலும் காரம் போகாது தான். எனினும் இப்படியெல்லாம் வீரமணி தி. மு. க. வுக்கு வக்காலத்து வாங்குவதை நிறுத்தி ஒதுங்கினாலே சட்டமன்றத்தில் தி. மு. க. வின் எண்ணிக்கை கூட வாய்ப்பு இருக்கிறது. (ஒரு ரகசியம்: தி. மு. க. பொதுக் குழுவிலேயே சிலர் வீரமணியுடன் தி. மு. க. எந்த உறவும் வைத்துக் கொள்ளக் கூடாது என்று பேசினார்களாம்.)

* எஸ். ஏ. கோவிந்தகுமார், நீடாமங்கலம்.

? மனைவி சொல்லே மந்திரம் என்று இருப்பது சரியா?

! தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்று தான் கேள்விப்பட்டிருக்கிறேன். நீர் தலையணை மந்திரத்துக்குப் போய் விட்டீர். சரி, அதிலும் சில நல்ல விஷயங்கள் இருக்கக் கூடும். மனைவி சொல் மட்டுமே மந்திரம் அவள் என்ன சொன்னாலும் அதுவே சரி என்று இருப்பதுதான் தவறு.

? யார் தியாகி?

! ஸ்ரீமான் பொதுஜனம்.

* ஜெ. முகமது ஃபாரூக், நெல்லிக்குப்பம்.

? சுருங்கச் சொல்லி விளங்க வைப்பதில் வல்லவர் நாவலரா, பேராசிரியரா?

! ஏன் ஸார் கிண்டலா? சேலம் மாவட்ட கிணறுக்குப் போடப்பட்ட, தாம்புக் கயிறு

! சோஷலிஸம் ஒரு பெருங்குழப்பம். நமது ஜனநாயக சோஷலிஸம் என்பது அதைவிடப் பெருங்குழப்பம். எதுக்கு இந்த வெய்யில் காலத்தில்...

* அ. செல்வராஜ், கரூர்.

? அமைச்சர்கள் மீதான ஊழல் புகார்களை விசாரிக்கும் குழு கலைக்கப்பட்டது பற்றி?

! விசாரிக்க முடியாத அளவுக்கு ஊழல் குற்றச்சாட்டுக்கள் பெருகிவிட்டதோ என்னவோ!

* பழ. சண்முகம், வேதாரண்யம்.

? ஆங்கில மொழியை அடிமைத்தனத்தின் சின்னம் என்றும் ஆங்கிலத்தை அகற்றி விட்டு எல்லா மட்டத்திலும் ஹிந்தியைப் பரப்பவேண்டும் என்றும் ஜனாதிபதி ஜெயில் சிங் கூறியிருப்பது பற்றி...?

! தூங்குகிற புலியை இடறுகிற வேலையை இப்போது ஜெயில்சிங் செய்திருக்கிறார்.

* கே. கணேஷ், சென்னை—6.

? கடவுள் ஏன் நமக்கு இரண்டு காதுகளைத் தந்திருக்கிறார்?

! ஏன், மேலும் பல காதுகள் கொடுத்திருந்தால் அரசியல்வாதிகள் பூ சுற்றுவதற்கு வசதியாக இருக்குமே என்கிறீர்களா?

நீங்கள் கேட்டவை — தராசு

* காம சாஸ்திரி, மணவை.

? கற்றோரைக் கற்றோரே காமுறுவர்—இதிலே வரும் காமம் எந்தக் கண்ணோட்டத்தில் சொல்லப்பட்டுள்ளது?

! இதுகூடவா தெரியவில்லை. காமசாஸ்திரி என்று பெயர் வைத்துக் கொண்டு... என்ன ஸார், இது!

* சிவகங்கை அ. ரமணி, காரைக்குடி.

? காய்ச்சிய பாலுக்கும் கூச்சமுள்ள பெண்ணுக்கும் சுவை அதிகம் என்று ஒருமுறை பேரறிஞர் அண்ணா கூறியது பற்றி...?

! காய்ச்சிய பால் குறுகும்; நாணமுள்ள பெண்ணும் அப்படித்தான். அதை ஆற வைக்க வேண்டும். இதையும் தான் ஆறப் போட வேண்டும். பாலின் சூடு சற்று தணிந்ததும் மடக்கென்று ஒரு மிடறு விழுங்க முடியாது; உதட்டைச் சுட்டுக் கொள்ளாமல் விளிம்பைத் தொட வேண்டும். பாவை சமாசாரமும் அப்படியே... யோசித்தால் சொல்ல நிறைய இருக்கிறது... அண்ணாவின் பேச்சே தனிச் சுவைதான்.

* ஜி பாரதி, காங்கயம்.

? இன்னொரு காமராஜரையும் இன்னொரு ராஜாஜியையும் நம்மால் உருவாக்க முடியாமல் போனதேன்?

! காமராஜர், ராஜாஜி போன்றவர்கள் உருவாக்கப்படுவதில்லை; உருவாகிறார்கள். அவர்களைப் போல் இன்னும் இருவரை நம்மால் உருவாக்கமுடியுமானால் பிறகு அவர்களுக்கு என்ன பெருமை?

* கே. எஸ். முரளிதரா, ஈரோடு.

? துன்பம் வரும்போது மட்டும் மனிதன் கடவுளை நினைப்பதாகச் சொல்கிறார்கள். அப்படியானால் கோவிலுக்கு வருபவர்கள் எல்லாருமே துன்பத்தோடுதான் வருகிறார்களா?

! இல்லையே! விரும்பியது கிடைத்தாலோ, எண்ணியது நிறைவேறியதாலோ நேர்த்திக் கடன் செலுத்த மனநிறைவோடு வருவோரும் உண்டு. ஆனால் லாப நோக்குக்காகக் கடவுளை வணங்குவது அவ்வளவு சரியில்லை. நினைத்தது கைகூடாமல் ஏமாற்றம் உண்டாகுமானால் என்ன செய்வது? எனவே ஒரு சரணாகதி மனப்பான்மையுடன் இறைவனைத் தொழுவதே உயர்ந்தது. 'இறைவா! நீ கீதையில் உபதேசித்தபடி நான் என் கடமையை என் அறிவாற்றலையும் உடலுழைப்பையும் முழுமையாகப் பயன்படுத்திச் செய்கிறேன். என் முயற்சியை உன் பாதங்களிலேயே சமர்ப்பிக்கிறேன். வெற்றியோ தோல்வியோ நீ கொடுப்பதை ஏற்கிறேன்'. என்ற மனப்பக்குவத்துடன் இறைவனைத் தொழுவது விவேகம். அது கவலைகளைப் போக்கும். டென்ஷன், ஸ்ட்ரெஸ், அல்ஸர், ஹார்ட் அட்டாக், பிளட் பிரஷர் போன்ற உடல் உபாதைகளைத் தவிர்க்கும். கோப தேசம் உலகில் சந்தோஷமாக வாழ மட்டுமல்ல! உடல் மன ஆரோக்கியத்துடன் வாழவும் ஏற்றது. இதை, இன்றைய மனோதத்துவ நிபுணர்களே கீதையை விஞ்ஞான ரீதியாக ஆராய்ந்து சொல்கிறார்கள்.

இடறுகிற வேலை!



* ரூ. 10 பரிசு பெறுபவர்:
அ. செல்வராஜ்,
கரூர்—1,
(விலாசம் தேவை)



* 250—வது



* உருவானவர்.



* இடறுகிறார்.



* 200—வது

இளங்கன்று



'ஒரே ஒரு ஊரிலே ஒரே ஒரு பண்ணையாராம். அவர் படா படா கொடுமைக்காரராம். அந்த பண்ணையார் ஒரு நல்லவனை ஐயனார் சிலைக்கு முன்னாடி துண்டு துண்டா வெட்டுவாராம். அந்த நல்லவனோட பையன் பெரியவனா வளர்ந்து, பண்ணையார் பொண்ணை 'லவ்' பண்ணுவானாம். அதே சமயம் பண்ணையாரைப் பழி வாங்குவானாம்!'

'ச் சே, அற்புதமான கதைங்க. இதுவரைக்கும் இது மாதிரி கதையை கேட்டதேயில்லீங்க'.

இப்படியாகத்தானே கலந்துரையாடி இளங்கன்று படத்தை எடுத்துத் துள்ளித் திரிய விட்டிருக்கிறார்கள். பேரக் குழந்தைகளுக்கு, பாட்டி தூக்கம் வர வழைப்பதற்காகச் சொல்லும் கதைகளுள் ஒன்றான பண்ணைக் கதையில் —

நிறைய தீப்பந்தங்கள் — துரத்தல்கள் — ஓட்டங்கள் — ரத்தத்துளிச் சிதறல்களுடன் அரிவாள் வெட்டுகள் என்று விறு விறுப்பான ஒரு ஆரம்பம்.

அப்புறம் காளை முரளியின் அறிமுகம். அப்புறம் ஒரு ரேக்ளா போட்டி. என்ன இருந்தாலும் ரேக்ளாவை எம். ஜி. ஆர். காலத்தில் ரசிக்க முடிந்தது போல இப்போது ரசிக்க முடியவில்லை.

முரளிக்கு சண்டைக் காட்சிகளில் புயல் போல் ஒரு வேகம் — அதுவும் முரளியின் பானை உடைப்பு மகோத்சவ முதற் சண்டை சில்லு விளப்புகிறது.

நம்பியார் தான் பண்ணையார். இன்னும் அதே பயமுறுத்தும் விழிகள், நடுங்க வைக்கும் குரல், கத்திச் சண்டை போடும் லாகவம்;— இருந்தும் கூட பழைய முகம் இல்லையா? கொஞ்சம் அலுப்பு தட்டுகிறது.

அனிதா, பட்டணத்தில் படித்த பாண்ட் போடும் ஹீரோயின். அவரும் அவருடைய போதை மருந்து சினேகிதிப் பட்டாளமும் ஆரம்பத்தில் அடிக்கும் லூட்டிகள் — வெறுத்து கட்டியிருக்கிறார்கள்.

அது சரி, காட்டில் இருக்கும் புலி (!) நம்பியாரின் பெரிய மகனை எதற்காகக் கொல்ல வேண்டும்? கதை, வசனம் இந்த இடத்தில் தடுமாறுகிறாற் போல் இல்லே? நோட்ஸ் போட்டிருக்கலாம். வசதியாய் இருந்திருக்கும்.

நம்பியாரை பின்னால் கட்டி கொடியேற்று விழாவிற்கு அழைத்துப் போய், முரளி நம்பியார் சார்பில் பேசுவதென்ன? கொடியேற்றுவதென்ன? இனிப்பு வழங்குவதென்ன? நம்பியார் சார்பிலேயே நிலத்தை ஏக்கர் ஏக்கராய் தானம் பண்ணுவதென்ன? அமர்க்களம் தான்.

'பாவம் டெல்லி கணேஷ், இப்படி ஒரு பரிதாப காரெக்டரா?' என்று நினைத்துக் கொண்டிருக்கும் போதே மனிதர் மணையில் உட்கார்ந்து மந்திரம் ஓதி 'அபிஷ்டு, நாளைக்கு உங்கம்மா திதிடா, அதுக்கும் நாந்தான்' என்று ஒரு போடு போடுகிறாரே— அட்டகாசம்.

கண்மணி சுப்பு வசனம். 'தண்ணில வெளையற உப்பு, தண்ணிலதான் கரையணும்' என்று அங்கங்கே அழுத்தமாகத் தெளித்திருக்கிறார்.

என்ன இருந்து என்ன? பழைய கள்ளை எடுத்து புதுப் பானையில் விட்டிருக்கிறார்கள்.

ஷிவா கா இன்ஸாஃப்

அம்மா அப்பா பழிவாங்கல்
அம்புலிமாமா சாகசம்
சூப்பர் மேனின் பாதிப்பு — என்று சுமாரும் கலவை.

3—D தான்.
அதற்காக?
சும்மாச் சும்மா மூக்குக்கு நேரே சாக்லேட் டையும்,
திரிசூலத்தையும் கராத்தே
சண்டைக் குச்சியையும்
காண்பித்தால் ரசிக்கவா முடியும்?
எரிச்சல் தான் வருகிறது.


மலையாளத்தில் மசாலாவும் இருந்தது.
மனதைத் தொடும் காட்சியும் இருந்தது.
3—Dயைக் கனிவாய்க் கையாளத் தெரிந்த
டைரக்டரும், காமிராக்காரரும் இருந்தார்கள்.

இந்தியில்
வெறும் சடபுட ஆரவாரம் மட்டும்.

ஹிந்தி

படிக்காத பண்ணையார்





படத்தின் தலைப்பே சொல்லி விடுகிறது. கதை சுமார் இருபது வருடங்களுக்கு முந்தைய கதை என்பதை:

படிக்காத பெரிய பண்ணை. படிக்காத சிறிய பண்ணை. சிறிய பண்ணையின் மனைவி. சிறிய பண்ணையின் மூன்று 'உத்தம' புத்திரர்கள். இந்த புத்திரர்கள் சொத்தைப் பிரிக்கச் சொல்வதும், குடும்பத்தில் பிரிவினை நடப்பதும், மூச்சு முட்ட, மூச்சு முட்ட அவை வரும் வசனம் பேசுவதும் — சாட்சாத் கே. எஸ். கோபாலகிருஷ்ணனின் படம் தான் என்று சொல்லாமல் சொல்ல வைக்கின்றன.

ஒரு அம்பாஸிடர் காரில் வக்கீல் சகிதம், கர்ப்பிணிப் பெண்ணும் அவளது கார்டியன்களும், பின்னால் லாரி நிறைய கம்பு ஏந்திய ஆட்களுமாய் வரும் போது இந்த பண்ணையார் எதிரில் நின்று என்ன பண்ணி விடப் போகிறார் என்று பார்த்தால், திடீரென்று மடியிலிருந்து துப்பாக்கியை உருவி 'டுமீல்' என்று சுட்டுக் காட்டி அத்தனை பேரையும் அதிரடிக்கிறாரே —

பெருங்காய டப்பாவில், காரம், குணம், மணம் நிறைந்த பெருங்காயம் இன்னும் ஏராளமாக இருப்பதை சிவாஜி ஒவ்வொரு ஷாட்டிலும் நிரூபித்திருக்கிறார்.

கே. ஆர். விஜயா காளி ஆவேச ஆட்டத்தின் போது மிகையென்று மனதின் ஒரு மூலையில் ஏதோ ஒரு நெருஞ்சி நெருடினாலும், சிலிர்க்க வைத்திருக்கிறார்.

தே. சீனிவாசன் குணசித்திரமான ஒரு பாத்திரத்தில் வெற்றி இலக்கை நோக்கி ஓடப் பார்க்கிறார். வசனம் பேசுகிற முறைதான் அவர் காலை வாரிவிட்டிருக்கிறது.

'யோவ் வக்கீலு, வெள்ளை வெள்ளையா வேட்டி, **சட்டை போட்டு கறுப்பு கறுப்பா எழுதிட்ட இல்லை?''** என்று மகேந்திரன் கேட்குமிடத்தில் புன்சிரிக்க வைக்கிறார். மற்ற இடங்களில் பத்தோடு பதினொன்று. காலத்திற்கு ஏற்ற மாதிரி குலுக்கல் டான்ஸ் வேறு!

விஸ்வநாதனும் வி. கே. ராமசாமியும் வில்லன் கோஷ்டிக்காரர்கள். பரிதாபகரமான என்று சேர்த்துக் கொண்டால் நன்றாக இருக்கும்.

உத்தம புத்திரனை இரண்டாவது முறை காட்டிய போது இளசான முகவாகு கொண்ட தளதள சிவாஜிக்காகவே வெகுவாக ரசிக்க முடிந்தது.

இப்போது — ஹூம்!

—ஜெயமன்மதன்.

ஆபத்துக்கு உதவ ஓர் அமைப்பு



• டாக்டர் சொக்கலிங்கமும் பல்லவன் போக்குவரத்துத் தலைவர் கே. ரவீந்திரனும்.



• ஆம்புலன்ஸ் டிரைவர்கள், உதவியாளர்களுக்குப் பயிற்சி.

சைக்கிளோ, ஸ்கூட்டரோ, இல்லை காரோ, ஏதோ விபத்து நேர்ந்து விடுகிறது. அடிபட்டுக் கிடப்பவரை என்ன செய்ய? போலீஸ் வருமா? இவரை டாக்டரிடம் எப்படிக் கொண்டு போவது? ஏதாவது நடந்து விட்டால் கோர்ட் அது இது என்று அலைய வேண்டி வருமா?

நியாயமான தயக்கங்கள் எல்லோருக்குமே ஏற்படக்கூடும். இப்படிக் குழம்பித் தயங்குவதால் விலை மதிக்க முடியாத ஓர் உயிரைப் பறிகொடுத்துவிட நேரலாம்.

"விபத்து நேர்ந்து ஒரு மணி நேரம் பொன் போன்றது. **Golden Hour** என்கிறார்கள். இதற்குள் உடனடி நடவடிக்கை எடுத்துவிட்டால் நிச்சயப் பேரைக் காப்பாற்றி விட முடியும்" என்கிறார் தேவகி மருத்துவமனையின் டாக்டர் கே. சொக்கலிங்கம். தமிழ்நாடு விபத்துத் தடுப்புக் கழகத்தின் செயலாளர் இவர்.

சென்னையில் எல்லோருமே நினைவிலிருத்திக் கொள்ள வேண்டிய மூன்று தொலைபேசி எண்கள் 73935, 77707, 77788.

விபத்து நடந்து அடிபட்டவர் உயிரோடு இருக்கிறார் என்ற நிலை இருக்குமானால் யார் வேண்டுமானாலும் இந்த எண்களுக்குப் போன் செய்யலாம். வடசென்னைப் பகுதியில் மூன்று பல்லவன் ஆம்புலன்ஸ்களும் தென் சென்னைப் பகுதியில் இரண்டு தனியார் ஆம்புலன்ஸ்களும் தயாராக இருக்கின்றன. அடிபட்டவரை உடனே அருகிலுள்ள மருத்துவமனைக்கு அழைத்துச்சென்று விடுவார்கள். ஆட்டோ வாடகையை விடக் குறைவான பெயரளவுக் கட்டணம் செலுத்த வேண்டி வரும்.

அடிபட்டவர் பேச முடியுமானால் அவர் விரும்புகிற மருத்துவமனைக்கே அழைத்துச் செல்வார்கள். மற்றவர்களைப் பொறுத்த வரை வைத்தியம் பண்ணுவதுதான் முதல் கடமை.

முன்பெல்லாம் ஆக்ஸிடெண்ட் கேஸ்களைத் தனிப்பட்ட மருத்துவமனைகளில் சேர்த்துக் கொண்டு சிகிச்சை தரத் தயங்கியதுண்டு. 'ஏதாவது' ஆகிவிட்டால் கோர்ட், வழக்கு என்று போய் நிற்க வேண்டி வருமோ என்ற பயம்.

"இந்தப் பயம் தேவையற்றது. ஆயிரம் விபத்துக்கு இருபது என்கிற அளவில்தான் நீதிமன்ற விவகாரம் வருகிறது. அதிலும் மருத்துவமனைகளில் விபத்துப் பதிவேடுகள், கேஸ் ஷீட்டுக்கள் எல்லாம் சரிவர இருக்குமானால் அப்படியே ஏற்றுக் கொள்

விபத்து நேர்ந்தால்

இருர்கள்'' என்கிருர் டாக்டர் கே. சொக்கலிங்கம்.

'தமிழ்நாடு அஸோஸியேஷன் ஆஃப் ட்ரௌமா கேர்' என்கிற அமைப்பு இந்த ஆம்புலன்ஸ் சேவையை முடுக்கியுள்ளது. தென்னிந்திய ஆடோமொபைல் அஸோஸியேஷனுடன் இணைந்து நடைபெறும் இந்தப் 'பொன் நேரத்' திட்டத்தில் உறுதுணை, உதவி எல்லாம் தருகிறவர்கள் பல்லவன் நிறுவனமும் காவல்துறையினரும்.

விபத்தில் அடிபட்ட ஒருவரைத் தூக்குவது கூடச் சாதாரண விஷயமில்லை. முதுகெலும்பில் அடிபட்ட ஒருவரைக் காப்பாற்றஎண்ணிய ஆட்டோ டிரைவர், அவரை அப்படியே மூட்டை மாதிரி தூக்கிப் போக விபரீதவிளைவு ஏற்பட்டுவிட்டதாம். ஆகவே அடிபட்டவரை எப்படித் தூக்க வேண்டும், எப்படி மருத்துவமனைக்குக் கொண்டு வர வேண்டும் என்பதற்கெல்லாம் ஆம்புலன்ஸ் டிரைவர்களுக்கும் உதவியாளர்களுக்கும் பயிற்சியளிக்கிருர்கள்.

தொலைபேசித் தகவல் வந்தவுடன் களத்துக்கு ஆம்புலன்ஸ் பறக்கும். அடிபட்டவர் நிலை சந்தேகமாக இருக்குமானல் ஒரு டாக்டரும் அனுப்பப்படுவார். காவல் துறைக்கும் இவர்களே விபத்தைப் பற்றி அறிவித்துவிடுவார்கள். 'ட்ரௌமா கேர்' கேந்திரத்தில், சென்னை நகர வரைபடம் இருக்கிறது. விபத்து நடந்த இடத்தை அறிந்து கொண்டு அருகிலுள்ள ஆம்புலன்ஸ் செயல்படும்.

இப்படி விபத்தில் அகப்பட்டவர்களை ஏற்றுச் சிகிச்சை தர, அடையாறு கல்யாண் கிளினிக், அப்போலோ மருத்துவமனை, கே. ஜே. மருத்துவமனை, நேஷனல் ஆஸ்பிடல், ரெய்னி மருத்துவமனை, தேவகி மருத்துவமனை போன்ற தனியார் மருத்துவமனைகளும் முன்வந்துள்ளன.

இந்த **'Golden Hour'** திட்டத்தைச் சென்னைக்கு வெளியே மற்ற இடங்களுக்கும் விரிவுபடுத்தத் திட்டம் வைத்திருக்கிருர்கள்.

இந்தக் குழுவில் உறுப்பினராகச் சேர்ந்து விட்டால் அடையாள அட்டை கிடைக்கும். நம்முடைய பெயர் முகவரி, இரத்த வகை, அலர்ஜி விவரம் உட்பட அதில் இருக்கும். நினைவிழந்து கிடந்தாலும் இந்த அடையாள அட்டை உதவும்.

அண்மையில் அமைச்சர் டாக்டர் ஹண்டே சென்னையில் இத்திட்டத்தைத் தொடங்கி வைத்திருக்கிருர். இந்தியாவிலேயே இப்படி ஓர் அமைப்பு ரீதியாக ஆபத்துக்கு உதவுகிற இயக்கம் இது ஒன்றுதான் என்கிருர்கள்.

—யெஸ்பால்.

21-ம் நூற்றாண்டு இளைஞனுக்கு

தமிழன்பன்



(இலக்கியச் சிந்தனை ஆண்டு விழாவில் படிக்கப்பட்ட கவிதை)

* என்னருமை
இருபத்தோராம் நூற்றாண்டுத்
தமிழா...
எனது வாரிசாக
நீ வர வேண்டாம்.
ஒரு புதிய தலைமுறையின்
மூல விதையாக
முளைத் தெழுவாய்!

* எங்கள் கவடுகளில்
உனது நடைக்கு
அர்த்தத்தைத் தேடாதே...
ஒரு
கம்பீர நடையில் — உன்
கால்களின் கவுரவத்தைக்
காப்பாற்று...!

* இருபதாம் நூற்றாண்டுச்
சட்டியைச்
சுரண்டிக் கொண்டிருக்காதே!
அதிலிருந்து—
எங்களுக்கே ஏதும் கிடைக்க
வில்லை...

* வாழ்க்கை,
உன்னையொரு
சங்கீதமாக இசைக்கட்டும்!
திசைகள்,
உன்னைப்
பூக்களால் வருணிக்கட்டும்!

* உன் முன்னோர் நடத்திய
ஜனநாயகம் பற்றி
நன்றாக நினைவில் வை...
உண்மை ஜனநாயகத்தை
அதனோடு
ஒப்பிட்டுப் பார்க்கச்
சந்தர்ப்பம் வரும்போது
உபயோகமாகும்!

* சட்டம் ஒழுங்கையெல்லாம்
சரியா நாங்கள் காப்பாற்
றினோம்.
ஜனங்களை மட்டும்தான்
காப்பாற்ற மறந்தோம்!
நீ...
ஜனங்களைக் காப்பாற்று — இந்த
ஜனநாயகத்திடமிருந்தும்
ஜனங்களைக் காப்பாற்று!

* தலைவன் சிறையில்—
தீக்குளித்தோம்...
தலைவன் நோயில்—
தற்கொலை புரிந்தோம்...
இப்படித்
தனி நபருக்குச் செத்தோம்...
தத்துவத்துக்குச் செத்ததில்லை!
வாழத்தான் தெரியவில்லை
என்று நினைக்காதே!
எங்களுக்குச்
சாகவும் கூடத்தான் தெரிய
வில்லை...!

* இந்த நிவாரணச் சாவுகளால்
—நீ
உயிரைக் கேவலப்படுத்தாதே!
மரணத்தையும் — ஒரு
லட்சியத்தால்
அலங்கரித்து விட்டுப்போ!

* பிறந்த நாள் வைத்துத்
தனிமனிதர் ஜாதகம்
கணிக்கப்படுகிறது!
உனது—
இறந்தநாள் வைத்து
நாட்டின் எதிர்காலம்
கணிக்கப்படட்டும்!

* விஷயம் இருந்ததால்
நாங்கள் பேசவில்லை...!
பேசுவதே—
எங்களுக்கு
விஷயமாக இருந்தது!

* சப்தங்களின் சக்தியிலிருந்து
மின்சாரம் எடுக்க முடியு
மெனில்
இங்கே—
ஒவ்வொரு மனிதனும்
ஒவ்வொரு 'கல்பாக்கம்'
ஆவான்!

* இனிவரும் தமிழனே...
துடைப்பத்தால் இவற்றை
யெல்லாம்
கூட்டித் தள்ளிவிட்டு நட...
மொழி என்பது...
சப்தமல்ல... சுடர்!
உனது உதடுகளை
அசைத்து அசைத்து
அதை அணைத்துவிடாதே!

* உண்மைக்கு நீ செய்யும்
மரியாதை—
அதைப் பற்றிப் பேசுவதல்ல...
அதையே பேசுவதுதான்!
உன்னைத் தாழ்வாரத்தில்
ஒளியேற்றி வை...
உதடுகள்
உண்மைக்கு
உத்தியோகம் பார்க்கட்டும்!

* எங்கள் வாழ்க்கையிலிருந்து —
நீ
விதிகளை உனக்கு
வகுத்துக் கொள்ளாதே...
இருமல்களிலிருந்து
ஆரோக்கியத்தைத்
தயாரிக்க முடியாது...
புண்களின் வாசலில் நின்று
புன்னகையை யாசிக்காதே!

* வருகின்ற நாளில்
வாழப் போகும் தமிழனே!
உண்மைகளை மதிப்பது
உனக்கு
லாபமில்லாமல் இருக்கலாம்.
ஆனால்
பொய்மைகளின் வெற்றி —
இந்தப்
பூமிக்கு நல்லதல்ல...!

* இருப்பவன்
மாடி அடுக்கின் எண்ணிக்
கையும்
இல்லாதவன்
குடிசைப் பொத்தல்களின்
எண்ணிக்கையும்
ஏறிக் கொண்டே இருப்பது
நியாயமாகுமா என்று
நீதிதேவனிடம்
ஒருநாள் கேட்டேன்!
அவன்
அரசாங்கத்திடம்
விசாரித்துச் சொல்வதாகப்
புறப்பட்டுப் போனான்—
போனவன் பிறகு
ஆளும் கட்சியில்
சேர்ந்துவிட்டதாக
அறிக்கை விட்டான்!

* எதிர்க் கட்சிகளே
என்ன சொல்கிறீர்கள்
என்றேன்...
நாங்கள்—
ஆளும் கட்சியை வீழ்த்திவிட்டு
ஆள ஆசைப்படும் கட்சிகள்...
எதிர்க்கட்சிகள் அல்ல
என்றனர்...

* இருபத்தோராம் நூற்றாண்டுத்
தமிழனே! முடிவில்
ஒரு வார்த்தை...
ஈழத் தமிழச்சியை
மணந்து கொள்!
உனக்கேனும்
புலிகள் பிறக்கட்டும்!

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of
Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press, Race Course Road,
Guindy, Madras-600032 (Phone: 431543)

Assistant Editor: P. S. Mani

Editor: K. Rajendran


வாய் துர்நாற்றத்தை தடுத்திடுவீர். பற்சிதைவை எதிர்த்திடுவீர்.



கோல்கேட்டின் பாதுகாப்பு வளையத்தை பெற்றிடுவீர் !

தவறாமல் கோல்கேட் உபயோகிப்பதால்,
உங்கள் குடும்பத்தினரின் பற்களுக்கு ஆரோக்கியம், வலிமை, புத்துணர்ச்சி
தரும் தூய சுவாசம் கிடைக்கிறது.
இதுவே கோல்கேட்டின் பாதுகாப்பு வளையம்.

நீங்கள் பல் துலக்கும் ஒவ்வொரு முறையும்
கோல்கேட்டின் நம்பகமான ஃபார்முலா
செயல்படுவது எப்படி என்றால்...



உணவுத் துணுக்குகள் பற்களுக்கிடையே
சிக்கிக் கொள்வதால் துர்நாற்றத்தையும்,
பற்சிதைவையும் உண்டாக்கும்
பாக்டீரியாக்கள் வளருகின்றன.



கோல்கேட்டின் ஒப்பற்ற செயல்புரியும்
நுரை ஆழ ஊடுருவிச் சென்று,
துர்நாற்றத்தை ஏற்படுத்தும் உணவுத்
துணுக்குகளையும் சிதைவு ஏற்படுத்தும்
பாக்டீரியாக்களையும் அகற்றுகிறது.



முறையாக கோல்கேட் கொண்டு பல்
துலக்குவதால் புத்துணர்ச்சி தரும்
தூய சுவாசமும், வலிமை மிகுந்த
ஆரோக்கியமும் தருகிறது.

ஒவ்வொரு முறையும் சாப்பிட்ட உடன்,
உங்கள் குடும்பத்தினர் தவறாமல் கோல்கேட்
கொண்டு பல் துலக்கட்டும்.
வாய் துர்நாற்றத்தை தடுத்திடுவீர்.
கோல்கேட்டின் பாதுகாப்பு வளையத்தை பெற்றிடுவீர்.



B84.55 Tam

கோல்கேட்டின் புத்துணர்ச்சி தரும்
பெப்பர்மெண்ட் சுவை உங்களுக்கு விருப்பமானது !

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka